செங்குந்த மித்திரன்

வைகாசி - ஆனி - 1932

5, 6

5

JL
Y592 S9m211,N28
N32.5.5-6
158899




*The Progressive Printers* *17, Coral Merchant Street, Madras*

# பொருளடக்கம்


கடவுள் வாழ்த்து ... ... ... ... 115
பத்திரிகாசிரியர் முன்னுரை ... ... ... ... ,,
தலைச்சங்கத்தின் பிரசாரம் ... ... ... ... 118
தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாடு காஞ்சிபுரம்: ... 119
தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாட்டின் கொடிக் கவி ,,
கொடியுயர்த்திய தலைவர் அவர்களது சொற்பொழிவு ... 120
திரு. ம. த. சாமிநாத முதலியார் அவர்களது சொற்பொழிவு ... 122
புதுவை பிரஞ்சு அரசாங்க அமைச்சர் சைவத் திருவாளர் ஆ. வே. முத்தைய முதலியார் பி.ஏ., பி.எல்., அவர்களுக்கு ஷை மகாநாட்டு வரவேற்புக் கழகத்தினர் உவந்தளித்த நல் வரவேற்புப் பத்திரம் .... 125
திரு. ஆ. வே. முத்தைய முதலியார் பி.ஏ., பி.எல்., அவர்கள் சொற்பொழிவு 126
திருவாரூர் சைவத் திருவாளர் தி. நா. சபாபதி முதலியார் அவர்களுக்கு ஷை மகாநாட்டு வரவேற்புக் கழகத்தினர் உவந்தளித்த நல் வரவேற்புப் பத்திரம் ... ... .... .... 128
திரு. தி. நா. சபாபதி முதலியார் அவர்களது சொற்பொழிவு ... ,,
தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது வாலிபர்மகாநாட்டு வரவேற்புத்தலைவர் திருவாளர் சா. ரா. தங்கவேல் முதலியார் அவர்கள் சொற்பெருக்கு 131
இரண்டாவது வாலிபர் மகாநாட்டைத் திறந்து வைத்த தக்கோலம் திருவாளர் அ. ரா. செல்லப்ப முதலியார் அவர்கள் சொற்பொழிவு 134
இரண்டாவது வாலிபர் மகாநாட்டுத் தலைவர் உயர் சைவத் திருவாளர் S. மீனாக்ஷிசுந்தர முதலியார் பி.ஏ., எல்.டி., அவர்களுக்கு ஷை மகாநாட்டு வரவேற்புக் கழகத்தினர் உவந்தளித்த நல் வரவேற்புப் பத்திரம் 136
உயர்திரு. S. மீனாக்ஷிசுந்தர முதலியார் பி.ஏ., எல்.டி., அவர்கள் சொற்பொழிவு 137
தலைவர்களது சரித்திரங்கள் .... 140
இரண்டாவது சமூக, வாலிப மகாநாடுகளில் நிறைவேறிய தீர்மானங்கள் 143
இரண்டாவது மகாநாடு—கண்டாரொருவர் கூற்று ... 147
செங்குந்தர் வெற்றி முரசு .... 148
மகாநாட்டு வைபவம் ... 149
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் இரண்டாவது அறிக்கைப் பத்திரம்: 152
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் வரவு செலவுக் கணக்குகள் 156
தலைச்சங்கத்தோடு இணைக்கப் பெற்றுள்ள கிளைச்சங்கங்களின் ஜாபிதா 157
தலைச்சங்கத்தோடு இணைக்கப் பெறாத சங்கங்கள் ... 159
செங்குந்தர் கல்வி நிதி : காப்பாளர் சபையின் இரண்டாவது கூட்டம்.... ,,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மூன்றாவது பொதுக் கூட்டம் 160


---







தலைவர்களும் ஜனங்களும் மகாநாட்டுப் பந்தல் நிருமாணிக்கப்பட்டிருந்த கச்சபேசுரர் ஆலயத்துட் செல்லல்



மகாநாட்டுக் கொடியேற்று விழா



மகாநாட்டில் எடுத்த தலைவர்கள் படம்



தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாட்டுத் தொண்டர்படை

# செங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் :—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

தொகுதி—௫] பிரஜோற்பத்தி வருஷம், வைகாசி, ஆனி மாதங்கள் [பகுதி—௫,

## கடவுள் வாழ்த்து

பாரொடு விண்ணாய்ப் பரந்தவெம் பரனே பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகே னார்க்கெடுத் துரைப்பேன் ஆண்டநீ யருளிலை யானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய் வருகவென் றருள்புரி யாயே.

## பத்திரிகாசிரியர் முன்னுரை

மகாநாட்டுக்குப் பின்வரும் 'மித்திரன்' மகாநாட்டு விஷயங்களைப் பற்றியே அதனைக் கண்டனுபவித்தோரிடமும் காணாதாரிடமும் அளவளாவுவானென அன்பர்க ளெதிர்பார்ப்பார்க ளாகையால், அவன் தன்னாலானவரை அவ்வைபவத்தைப் பற்றிய விஷயங்களைத் திரட்டிக்கொண்டு வருகிறான். அவன் வருவதற்குக் காலதாமதமானதும் அதனாலேயே.

நம் சமூகத்தின் இரண்டாவது மகாநாடு வெகு சம்பிரமமாகவே நடைபெற்றதெனக் கண்டோரும் அது பற்றிக் கேட்டோரும் அறிவர். பொதுவாக, நாம் எதிர்பார்த்ததினும் பன் மடங்கு அதிக சிறப்பாகவே அது நடந்தேறியது. முதல் மகாநாடு நடந்த ஒரு வருடத்துக் குள்ளேயே இரண்டாவதைக் கூட்டவேண்டுமென்னும் அவா நங்குல மக்களனைவர்க்கும், சிறப்பாகச் செங்கற்பட்டு ஜில்லாவாசிகட்கும், இருந்ததாயினும், வியாபாரக் குறைவு முதலிய சந்தர்ப்பங்களால் அதைக் கூட்டுவதற்கு இரண்டு வருடங்கட்கு மேலும் ஆய்விட்டது. ஆயினும் அது நடந்தேறிய முறை கால தாமதத்தால் ஏற்பட்ட குறைக்குப் பரிகாரமாற்றும் என நம்புகிறோம்.

மகாநாட்டின் நடைமுறையைத் தொடக்க முதல் முடிவு வரை விளக்கிக் கூறுவது இங்கு அவசியமாகின்றது. செங்கற்பட்டு ஜில்லாவாசிகள் இரண்டாவது மகாநாட்டைக் கூட்ட வேண்டுமென்று ஈரோடு மகாநாட்டின்பின் முடிவு செய்த பிறகு அந்த ஜில்லாக்காரர்களும் ஆர்வத்தோடே அதற்காக உழைக்கத் தலைப்பட்டார்கள். வரவேற்புக் கழகம் நிறுமாணிக்கப்பட்டு அதன் கூட்டங்களும் பல நிகழ்ந்தன. ஆயினும் வசூல் முதலியவைகட்குத் தலைச்சங்கத்தின் உதவி இன்றியமையாததாயிருந்தது. ஆகவே, தலைச்சங்கத்துப் பிரதிநிதிகளாகத் திருவாளர்கள் மா. பா. கனகசபை முதலியார், பி. செ. மாணிக்கவாசக முதலியார், தி. அ. சண்முக முதலியார், மா. பா. கந்தசாமி முதலியார், பி.எ., பி.இ., முதலியோர் இவ்விஷயத்தில் பெருச்சமெடுத்துக்கொண்டு தீவிரமாக உழைக்க ஆரம்பித்தார்கள். மகாநாட்டு முடிவு வரையிலும் ஊக்கங் குன்றாதும், ஓய்வு நாடாதும், சலிப்பு கொள்ளாதும், தன்னலங்கருதாதும் உழைத்த இக்கனவான்களது நன்றியினைச் செங்குந்த உலகம் என்றும் மறக்க முடியாது.

தாங்கள் மேற்கொண்ட பணியைச் செவ்வனே நிறைவேற்ற வேண்டுமென்னும் ஒரே நோக்கத்துடன் சமூகத் தொண்டாற்றிய, காஞ்சிவாசிகளைப் பற்றியும் கூறாதிருக்க வியலாது. மகா

-ரு முன் சுமார் மூன்று நாட்களில் அவர்கள் செய்த காரியங்களே அவர்களது ஆற்றலையும் ஊக்கத்தையும் நன்கு விளக்கும். மூன்று நாட்களுக்கு முன்னர்தான் திடீரென ஒரு பேருக்கம் அவர்களிடைக் கிளைத்ததாயினும், ஆகாரம், வசதி, ஓய்வு முதலியவற்றைப்பற்றிய யோசனையேயின்றி, உண்மையிலேயே மெய்வருத்தம் பாராதும், கண்துஞ்சாதும், தீமை மேற்கொள்ளாதும், மகாநாடென்னும் திவ்விய கருமமே கண்ணாகி உழைத்த சில தலைவர்களது பிரயாசையால் பந்தல், சாப்பாட்டு ஏற்பாடு முதலிய எல்லாக் காரியங்களும் மந்திர வித்தையான் நிறைவேறியது போலும் மிகச் சொற்ப காலத்துக்குள் வெகு ஒழுங்காக அமைக்கப்பட்டது வெளி ஜில்லாவாசிகள் பலருள்ளத்தில் ஆச்சரியத்தையே உண்டுபண்ணிற்று. சுருங்கக்கூறின், அவர்கள் தாய்நாட்டாரென்னும் பெற்றியைக் கைநழுவ விடாது அதற்கேற்பவே நடந்து பெருமை பூண்டார்கள்.

இனி, மகாநாட்டு நிகழ்ச்சி முறையை வரிசைக் கிரமமாக விவரிப்போம். மேமீ 16-ஆம் தேதி சனிக்கிழமை காலை காஞ்சிபுரம் இரயில்வே ஸ்டேஷனில் தலைவர்களையும் வெளியூர்களிலிருந்து வரவேண்டிய நங்குலத்து இதர பிரமுகர்களையும் எதிர்பார்த்து மக்கள் பெருந்திரளாகக் குழுமியிருந்தனர். முதல் வண்டியில் தலைவர்கள் சபாபதி வள்ளலாரும் மீனாக்ஷிசுந்தர முதலியாரும் சில பிரமுகர்களுடன் வந்தனர். அவர்களுடனேயே திருவாரூர் நகர பரிபாலன சபைத் தலைவர் பாவா கோபாலசாமி முதலியார் அவர்களும் வந்தனர். அவர்களனைவரையும் ம. சண்முகசுந்தர முதலியார் வரவேற்று உடனே அவரவர்க்கு ஏற்படுத்தியிருந்த விடுதிக்குக் கொண்டுபோனார். பின் வண்டியில் பின்னும் சில பிரமுகர்கள் வந்திறங்னர். அவர்களும் பிளாட்பாரத்தில் ஒழுங்காக நின்று காத்திருந்த தொண்டர்களால் ஜில்லாவாரியாக விடுதிகட்கு அழைத்துச்செல்லப்பட்டனர். பிறகு வரவேற்புச் சபைத் தலைவர்கள் மகாநாட்டுத் தலைவர்களை அவர்கள் விடுதியில் எதிர்கொண்டு இரயிலடிக்கு அழைந்துவந்தனர். தலைவர்களெல்லாம் ஒருவரோடொருவர் அளவளாவிய பிறகு ஊர்வலத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஊர்வலக்காட்சி மிக உன்னதமாகவே இருந்தது. அதுவே தலைவர்களது கண்ணியத்தையும், காஞ்சி வாசிகளின் ஆர்வத்தையும், நங்குல மேம்பாட்டையும், மக்கள் மகாநாட்டிற் கொண்டிருந்த பேரவாவையும் நன்கு புலப்படுத்திற்று. நங்குலத் தலைவர்களெல்லாம் நறுமண மாலைகள் சூட்டப்பெற்றனர். பிறகு அனைவரும் வரிசையாக இருந்த மோட்டார் வண்டிகளில் முறையே அமர்ந்தனர். ஊர்வலம் புறப்படுமுன் தொண்டர்கள் வரிசையாக நின்று தங்கள் தடிகளின் உதவியால் வழி வகுத்தனர். அப்படைத் தலைவர் குதிரைமீதேறி அமைதி புண்டாக்கி வந்தார். முன்புறம் சுமார் இரண்டு பர்லாங்கு தூரம் ஜனங்கள் நெருங்கி யிருந்தனர். பின்னே யிருந்த கூட்டமும் பெருவாரியானதே. கூட்டத்துக்கு முன்னே நமது குலச் சின்னங்கள் சென்றன. யானைகளிரண்டு கம்பீரமாக நடந்தன. குதிரைகளிரண்டு நடனமாடிச் சென்றன. செங்குந்தர்க்கே உரியவையான தாரை என்னும் வாத்தியமும் வேறு பல்லியங்களும் முழங்கின. கோயிற் குடைகள் சுமார் பத்து ஜதைகள் வெயிலவன் கொடுமையைத் தடுத்துப் பரந்து நின்றன. பக்கங்களில் சேவலும் புலியும் நடுவண் செங்குந்தப் படையும் திகழும் மரபுக் கொடிகள் பல உயர்ந்து பறந்தன. எங்கும் "ஜே" கோஷம் ஒரு பெருங் குதூகலத்தை எழுப்பிற்று. அக்காட்சி, நவவீரர் வழித்தோன்றல்களாகிய செங்குந்தத் தலைவர்கள் இரதங்களிலேறிக் கரி, பரி, காலாள் ஆகிய மற்ற மூவகைச் சேனைகளுடனும், போர் முழக்கத்துடனும், வீரமுரசத்துடனும் தாழ்மை, அஞ்ஞானம் முதலிய வலுத்த பகைவர்களுடன் போருக்குப் புறப்படுவதைப்போ லிருந்தது. எங்கும் மகாநாட்டுப் பேச்சே ஒலித்தது. நாவன்மை பெற்ற சிலரது ஊக்க மிகுதியால் அவர்களது வாய்கள் வழியாய்ப் பொழிந்த மனவெழுச்சியைக் காட்டும் சமயத்துக்கேற்ற பாடல்களும் குலாபிமானிகளது காதுகட்கு விருந்தளித்தன.

இவ்விதமாக ஊர்வலம் சுமார் எட்டு மணிக்கு இரயிலடி விட்டுப் புறப்பட்டு மெதுவாகச் சென்றது. தொண்டர்கள் வழி கலையாதபடி ஒழுங்காகச் சென்றனர். வழி முழுதும் அழகாக அமைக்கப்பட்டிருந்த தோரணங்கள் "செங்குந்தரெல்லாம் சீர்பெற வருக" "சகமெலாம் புகழும் சபாபதி வருக" என்பன போன்று பலவாறு தலைவர்கட்கும் மற்ற செங்குந்தர்க்கும் நல்வரவு கூறி நின்றன. ஊர்வலம் ஆட்ஸன்பேட்டை வழியே சென்று, பெரிய காஞ்சிபுரம் வழியே திரும்பிப் பின்னர் மகாநாட்டுப் பந்தலமைந்திருந்த கச்சபேசுரர் ஆலயத்தை அடைந்தது. அனைவரும் ஆலயத்தினுட் புகுந்தனர்.

அதனுள்ளே முன்புறத்தில் வானளாவிய கொடிமரம் நின்றிருந்தது. அதைச் சுற்றி வட்டமாகச் செடிகள் அலங்காரமாய் நின்றன. மக்களெல்லாம் அதைச் சூழ்ந்து நின்றனர். தலைவர்கள் தங்கட்கென அமைக்கப்பட்டிருந்த நாற்காலிகளிலமர்ந்தனர். கொடியேற்றும் பெரியார் திரு. வ. செ. செங்கோட்டையா முதலியாருக்கு நல்வரவு கூறிய பிறகு அப்பெரியார் தமது கொடியேற்று விழாச் சொற்பொழிவு ஆற்றிக் கொடியை வானில் தூக்கினார். தொண்டர்கள் கொடிப்பாட்டை ஆர்வத்துடன் பாடினர். ஜனங்களெல்லாம் "ஜே" கோஷத்திலும் கை தட்டுவதிலும் ஆழ்ந்திருந்தனர். அவ்விழாவின் புகைப்படம் எடுக்கப்பட்டபின் அனைவரும் உண்டிக்குக் கலைந்தனர்.

அன்று பகல் 2 மணிக்கு மறுப்படியும் மகாநாடு கூடிற்று. பிரமுகர்களெல்லாம் தத்தம் ஜில்லாவுக்கென வகுக்கப்பட்டிருந்த பகுதிகளிலமைதியா யமர்ந்து மகாநாட்டு நிகழ்ச்சிகளை ஆவலாய் எதிர்பார்த்திருந்தனர். தொண்டர்களாலும் வேறு சில வாலிபர்களாலும் கடவுள் வணக்கமும், தேசிய கீதங்களும், கூத்தர் துதியும், சமூக முன்னேற்றத்தைக் குறித்த கீதமும் பாடப்பட்டன. தலைவர் சபாபதி வள்ளலார் பிரேரேபிக்கப்பட்டுச் செங்குந்த மகா ஜனங்களின் ஆதரவோடு பீடத்திலமர்ந்தார். திரு. ம. த. சாமிநாத முதலியார் தலைவரையும் மற்றையோரையும் நல்லுரை கூறி வரவேற்றார். மகாநாட்டுத் திறப்புவிழாவை யாற்றுவதற்காகத் தாங்கள் வெகு ஆவலாக எதிர்பார்த்திருந்த தலைவர் ஆ. வே. முத்தையா முதலியாரவர்கள் எதிர்பாராத உடல் நலிவு காரணமாக வரத்தவரியமையால் மக்கள் அடைந்த ஏமாற்றம் அத்தலைவரது ஒப்பிலா உரைதனை ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் வாசித்த பிறகு ஒருவாறு ஆறியது. பிறகு திருவாரூர் நகர சபைத் தலைவர் பாவா கோபாலசாமி முதலியார் அவர்கள் தலைச்சங்கத்தின் வேண்டுகோட்கிணங்கித் தமது அரிய நண்பராகிய வள்ளலாரது மாக்ஷிமையை வெகுவாக எடுத்துக்கூறி, பெருங்கர கோஷத்தினிடையே திருவாரூரிடை யவதரித்த அத்தியாக மூர்த்தியின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார். பிறகு வரவேற்புக் கழகத்தினர் தலைவராகிய வள்ளலாருக்கு நல்வரவேற்புப் பத்திரம் வாசித்துத் தந்தனர். தலைவர் எழுந்து அதற்குப் பதிலளித்துப் பின்னர் தமது தலைமைப் பேருரையைப் பொழிந்தார். இத்துடன் சமூக மகாநாடு முடிவடைந்தது.

அதன்பின் வாலிப மகாநாடு தொடங்கியது. வரவேற்புத் தலைவர் திரு. சா. ரா. தங்கவேல் முதலியார் தமது சொற்பொழிவை யாற்ற, திரு. அ. ரா. செல்லப்பா முதலியார் அவர்கள் ஆர்வமும் ஊக்கமும், வாலிப மிடுக்கும் பொதிந்த தமது உரையை ஆற்றி வாலிப மகாநாட்டைத் திறந்து வைத்தார். பிறகு வாலிப மகாநாட்டுத் தலைவர் திருவாளர் S. மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்கள் பிரேரேபிக்கப்பட்டு ஏகமனதான ஆமோதிப்புடன் ஆசனத்தமர்ந்தார். வரவேற்புக் கழகத்தினரும் தலைவருக்கு நல்வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தனர். தலைவர் அதற்குப் பதிலளித்தபின் வாலிபர்க்கு இன்றியமையாத புத்திமதிகள் பொலியும் தமது சொற்பொழிவை வெகு கம்பீரமாக நிகழ்த்தித் தாமே சிறந்த வாலிபச் சிங்கமென்பதை நிலைநாட்டினார். வாலிப மகாநாடு முடிந்தது. ஜனங்களும் கலைந்து இரவு உண்டிக்குச் சென்றனர்.

இரவு சுமார் 9 மணிக்கு விஷயாலோசனைக் கூட்டம் பந்தலிலேயே கூடிற்று. அதன்கண் மறுநாள் கொண்டுவர வேண்டிய தீர்மானங்கள் ஜில்லாவுக்குப் பத்துப் பேர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் ஆலோசிக்கப்பட்டன. கூட்டம் சுமார் 2 மணிக்குக் கலைந்தது.

இரண்டாம் நாள் (17-ஆந் தேதி) காலை கல்வி நிதிக் கூட்டம் ஆலய மண்டபத்தில் நடந்தது. அதில் எல்லா ஜில்லாப் பிரதிநிதிகளும் அமர்ந்து ஆலோசித்தனர். அதன் பயனாக, முடிவில் நன்கொடையாகச் சுமார் ரூ. 4500-க்குக் கையொப்பங்க ளிடப்பட்டன.

அது முடிந்தவுடன் மகாநாடு மறுமுறை தொடங்கிற்று. சமய முன்னேற்றம், தேசியம் முதலியவற்றைப் பற்றிய விஷயங்களை யொட்டிய தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. பல பெரியோர்கள் தத்தம் தீர்மானங்களை யொட்டி வெகு அழகாகவும் மிகுந்த ஆர்வத்தோடும் பேசினர். கொண்டுவர வேண்டிய தீர்மானங்களிற் சுமார் பாதி முடிந்தவுடன் கூட்டம் கலைந்தது. ஜனங்களெல்லாம் போஜனத்துக் கேகினர். அன்று பகல் திரு. சா. ரா. தங்கவேல் முதலியாரவர்கள் தலைவர்கட்கெல்லாம் ஒரு அறுசுவை உண்டி கூடிய நல்விருந்தளித்தனர். அஃது அவரது குலப்பற்றினையும், அவரது குடும்பத்துக்கே வழக்கமாய விருந்தோம்பலையும் தன்மையையும் அனைவற்கும் நன்கு விளக்கிற்று.

போஜனத்திற்குப் பின் ஒவ்வொரு கிளைச்சங்கமும் தேர்ந்தெடுத் தனுப்பிய பிரதிநிதிகள் பந்தலிற் குழுமினர். சுமார் 2 மணிக்குத் தலைச்சங்கத்தின் மூன்றாவது பொதுக்கூட்டம் ஆரம்பித்தது. அறிக்கைப் பத்திரம் வாசிக்கப்பட்டதன் பின்னர் சங்கத்தின் விதிகள் சில மாற்றி யமைக்கப்பட்டன. சுமார் 3 மணிக்கு அக்கூட்டம் முடிவுற்றது.

உடனே மகாநாட்டு நிகழ்ச்சி தொடர்ந்தது. அப்பொழுது மிகுதியா யிருந்த தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. எல்லாத் தீர்மானங்களும் ஏகமனதாகவே நிறைவேற்றப் பட்டதானது நமது குலத்தினர்க்குள் உள்ள குலாபிமானத்தையும், முன்னேற்ற உணர்ச்சியையும், அபிப்பிராய ஒற்றுமையையுமே காட்டுகின்றது. சமூக வாலிப மகாநாடுகளின் தலைவர்களிருவரும் மாணிக்கம் போன்ற அரிய விஷயங்கள் செறிந்த ஆர்வமான தமது முடிவுரைகளை அழுத்தமாகவும் ஊக்கத்தோடும் பொழிந்த பின், திரு. ம. த. சாமிநாத முதலியார் வரவேற்புக் கழகத்தின் சார்பாகவும், திரு. ம. சண்முகசுந்தர முதலியார் தலைச்சங்கத்தின் சார்பாகவும் தலைவர்கட்கும், வெளியூர்களிலிருந்து சிரமம் பாராது வந்து திரண்டிருந்த பிரமுகர்களுக்கும், மகாநாட்டைக் கூட்டுவதற்கு அல்லும் பகலும் உழைத்த அன்பர்களுக்கும் வந்தனோபசாரம் கூறினர். சுமார் 10¼ மணிக்கு மகாநாடு முடிவு பெற்றது.

உடனே தலைவர்களும் ஏனையோரும் அவ்வாலயத்தின்கண் எழுந்தருளியுள்ள ஸ்ரீ கச்சபேசப் பெருமானைத் தரிசிக்கச் சென்றனர். அப்பெருமானும் பாண வேடிக்கைகளுடனும், வேட்டுக்களுடனும், இன்னிசைக் கோஷத்துடனும், வெகு அலங்காரமாக வெளியிற் புறப்பட்டார். தலைவர்களும் செங்குந்த மகாஜனங்களுடன் அவரைத் தரிசித்து உள்ளங் குளிர்ந்து "எங்குல நாயகனே! உமது பரம்பரையிற் றோன்றிய யாங்கள் உமக்குகந்த தொண்டாகிய மக்கள் முன்னேறறத் தொண்டுக்கு அடிகோலிவிட்டு, உமது அருள் நாடி உம்மையே தொடருகின்றோம்" என்பாங்கு அக்கருணையங்கடல் முன்னரே நடந்தனர்.

158899

பிறகு தலைவர்கள் பிரிந்து குடைகளும் சின்னங்களும் சூழக் குதூகலத்துடனே சென்று திரு. தங்கவேல் முதலியார் இல்லத்தை யடைந்தனர். அங்குத் தலைவர்கள் சிறிது தங்கி அளவளாவினர். பிரிவுபசாரங்களும் வெகு இனிமையாகவும், மகாநாட்டு நிகழ்ச்சியா லேற்பட்ட மகிழ்ச்சியும், பிரிவினால் ஏற்பட்ட வருத்தமும் குழம்பித் ததும்புங் குரலுடனும் கூறப்பட்டன. பின்பு தலைவர்களெல்லாம் ஒருவாறு தேறி மறுநாட் காலை தத்தம் ஊருக்கேகுவதற்காகப் பிரிந்தனர்.

இந்த மகாநாட்டு வைபவமானது அடுத்த மகாநாடுகளையும் விரைவிற் கூட்டவேண்டு மென்னும் அவாவை மக்கள் மனதிற் புகுத்திற்று. அதற்கேற்ப, மூன்றாவது மகாநாடு சென்னையிற் கூட்டப்பட வேண்டுமென்றும், அதற்குப் பொருளுதவியாக ஒவ்வொரு ஜில்லாச் செங்குந்தரும் தங்கள் ஜில்லாவுக்காக 100 ரூபாய்க்குக் குறையாது வழங்க வேண்டு மென்றும், அதற்கடுத்த (நான்காவது) மகா நாட்டைத் தஞ்சை ஜில்லா வாசிகள் கூட்ட வேண்டு மென்றும் தலைவர்கள் ஒன்றுபட்டுத் தீர்மானித்தனர். அவ்விரண்டு மகாநாடுகளும் வெகு விரைவில் சம்பிரமமாகவே தீர்மானித்தபடி நடைபெறுமென எதிர்பார்க்கின்றோம். அன்பர்களது முயற்சி முற்படுவதாக! அன்பர்க்கருள்வான் அருளும் துணை நிற்பதாக!!

---

## தலைச் சங்கத்தின் பிரசாரம்

தலைச் சங்கத்தின் சார்பில் பிரசாரஞ் செய்யவும் மித்திரனுக்குப் பாக்கியாகக் குவிந்துள்ள சந்தாத் தொகைகளை வசூலிக்கவும் கீழ்க்கண்ட கனவான்கள் சுற்றுப் பிரயாணஞ் செய்துகொண் டிருக்கின்றனர்:

திரு. இ. அ. சண்முக முதலியார்—மதுரை இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சி, கோயம்புத்தூர், [illegible], சேலம் ஜில்லாக்கள்.

திரு. கல்லாலம்பூண்டி தமிழ்ப் புலவர் குமரகுரு முதலியார்—தென்னார்க்காடு ஜில்லா, பிரெஞ்சு இந்தியா.

திரு. பிள்ளையார் பாளையம் காளி சண்முக முதலியார்—சித்தூர் செங்கல்பட்டு ஜில்லாக்கள்.

திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார், வடஆற்காடு ஜில்லா.

அவர்களுக்கு உதவியாக இருந்து சந்தா பாக்கிகளை வசூலித்துத் தருமாறு அன்பர்களை வேண்டுகின்றோம். (ம. ச.)

---

## நன்கொடை வரவு 20—6—31.

(1) பிரமோதூத௵ தை௴ 22௳ புலிசை ஞானியார் சுவாமிகள் சிவகிரிமடாலயம் அடியாருள் ஒருவரான சதா தில்லைநாத சுவாமிகள் சங்கத்திற்கு மனமுவந்து அளித்த நன்கொடை அணா 0—4—0

(2) பிரமோதூத௵ தை௴ 27௳ கல்லாலம் பூண்டி ச. நா. குமரகுரு முதலியார் குமாரன், திருவளர் செல்வன் [illegible]மச்சிவாயனுக்கு வித்தியாரம்ப முகூர்த்த காலத்து தலைச் சங்கத்திற்கு அளித்த நன்கொடை அணா 0—4—0.

(3) சென்னப்ப நாயக்கன் பாளையம், நடுத்தெரு, கோ. வைத்தியலிங்க முதலியார் குமாரர் திரு. அப்பாவு முதலியாருக்கும், புதுவை முத்தியாலுப்பேட்டை அடுத்த ராமசெட்டிபேட்டை மாரியம்மன் கோயில் தெரு, ம-௱-௱-ஸ்ரீ, ம. குப்புசாமி முதலியார் குமாரத்தி திருவளர் செல்வி ஞானம்பாளுக்கும் பிரசோற்பத்தி௵ வைகாசி௴ 27௳ நடந்தேறிய திருமண முகூர்த்த காலத்தில் தலைச்சங்கத்திற்கு நன்கொடையாக அளித்த அணா 0—8—0.

---

## காஞ்சிபுரம் செங்குந்தர் பாடசாலைக் கட்டிட தர்மநிதிச் சீட்டு.

சீட்டுக்கள் வேண்டிய அளவு விற்று வேண்டியதொகை இன்னும் சேராததாலும், வெளியூர்க்கனுப்பப்பட்ட சீட்டுப் புத்தகங்கள் இன்னும் விற்கப்பட்டு வந்து சேராததாலும், தேதியைத் தள்ளி வைப்பது நலமெனப் பலர் அபிப்பிராயப் படுவதாலும் இந்தச் சீட்டின் குலுக்கும் (பிரைஸ் எடுக்கும்) தேதி பிரசோற்பத்தி௵ வைகாசி௴ 32௳ (14-6-31) யிலிருந்து பிரசோற்பத்தி௵ புரட்டாசி௴ 25௳ (11-10-31) க்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

சீட்டுப் புத்தகங்கள் வேண்டுவோர், "காரியதரிசி செங்குந்தர் பாடசாலைக் கட்டிட தர்ம நிதிச் சீட்டு நிலையம், பிள்ளையார் பாளையம் காஞ்சிபுரம்" என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

சி. அருணாசலம், காரியதரிசி.



## தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாடு காஞ்சீபுரம் 1931.

கொடியுயர்த்திய பெரியார் சைவத் திருவாளர்

### வா. செ. செங்கோட்டையா முதலியார் அவர்களுக்கு

ஷை மகாநாட்டு வரவேற்புக் கழகத்தினர் உவந்தளித்த

### நல்வரவேற்புப் பத்திரம்.

புண்ணிய சீலமுந் திண்ணிய கல்வியும்
நுண்ணிய அறிவும் நண்ணிய செம்மல்!

வருக வருக, பெரியோய் வருக,
பெருக இக்காஞ்சியும் பெருஞ்சீர் நின்னால்!

ஈரோட்டிற் கூடிய நம்மவர் முதலாவது மகாநாட்டு வரவேற்புக் கழகத்தலைவரா யமர்ந்து இயற்கையினமைந்தபேருக்கம் காரணமாக முதலாவது மகாநாட்டைச் சிறப்புற நடாத்திப் பல்லாயிர மக்களைப் பரமானந்த முறச்செய்த தாங்கள், இந்நகர் இரண்டாவது மகாநாட்டுக் கொடியேற்று விழாவாற்ற எங்கள் வேண்டுகோட்கிணங்கி விஜயஞ் செய்தமைக்குக் கரையிலாக் களிப்பெய்துகின்றோம்.

பரோபகாரச் சிரோமணிக் குரிசில்!!

சமூகத்தொண்டே தக்கதெனக் கொண்டு நங்குல மாணவர்களுக்குப் பெரும் பொருளுதவி செய்து அவர்களைக் கல்வியிலும், நல்லொழுக்கத்திலும் மேம்பாடுறச் செய்துவரும் தங்கள் வள்ளன்மையைப் பெரிதும் புகழ்ந்து மெச்சுகின்றோம்.

செங்குந்த குலத்துத் திருமணி விளக்கே!!!

தங்களுக்குள்ள எவ்வளவோ வேலைகளையும் நோக்காது, சிரமம்பாராது இங்கு விஜயஞ்செய்து எங்களை மகிழ்வித்தமைக்கு நாங்கள் யாதியற்ற வல்லோம். தாங்கள் குமரவேளருளால் எல்லாப் பெருநலங்களையும் மேன்மேலடைந்து நீடூழி வாழ வேண்டுமாக அன்னான் விரைமலரடிகளை விரும்பி வாழ்த்துகின்றோம்.

நலம்! நலம்!! நலம்!!!

குந்தர் குலக்கோடி துவலயத் தோங்குக!

காஞ்சீபுரம்,
16—5—1931.

இங்ஙனம்,
வரவேற்புக் கழகத்தினர்.

## தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாட்டின் கோடிக் கவி.

செங்குந்தர் தங்கொடிக் காட்சி—மிகச்
சிறந்தது சேவலும் புலியுநற் சாட்சி.

மங்கள காமாட்சி யம்மை—உமை
மலரடிச் சிலம்பினில் வந்தவர் செம்மை
தங்கிய மாநவ வீரர்—இந்தச்
சகம்புகழ் சண்முகன் சோதரநீர் (செங்

வல்லானை வென்றுமேம் பட்டோர்—அவர்
மனைவிக்கு மாங்கல்ய பிச்சைதந் திட்டோர்
வில்லாரு முசகுந்தன் வேண்டப்—பகை
வென்றவன் சேனைத் தலைவரா யாண்ட (செங்

சித்திர வல்லிகைக் கிள்ளை—களவு
செய்ததா லேநம ஞட்டினைக் கொள்ளை
மெத்தச்செய் தன்னவன் றந்த—பச்சை
மென்கிளி தன்னைக்கண் டுள்ள முவந்த (செங்

ஆயிரத் தெட்டுச் சிரங்கள்—வெட்டி
ஆசனப் பாவாடை யிட்டவுதி ரங்கள்
பாயவ தன்மீதி லொட்டக்—கூத்தர்
பாடிய ஈட்டி யெழுபது நட்ட (செங்

தாரிற் கடம்பணி தோளர்—மிக்க
சன்மார்க்க முற்றபெ ருந்தய வாளர்
பாரிற்பத் தொன்பது நூற்றுப்—பேர்கள்
பரவிய காஞ்சிம காநாட்டி லேற்றும் (செங்

இன்னிய வீரோட்டு நாட்டு—வர
வேற்றவர் பொதுநல மியற்றவோர் வேட்டு
சென்னி மலைப்பதி போற்றும்—அங்கத்
திறங்கொள்செங் கோட்டைய செல்வரிங் கேற்றும் (செங்

# கொடியுயர்த்திய தலைவர் அவர்களது சொற்பொழிவு

பெரியோர்களே!
செங்குந்த குலப் பிரமுகர்களே!!
சகோதர சகோதரிகளே!!!

இப்போது நமது பெருமை பொருந்திய கொடியினை உயர்த்தும் மஹத்தான கௌரவத்தை வரவேற்புச் சபையார் சிறியேனுக்களித்துப் பெருமைபடுத்தியதற்காக அவர்களுக்கு என்னுடைய வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இப்படிப்பட்ட பெரிய காரியத்தை நடத்துவதற்கு, நமது செங்குந்த ஜன சமூகத்திலே சிறந்த கல்வியறிவு உடையோர்களும், ஆற்றலும் அநுபவமும் உடையவரும், ஜாதி முன்னேற்றத்திற்கு அருந்தொண்டு யியற்றி வருபவருமான பல பெரியார்களிருக்க, சிறியேனாகிய என்னை இப்பெரியதொரு காரியத்தைச் செய்யுமாறு பணித்தது வரவேற்புச் சபையார் என்பால் கொண்டிருக்கும் அன்பினாலோ அல்லது, வேறு எந்தக் காரணத்தினாலோ அறியேன். ஒருகால், நமது முதலாவது மஹாநாட்டைச் சிறப்புடன் நடத்திய கொங்கு நாட்டாரே காஞ்சி மஹாநாட்டின் கொடியேற்று விழாவிற்கு உரிமை புள்ளவர்களென்ற நோக்கத்தினால் யான் இப்பணியாற்றல் வேண்டுமென்று கருதினார்கள் போலும். திறமையற்றவனாக இருப்பினும் உங்கள் கட்டளையை மறுத்தற்கு அஞ்சி, எனது கடமைகளில் இதை முக்கிய கடமையாக எண்ணி உங்களுடைய போராதரவினாலேயே இதை ஒருவாறு ஏற்றுக்கொள்ள முன்வருகிறேன்.

### நமது இரண்டாவது மகாநாடு கூடியிருக்கும் காஞ்சி நாட்டின் சிறப்பும், முக்கியமும்.

பெரியோர்களே!

நாம் இப்போது கூடியிருக்கும் இந்த ஸ்தலத்தின் பெருமையை எடுத்து இயம்புவது மிகவும் அவசியம். ஆனால் அது சாமானியமன்று. "முத்தியளிக்கும் சப்த நகரங்களில் முக்கியமாம் கச்சி" என்றும் "நகரேஷு காஞ்சி" என்றும் பெரியோர்கள் கூறியிருக்கின்றனர். இது சோழ பல்லவ அரசர்களுக்குத் தலைநகராக விளங்கியிருந்த இடம். சிவன் விஷ்ணு என்ற இரு மூர்த்திகளும் எழுந்தருளியிருக்கும் புண்ணிய க்ஷேத்திரம். நாயன்மார்களால் சிறப்பாகப் பாடப் பெற்ற ஸ்தலம். ஸ்தல தேவியான ஸ்ரீ காமாக்ஷியம்மையின் மகிமைப் பிரதாபத்தை அறியாதவரும் உளரோ? அத்துடன் நம்மவர்களுக்குக் குலதெய்வமும் காமாக்ஷியம்மனேயாகும்.

இதுமட்டுமா? இந்நகரமே நம் குலமக்கள் தொன்று தொட்டுத் தலைநாடு என்று மிகப்போற்றி வருவது. மாக்ஷிமையுடைய இந்த முத்தி நகரத்தை நம்மவர் மட்டுமென்றி மற்றைய வகுப்பினரும் தங்கள் தங்களுக்குத் தலைநாடு என்றே செப்பேடு, கல்வெட்டு முதலியவற்றுள் வரைந்து வைத்துக்கொண்டிருக்கின்றனர். நம் இனத்தவர் ஆயிரம் வருடங்களுக்கு முன்னரே தொழில், வியாபாரம், பொருளாதார விருத்தி முதலிய கருத்துக்களுடன் பற்பல இடங்களுக்குச் சென்று ஆங்காங்குக் குடியேறி நிலைத்து விட்டனர். அங்ஙனம் குடியேறினவர்கள் எழுபத்திரண்டு நாடுகளில் வசிப்பாராயினர். ஒவ்வொரு நாட்டிற்கும் பல கிராமங்கள் என்ற பிரிவுகள் ஏற்பட்டன. கீழ்நாடு, மேல்நாடு, வடநாடு, தென்னாடு முதலிய இடங்களில் கூட்டங் கூட்டமாக அங்கங்கே வேண்டிய சௌகரியங்களோடு நிலை பெற்றிருந்தாலும், கடைசியாக விசாரித்தால் காஞ்சீபுரம் என்ற நகரந்தான் அனைவருக்கும் தாயகமாக முடியும். வேறாகக் கூறவே முடியாது. இவ்விஷயம் ஸ்ரீ காமகோடி பீட மந்திரத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றது. நம்மக்கள் வெகுகாலம் வரை தங்கள் தலைநாட்டைத் தாய் நாட்டை, இக்கச்சியம்பதியை மறக்கவில்லை. இங்கே வருவதும் போவதும் இங்குள்ள நம் ஆதித்தலைவர் ஆண்டவர் என்ற பட்டப்பெயர் வகித்தவரைச் சிறப்பித்துச் செல்வதும் வழக்கம். வருடங்கள் பல செல்ல, ஆங்காங்குக் குடியேறிய செங்குந்தர்கள் அந்தந்த இடத்திற்கு ஒத்த வழக்கங்களையும் ஆசாரங்களையும் சடங்குகளையும் கைக்கொண்டு விட்டதாலும் காஞ்சி நாட்டின் செங்குந்தத் தலைவர்கள் காலம் நிலைமை முதலியன மாறுபட்டதினாலும் நம் குலத்தினரின் தொடர்பு விடப்பட்டது. நம்முடைய உறவையும் நிலைமையையும் சற்றுமறியாது உறங்கும் தன்மையை நாம் மேற்கொண்டோம். அதன் பயன் என்ன? உலகவேகத்தில் முன்னேற்ற முயற்சிகளில் கலவாது ஒற்றுமை குன்றி, ஊக்கம் தளர்ந்து, வலிமை யிழந்து, வறுமை யடைந்து பலராலும், அரசாங்கத்தாராலும் (Backward Class) என்ற பட்டப்பெயரையும் பெற்றோம். என்னே நம் உறக்கம் இருந்தவாறு!

நமது தற்காலத்தின் பயனாகச் சென்ற 1929-ம் ஆண்டில் நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் நன்முயற்சியாலும் ஈரோடு மகாநாட்டாலும் நம்மவர் தம் நிலைமை உணர்ந்து ஒன்றுபட்டு உயர்வு பெற ஊக்கம் கொண்டிருக்கின்றனர். தங்கள் தாய் நாடு காஞ்சீபுரம், தம் பூர்விக இடம் இது என்று இங்கு யாவரும் குழுமி யிருக்கின்றனர். குழந்தைமேல் பராமுகமாகத் தாய் இருந்தாலும் குழந்தை தாயையே அணுகுவதுபோல பலநாடுகளிலிருந்து நம் குலமக்கள் இத்தாய்நாடான காஞ்சியை நண்ணி யிருக்கிறார்கள். அவர்களுக்கு ஊக்கத்தையும் உண்மை புணர்ச்சியையும் கொடுக்க வேண்டியது அதன் கடமை. நம் காமாக்ஷியம்மனே அதற்கும் துணை செய்வாளென்பது நிச்சயம்.

### கோடியும் அதன் தத்துவமும்.

இப்போது நடக்கப்போகும் நமது செங்குந்தர் இரண்டாவது மகா நாட்டிற்குக் கொடியேற்றல் என்னும் இந்தச் சடங்கானது எதற்காக என்ற சங்கை யெழலாம். ஒவ்வொரு பெரிய ஸ்தலத்திலும் மகா நாட்டிலும், தேசசபையிலும் வருடந்



தோறும் முதலாவதாக நடக்கும் விசேஷம் கொடியேற்றுதலாகும். அதுவே காரியங்களுக்கு ஆரம்பமுமாகும். இந்த வழக்கம் புதிதல்ல, பண்டைக்காலம் தொட்டு கையாடி வரும் பழக்கமாகும். கோயில்களில் துவஜாரோகணம் (கொடியேற்றம்) என்பது யாவரும் கண்டு வருகிறோம். ஒவ்வொரு ஜாதிக்கும், ஒவ்வொரு தேசத்திற்கும் தனித்தனிக் கொடி உண்டு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு இலக்ஷியத்தை நோக்கத்தைக் குறிக்கிறது. நம்முடைய கொடி நம் மரபினரின் பண்டை வெற்றி ஐக்கியம், உன்னத நிலை, நாம் நிற்கவேண்டிய நிலை, முதலியவற்றைக் குறிக்கிறது. அக்கொடியைக் காப்பாற்ற நம் முயிரையும் அளிக்க நாம் தயாராக இருக்கின்றோம் என்பதனைக் கொடியேற்றம் உணர்த்தும்.

வனப்புறு மீனவலும் வாச்சேவ் வேழ்துகன்
கனப்பக லாறினிற் கலாப மேறியே
யினப்புகழ் சேவலங் கொடிதுற் கேற்றுவேஞ்
சினப்புலிக் கொடிதாச் செறிசெங் குந்தமே

நமது கொடியில் புலியும், சேவலும், குந்தமும் இருப்பதைக் காண்கிறோம். குந்தம் அல்லது அழகு பொருந்திய பளபளப்பான ஈட்டியை உமா பிராட்டியார் முருகப்பிரானுடைய சகோதரர்களாகிய வீரவாகுதேவர் முதலான நவவீரர்களுக்குக் கொடுத்தருளினார். குந்தத்தின் இருபுறங்களிலும் சேவலின் உருவமும், வேங்கையின் உருவமும் அமைக்கப்பட்டிருக்கிறது எதற்காக என்பதை ஆராய்வோம். நமது சண்முகப்பெருமான் தம் சகோதரர்களான வீரவாகு தேவர் முதலான லட்சத்து ஒன்பது வீரர்களுடன் வீராதி வீரனான சூரபத்மனோடு ஆறு நாட்கள் வரையில் பெரும் போர்புரிந்து அவனுடைய சேனை சைன்யங்களை யெல்லாம் கொன்ற பிறகு சூரபத்மனானவன் கடலில் தலைகீழாக மாமர உருவங்கொள்ள, அதை வேலினால் இருபிளவாக்க, அவ்விருபிளவும் மயிலும் கோழியுமாய்வர, அம்மயிலை வாகனமாக ஏறிக் கோழியைக் கொடியாக தம் கையில் தாங்கிச் சூரபத்மனுடைய புலிக்கொடியைக் கொடுக்க, செங்குந்த வீரர்கள் அதைப் பெற்றனர். ஆகையினாலே நமது முருகப்பிரானது சகோதரர்களான வீரவாகு தேவர்களுக்கும் முறையே உரிமையுள்ள சேவல்கொடியும், புலிக்கொடியும் அவர்கள் பரம்பரையிலே தோன்றிய நம்மவர்களுக்குச் சொந்தமானது பற்றியே பெரியோர்கள், சேவலின் உருவத்தையும் வேங்கையின் உருவத்தையும் இக்கொடியில் வரைந்திருக்கிறார்கள்.

நமது கொடி நமது முருகவேளுடைய சேவலையும், சூரனைச் சம்மரித்த காலத்தில் நாம் அடைந்த புலியையும், நம்முடைய வெற்றிக்குக் காரணமான குந்தத்தையும் கொண்டது. சூரன் அக்கிரமத்திற்கு ஓர் உறைவிடம். அவனைச் சம்மரித்தவர் அன்பிற்கும், அறிவிற்கும், அழகிற்கும் உறைவிடமான முருகவேள். அவருக்குத் துணையாக நம் மூதாதையர் நின்றார்கள். இதிலிருந்து நாம் உணரக்கிடப்பது என்? நீதிக்குத் துணையாகவும், அநீதிக்கு எதிராகவும், நின்று போர் செய்தவர்கள் நம்முன்னோர். *எமனும் கண்டு நடுங்கும் அக்குந்தத்தைக் கையில் கொண்ட நவவீரர்கள் வழியில் சென்று அக்கிரமங்களைக் கண்டித்துச் சீர்படுத்தவேண்டும். நீதியை நிலைநிறுத்துவதற்குக் கொஞ்சமும் அஞ்சவேண்டுவதில்லை. நீதிக்கு முருகவேள் துணை எப்போதும் உண்டு என்பதையே நம் கொடி குறிக்கின்றது நம் கொடியின் உண்மையை உணர்ந்த நாம் அதன்படி நடக்க இப்போதே உறுதி செய்துகொண்டோம் என்பதற்கு அடையாளமாகவே இப்போது இதை ஆகாயத்தில் அளாவிப் பறந்து நம்முடைய உறுதியை எல்லோருக்கும் தெரிவிக்கும் வண்ணம் உயர்த்துவோமாக!

நம் கொடி நம் குலமக்கள் அனைவருக்கும் சுதந்தரமானது. ஒவ்வொருவரும் அது ஜெயத்துடன் ஆகாயத்தை அளாவிப் பறக்கும்படிப் பாதுகாத்தால்தான் வீரர்களாவோம். அங்ஙனமில்லையெனில் நாம் செங்குந்த வீரர்களல்ல. ஒருதேசத்தின் கொடி மற்றொரு தேசத்தாரால் பிடுங்கப்பட்டது அல்லது கீழே வீழ்த்தப்பட்டது என்று சொன்னால் அக்கொடி யிழந்த தேசம் தோல்வியுற்றது அடிமைப்பட்டது என்பது அர்த்தம். நமது நாட்டை ஆளுவோர் ஐக்கியக்கொடியைத் (Union Jack) தங்கள் ராணுவஸ்தலங்களில் அதிக உயரத்தில் பறக்கவிட்டு அதைக்காப்பதற்காக அதனருகில் நூற்றுக் கணக்கான வீரர்கள் இருக்கும் வண்ணம் ஆக்ஞாபித்திருத்தலை கண்கூடாக நாம் காணலாம். அக்கொடியைப் பிறனொருவன் எடுத்துச் செல்லும்படி விடுகிறவர்களைக் கொன்று விடுவதல்லாமல் தங்கள் உயிரைக் கொடுத்தாவது வீரர்கள் தங்கள் கொடியை மீட்பார்கள். அங்ஙனமே நமது கொடியை நாம் பாதுகாக்க வேண்டும்.

நமது கொடியை உண்மையில் பாதுகாக்கும் விதம் அக்கொடி நமக்கு உணர்த்தும் உண்மையினைத் தெரிந்து அதன்படி ஒழுக முயல்வதேயாகும். எப்படிக் காஞ்சீபுரம் தாயகம் அல்லது தலைநாடு என்று நம் எல்லோரையும், 72-நாட்டுச் செங்குந்தர்களையும், ஒருங்கு சேர்த்து ஒற்றுமைப்படுத்துகின்றதோ, அதே போல் இக்கொடி, நம் பொதுவான உன்னத லக்ஷியத்தை, நோக்கத்தை,

---

* எமனும் கண்டு நடுங்கும் என்பதற்கு:—
வீரவாகு தேவரின் புதல்வியும், முசுகுந்தச் சக்ரவர்த்தியின் பத்தினியுமான சித்திரவல்லி யம்மையாருக்கு இந்திராணியால் பரிசளிக்கப்பட்ட கிள்ளையை எமதர்மனுடைய மனையாள் தூதர் மூலம் களவாக எடுத்துச்செல்ல, இதைத்தன் புத்திரியாலறிந்த வீரவாகு தேவர் கிள்ளையைப் பெற்று வரும்படித் தன் தூதரை அனுப்ப, எமதர்மன் கொடாததால், நவவீரர்கள் வெகுண்டு அந்த அக்கிரமத்தைத் தண்டித்து நீதியை நிலை நிறுத்துவதற்காகச் சக்தியால் கொடுக்கப்பட்ட சத்தியையுடைய குந்தத்தோடு எமபுரம் சென்று சமர் புரிந்தனர். தோல்வியுற்ற எமன் அவர்களை உபசரித்துக் கிள்ளையைக் கொடுத்து வழியனுப்பினார். இதனால் குந்தத்தின் சக்தியும், சிறப்பும் விளங்குகின்றது

நம்முன் எப்போதும் காண்பித்து, நமக்கு ஊக்கத்தையும், அறிவையும், ஒற்றுமையையும் கொடுக்கும். நமது நவவீரர்களுடைய அற்புதத் திறமைகளையும், புகழையும் மட்டும் நாம் ஓதிக்கொண்டிருப்பதில் பயனில்லை; நாம் இன்று முதல் உறுதியுடன் நம் வாழ்க்கையில், நடைமுறையில், நாம் அவர் சந்ததியில் உதித்து அவர்களுடைய உண்மை வலிமையைப் பெற்றவர்கள் என்பதனைத் தெரிவிக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூறுகிறது. நமது கடமையை புணர்த்தும் நம் கொடியை நாம் வணங்குவோமாக.

இப்பெருமை பொருந்திய கொடியை உயர்த்தும் கௌரவத்தை எனக்கு அளித்து என்னைப் பெருமை படுத்திய நமது வரவேற்புச் சபையாருக்கு என் மனமார்ந்த வந்தனத்தை மறுமுறையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன் எங்கும் நிறைந்த, எல்லாம் வல்ல முருகர் நமக்குத் துணைபுரிவாராக.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

சுபம்! சுபம்!! சுபம்!!!

---

வரவேற்புக் கழகத் தலைவர்

## திருவாளர் ம. த. சாமிநாத முதலியார் அவர்களது சொற்பொழிவு

**பிரதிநிதிகளே! சகோதரிகளே! சகோதரர்களே!**

செங்கற்பட்டு ஜில்லாவாசிகளாகிய எங்களழைப்பிற் கிணங்கிப் பல ஜில்லாக்களிலிருந்தும், கொடிய வெயிலையும் பொருட் செலவையும் பிரயாணக் கஷ்டத்தையும் பொருட்படுத்தாது சமூக சேவை யொன்றனையே குறிக்கொண்டு இம்மகாநாட்டைச் சிறப்பிக்கப் போந்துள்ள உங்களனைவருக்கும் எங்கள் ஜில்லாவாசிகளின் சார்பிலும் வரவேற்புக் கழகத்தின் சார்பிலும் அளவு கடந்த அன்புடன் நல்வரவு கூறுகின்றேன். உங்கள் வரவு நஞ்சமூகத்திற்குப் புத்துயிரளித்து நமது புன்மைகளைப் போக்குவதாக.

இவ்விரண்டாவது மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க வேறு இரண்டொருவரை நாடியும் அவர்கள் பலவிடைஞ்சல்களால் மறுக்க நேர்ந்தது. கடைசியாக நமது தலைவரே தலைமை வகிக்க நேர்ந்தது எங்களுக்கு எல்லையில்லா இன்பத்தை அளிக்கின்றது. வியாபார சமூகமாகிய நமக்கு வியாபார நெருக்கடி யேற்பட்டுள்ள இவ்வேளையில் பொது நல உழைப்பும் வியாபார அனுபவமும் பெரிதுமுடைய ஒருவர் தலைமை வகிப்பது மிகவும் பொருத்தமேயாகும். அத்தகைய தலைவர்க்கு எல்லோருடைய சார்பிலும் நல்வரவு கூறுகின்றேன்.

அன்பர்களே, உலகிலுள்ள செங்குந்தரனைவரின் பிரதிநிதிகளுமடங்கிய கூட்டத்தைப் பார்க்கும் போது பல திறத்தனவாய எண்ணங்கள் உங்களை வரவேற்பான் நிற்கின்ற எனது உள்ளத்தே நிகழ்கின்றன. இவ்வெண்ணங்களெல்லாம் நம் சமூகம் என்று மேனிலையுறும் என்னும் இடையறாக் கவலையா லெழுந்தனவாம். என்னுள்ளத்திலெழும் எண்ணங்களை யெல்லாம் உங்களுக்கும் அறிவிப்பது எனது கடமையாகின்றது.

### தேச நிலையும் கல்வி நிலையும்.

முதலாவது நமது பாரதநாட்டின் நிலையை என துள்ளம் ஓர்கின்றது. ஒருகாலத்தில், தெற்கில் நம் நாடு பரந்திருந்த காலத்தில், பாரதநாடு முழுவதும் தமிழரே குடிகொண் டிருந்தனர். தமிழர் நாகரீகமும் தமிழின் நிலையும் உச்சம் பெற்றிருந்த காலம் அது. அக்காலத்தேதான் நமது சமூகமும் மிகச் சிறப்பான நிலையி லிருந்திருத்தல் வேண்டும். பல துறைகளிலும் நம்மவர் முன்னேறி யிருந்த காலம் அது. அதன்பின்னர் ஆரியர் முதலாக ஆங்கிலேயர் ஈறாக எத்தனையோ வகுப்பினர் நம் நாட்டினுட் போந்தனர்; போந்து அரசு புரிந்தனர். இவர்கள் எல்லாம் அரசுபுரிந்த காலத்தில் நாம் சீர்குலைந்தோமென்று தெரியவில்லை. ஆனால் நமக்குக் குலத் தொழிலாயுள்ள நெசவுத் தொழில் சீர்குலைந்தது பிரிட்டிஷார் காலத்திலேதான். வியாபார சமூகத்தினராகிய அவர்கள் தங்கள் நாட்டு வியாபாரிகளின் நலத்தைக் கருதி நமது நாட்டு நெசவுத் தொழிலைச் சீர்குலைத்தனர். அவர்கள் அதற்கெனக் கையாண்ட முறைகள் பல பல. அவற்றை விரித்துக் கூற இது இடனன்று. நெசவுத்தொழில் சீர்குலைந்ததிலிருந்துதான் நம்மவரும் சீர்குலைந்திருக்க வேண்டுமென்று யூகிக்க இடமிருக்கிறது. நாம் சீர்படுங் காலமும் நெசவுத் தொழில் சீர்படுங் காலத்தில்தான் என்பது கூறாமலே விளங்கும். அந்தக் காலமும் வெகு தொலைவிலில்லை என்பதை யறிய நாம் மனமகிழவேண்டும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து மேனாட்டில் விஞ்ஞான ஆராய்ச்சி மிகவும் ஒழுங்காக நடைபெற்று வருகிறது. அவ்வாராய்ச்சியின் பயனாக உலகமே புதுத்தோற்றத்தை அடைந்துவிட்டது. மின்சார கருவிகளுக்கும், நீராவிக்கப்பல்கள், ஆகாய விமானங்கள், புகைவண்டிகள் முதலிய அவ்வாராய்ச்சியின் பயனாக வந்தனவே. இவை ஏற்பட்டதிலிருந்து இங்கிலாந்து முதலிய ஐரோப்பிய நாடுகளில் தொழிற்சாலைகள் பெருகத் தலைப்பட்டன. இத்தொழிற்சாலைகள் மிகக் குறைந்த நேரத்தில் அளவிறந்த பொருள்களைச் செய்து மலைபோல் குவித்துவிடும் ஆற்றலுடையன. இப்பொருள்களை அவ்வந்நாட்டு வியாபாரிகள் கப்பல்களில் எடுத்துச் சென்று பிறநாடுகளில் விற்கத் தலைப்பட்டனர். அத்தகைய பொருள்களை உண்டுபண்ணுந் தொழிற்சாலைகளையுடைய நாடுகள் இப்பொருள்களை வாங்குமோ? இந்தியா போன்ற ஏழை நாடுகள் வாங்குமே யொழிய பிறநாடுகள் வாங்கா. பிரிட்டிஷ் வியாபாரிகள் நம் நாட்டுக் கைத்தொழில்களை நசுக்கி நம் நாட்டைத் தங்கள் பொருள்களை விற்பதற் கேற்றதோர் சந்தையாக்கிக் கொண்டனர். நாமும் நாளுக்குநாள் வறியராய்க்கொண்டே வருகிறோம். இந்நிலை இப்படியே சென்றுகொண் டிருக்குமாகில் நம்முடைய கதி அதோகதி யாய்விட்டிருக்கும். அதிருஷ்டவசமாக நம் நாட்டி லேற்பட்ட காங்கிரஸ் இயக்கமானது மகாயுத்தத்திற்குப் பிறகு இத்துறையில் முயற்சி செய்யத்தலைப்பட்டது அதன்பயனாக, இப்போது கதர் இயக்கம் தீவிரமாக நடைபெற்று வருவதன்றி அன்னிய நாட்டுத் துணி பகிஷ்காரத்தை வெற்றிபெற நடத்தப் பல முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

நம் நாட்டில் நூல் நூற்றல் அழிந்து விட்டதிலிருந்து நம்மவர் அன்னிய நாட்டு மில்நூல்களைக் கொண்டு நெய்து, ஜீவித்து வருகின்றனர். அன்னியநாட்டு மில்துணிகளோடு மில்நூல்களை நெய்து போட்டி போடுவது மிகச்சிரமமான காரியம். அன்னியநாட்டுத் துணிகள் விலை சரசமாகக் கிடைப்பதால் நம்மவர் நெய்யும் துணியை வாங்குவோரின் தொகை நாளுக்கு நாள் குறுகிக்கொண்டே வருகிறது.

நெசவுத்தொழில் சீர்குலைந்ததிலிருந்து நம் சமூகம் வறுமையை உரிமையாக்கிக் கொண்டது. நம்மவர் கல்வி கற்றல், தங்கள் தொழில்களைச் சீர்திருத்தி லாபந்தேடல் முதலிய முயற்சிகளில் தலைப்படாது வாளா விருந்துவிட்டனர். அதனால் நாம் மேலும் பிற்போக்கான ராக நேரிட்டது.

### சமூக வியக்கம்

நம் நாட்டின் வறுமையைப் போக்கிச் செல்வத்தைப் பெருக்குதல் காங்கிரசின் நோக்கமாயினும், அது செய்ய வேண்டிய வேலைகள் பல்கிக் கிடத்தலானும் பாரதநாடு மிகப் பரந்ததோர் நாடாதலானும் அது நம்மவர்களுக்கென்று தனி முயற்சிகள் செய்தல் இயலாது. பிராமணரல்லாதாரியக்கத்திற்கும் இது பொருந்தும். எனவே நம் சமூகத்திற்கெனத் தனிச் சங்கமொன்று இல்லாமற் போயின் நமது தலை கீழான நிலைமையை மாற்றிக் கொள்ள வியலாது என்பதை யறிந்தோம். நாகலிங்க முனிவர் போன்றார் சில்லாண்டுகட்கு முன்பேயே சமூக சேவையி லீடுபட்டுச் சங்கங்கள் நிறுவுதல் முதலிய செய்தாராயினும் பொதுஜன வுழைப் பின்மையால் சங்கங்கள் போதுமான வேலையைச் செய்யா துறங்க வாரம்பித்து விட்டன. பின்னர் தி. நா. சபாபதி முதலியாரும் அவரது நண்பர்களும் வாலிபர்கள் புலவர்கள் இவர்களின் ஒத்துழைப்பைக் கொண்டு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தைக் கண்டு மிகத் தீவிரமான முயற்சிகள் செய்து வருகின்றனர் என்றாலும் நாம் அடையவேண்டிய நிலையை இன்னும் அடைந்தோமில்லை. எனவே நாம் செய்த முயற்சிகள் போதாவென்பது தெளிவாகின்றது. நம் சமூகம் விரைவில் முன்னேற வேண்டுமாயின் தியாகம், இடைவிடா வுழைப்பு, தன்னலமறுப்பு, எளிமை முதலிய நறுங் குணங்கள் நிறைந்த வாலிபர்கள் தொண்டு புரிய முன் வரவேண்டும். நமது குலமாதரும் நாம் செய்யும் வேலைகளில் ஒத்துழைத்தல் வேண்டும். நம் சமூகத்தினரும் அவர்களுக்கு உதவிகளைச் செய்தல் வேண்டும். நம் சமூகத்திற்குச் செய்ய வேண்டிய வேலைகள் பலவுள்ளன.

### கல்வி

அவற்றுள் முதலாவதாகவும் முக்கியமாகவும் செய்ய வேண்டுவது கல்வித் துறையிலாகும். உலகிலுள்ள எந்தச் சமூகமும் முன்னேறி யிருப்பதற்குக் காரணம் அது கல்வித் துறையில் முன்னேறியிருப்பதே யாகும். நம்மவர் உலகின் போக்கைச் சிறிதும் கவனியாது பழைய கறுப்பனே - றப்பன் என்றிருக்கின்றனர். முன்னோர் போன துறையிலேயே போகவேண்டு மென்கின்றனர். உள்ளொழுக்கம் முதலியவற்றிற்கும் இது பொருந்தும். உலக நிலை எவ்வளவோ மாறியுள்ள விந்நிலையில் முன்னோரடிச் சுவட்டைப் பின்பற்றிக் கொண்டிருப்போமாயின் நம் நிலை என்னவாகும் என்பதை அன்பர்களே, சற்றுச் சிந்தியுங்கள். உலக நிலையினை யொரு சிறிதும் ஓராதிருத்தல் கல்வியில்லாக் குறையினாலல்லவா என்பதைக் கவனியுங்கள். எனவே நம் மக்களுக்குக் கல்வி புகட்டுவது நமது முதற் கடமை யாகின்றது. நமக்கிருக்கும் வறுமையால் நமது சிறுவர்களை மிக விளமையிலேயே நெசவுத் தொழிலில் விட்டு அவர்களைக் கல்வி கற்க வொட்டாது செய்து விடுகின்றோம். அதனாலிவர்கள் ஆயுள் வரையில் கல்வியில்லாக் குருடர்களாகி விடுகின்றனர். நமது கஷ்டங்களைச் சகித்துக் கொண்டு நமது மக்களைக் குறைந்தது 12 வயது வரையிலாயினும் கல்வி கற்க விடவேண்டும். பின்னர் 15 அல்லது 16 வரையில் தொழிற் கல்வியில் தேர்ச்சியுறச் செய்ய வேண்டும். பெண்கள் நமது சமூகத்தில் நம்மோடொத்து, தொழில்களைச் செய்யவேண்டி யிருத்தலால் அவர்களும் சாதாரணக் கல்வியோடு தொழிற் கல்வியும் பயின்றிருத்தல் அவசியமாகின்றது. பெண்களுக்கு இவ்விரண்டு வகைக் கல்வியினையும் தருதல் அவசியமென்பதை அன்பர்களுக்கு இடித்துரைக்கும் அவசியம் இராதெனக் கருதுகின்றேன்.

இப்போது நெசவுத் தொழிலிலும், நூற்கும் முறைகள் முதலியவற்றிலும் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. சாயந் தீர்த்தல் முதலியவற்றிலும் நம் நாட்டு முறைகளைத் தவிரப் புதிது புதிதான ரசாயன முறைகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அவைகளை யெல்லாம் நம்மிளைஞர்கள் உணர்ந்து தேர்ச்சி பெறும்படி செய்தல் வேண்டும். அன்னிய நாடுகளுக்குச் சென்று ஆங்குள்ள தொழிற் கலாசாலைகளில் பயிற்சிபெற வசதிகள் செய்துதரல் வேண்டும். வீண் ஆடம்பரங்களிலும் கட்சிச்சார்பிலும் செலவழிக்கும் பொருள்களை மனந்திருந்தி இத்தகைய நன்னெறிகளில் செலவழிப்பாராக.

அன்னிய நாடுகளுக்குச் சென்று பயில விரும்புவோரும் ஆராய்ச்சிகளில் தலைப்பட விரும்புவோரும் உயர்தரக் கல்வி பயிலுதல் அவசியம். உயர்தரக் கல்வி பயிலல் உத்தியோகம் பெறுதற்கே என்னும் மயக்கம் இனி வேண்டா. அரசாங்க உத்தியோகங்கள் நமக்கவசியமில்லை என்று கூறுவதாகக் கருதவேண்டா. அரசியல் துறைகளில் கருத்தைச் செலுத்தி அதைச் செம்மைப் படுத்தி நம் சமூகங்களுக்கேற்ற நன்மை செய்வோர் செய்க; ஏனையோர் நெசவு, விவசாயம் முதலிய தொழில் முறைகளிலீடுபட்டு அவற்றைப் புது முறைகளில் பயன் தரும் வழிகளில் சீர்திருத்துவாராக.

### மதுபானம்

அடுத்தபடியாக நாம் செய்யவேண்டிய வேலை நம்மவரிடைப் பரவியுள்ள மதுபானமென்னுங் கொடிய பழக்கத்தைத் தொலைப்பதாகும். இது நம்மவரை எவ்வளவு தூரம் பாழாக்கியுள்ளது என்று நினைக்கும்போது மனந் திடுக்குறும். இக்கொடிய பழக்கத்தால் நம் சமூகத்தில் எத்தனையோ குடும்பங்கள் நாசமாயின. வறுமைக்கு வித்தாகும் இக்கொடிய பழக்கத்தை ஒழிக்க நம்மாலாகும் எல்லா முயற்சிகளையும் செய்தல் வேண்டும். எல்லாவூர்களிலும் கூட்டங்கள் கூடிக் குடிப்போருக்குக் கண்டிப்பான தண்டனைகள் விதிக்கத் தீர்மானங்கள் நிறைவேற்றுதல் வேண்டும். தென்னை, பனை முதலிய மரங்களைக் கள்ளுக்கு விடாதிருக்கும்படி நம்வர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும். மதுவிலக்குப் பிரசாரகர்களைக் கொண்டும் அதனாலுண்டாகுந் தீங்குகளை நம்மவர்க்குப் புகட்டுதல் வேண்டும்.

மதுவிலக்கு வெற்றியடைய வேண்டுமானால் பெண்மக்கள் ஒத்துழைப்புப் பெரிதும் வேண்டும். தம் கணவரோ புதல்வரோ குடியர்களாயிருப்பதைத் தடுக்க எல்லா முயற்சிகளும் செய்தல் வேண்டும். உண்ணாவிரதமிருப்பது மிகச் சிறந்தது. தம் கணவரோ புதல்வரோ குடியையொழிக்கும் வரையில் உண்ணாவிரதமிருக்கவேண்டும். எவ்வளவு கஷ்டம் நேரினும் அஞ்சுதல் கூடாது. அடிகள் உதைகள் பட நேரிடினும் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு விரதமிருக்கவேண்டும். எத்தகைய கன்னெஞ்சரும் மனந்திரும்புவார்களென்பதில் ஐயமில்லை. இளஞ் சிறுவர் தம் பெற்றோர் குடியையொழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டால் இன்னும் எளிதாக முடியும். காங்கிரஸ் இயக்கத்தின் முயற்சியால் இதுவும் வெற்றியடையுமென்று நம்ப இடமிருக்கின்றது. அன்றியும் சுயராஜ்ய அரசாங்கம் ஏற்பட்டுவிடின் மதுபானம் கண்டிப்பான சட்டங்களால் ஒழிந்துவிடும். இதுவும் சமீபத்திலேயே நடக்குமென்று தற்காலச் சம்பவங்கள் சூசிப்பிக்கின்றன. அதற்குள் நம்மவர் குடியை ஒழித்துவிட்டால் நமக்குப் பெருமையுண்டாவதோடு குடிப்போரும் பிற்காலத்தில் கஷ்டப்பட நேரிடாது.

### சமூக சீர் திருத்தங்கள்

நம்மவரிடைச் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. நம்மவர் கல்வி கற்றவர்களாகி, மதுபானமும் ஒழிந்துவிட்டால் அவையெல்லாம் நன்றாக அமைந்துவிடும். புலானுணவு நம்மவரிடைப் பெருத்த வேற்றுமையைக் கற்பித்திருக்கின்றது. முருகன் அவதாரத்தோடு சம்பந்தப்பட்ட நம் மரபினர் புலானுணவை எவ்வாறு மேற்கொண்டனர் என்பது விளங்கவில்லை. மதுபானம் என்று நம்மவரிடை ஏற்பட்டதோ அன்று புலானுணவும் ஏற்பட்டிருக்கலாம் என்று யூகிக்க இடமிருக்கின்றது. புலானுணவு ஒழிந்துவிடின் நம்மவருள் வேற்றுமையே இராது. ஒற்றுமை மணங்கள் முதலிய நடைபெறுவதற்கும் சௌகரியமாயிருக்கும்.

இச்சமயத்தில் சிறு தெய்வ வழிபாட்டையும் உயிர்ப்பலியிடலையும் சிறிது கூறவேண்டியிருக்கின்றது. யாண்டும் நிறைந்து விளங்கும் இறைவன் ஒருவனே யென்பதும் அவனைப் பல்வேறு உருவங்களில் வழிபடுகின்றனர் என்பதும் அறிஞர்களின் முடிபாகும். நம் சமூகத்தினர் யாவரும் சைவத்தைச் சார்ந்தவர் ஆவர். அவர்கட்கு முழுமுதற் கடவுள் சிவபெருமானே யாவர். புறவழிபாட்டிற்குத் தூநீராட்டலும் நறும்பூக் கொய்து அருச்சித்தலும் சாலும், இதை விட்டுக் காட்டேரி, மாரியம்மன் முதலிய சிறு தெய்வ வழிபாடும் அதற்காக ஆடு, கோழிகளின் பலியும் ஏன் என்று கேட்கிறேன். ஆங்காங்கு ஏற்பட்டுள்ள சங்கங்களின் முயற்சிகளால் இவை விரைவில் ஒழியும் என எதிர்பார்க்கிறேன்.

இவையன்றியும் நம்மவரிடமுள்ள பொருளற்றவையும் வீண் செலவானவையுமான பழக்கங்களும் ஒழிக்கற்பாலனவே யாம். தனித்தனிக் குடும்பங்களிலன்றி பொதுவாகச் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் பலவுள. நம்மவருக்குள் ஒற்றுமைச் சிதைவு மிக வெளிதில் ஏற்பட்டு விடும்; கட்சிப் பிளவுகளில்லாத வூரிருத்தல் அருமை. இதற்குக் காரணமும் கல்வி யின்மையாற் போந்த அறியாமையேயாகும். கட்சிப் பிரிவுகள் பெரும்பாலும் கோயில் விவகாரங்களில்தான் உற்பத்தியாவது மரபு. ஆண்டவனை அன்பால் வழிபடுதற்குக் கோயிலமைத்தனர். போட்டி போட்டுக்கொண்டு பாணவேடிக்கைகட்கும் வாத்தியக் கச்சேரிகட்கும் மகாபிடேகங்கட்கும் பணத்தை வாரி யிறைத்துப் பெருமை பேசிக் கொள்வதற்கல்ல. நாம் நம்மை மதப் பற்றுடையோர் என்று பெருமை பாராட்டிக் கொள்ளலாமே யொழிய உண்மையான மதப்பற்று நமக்கிருக்கின்றதா? இருந்தால், நம்மவர் வறுமை நிலை புன்னி அதற்கேற்ற தொண்டுகள் செய்ய முற்படமாட்டோமா? நடமாடுங் கோயில்களுக்குத் தொண்டு புரியின் பரமன் பெரிதும் மனமுவப்பான் என்பதை யறிந்து நடப்போமாக. ஒவ்வொரு வூரிலும் பொதுப் பணங்கள் எவ்வளவோ குவிந்திருக்கின்றன. அவைகளையெல்லாம் பொது நலத்



திற்காகச் செலவழிக்காது கூத்துக்கும் வேடிக்கைகட்கும் செலவழிப்பது என்ன மடமை? இனியாயினும் நம்மவர் பொதுப் பணங்களைக் கல்வித் துறையில் செலவழிக்க முந்துவாராக.

### கூட்டுறவியக்கமும் கைத்தொழில் மேம்பாடும்.

நம்மவர்கள் கூத்து முதலியவைகட்கும் கட்சிச் சண்டைகட்கும் வரி விதித்துக்கொண்டு பணவசூல் செய்து நடத்துவார்கள்; நம்மவர் மேம்பாட்டைக் கருதிக் கூட்டுறவியக்கம் ஸ்தாபித்தற்கு ஆளுக்கு இவ்வளவு பங்கு என்று வையுங்களென்றால் ஒருக்காலும் செய்யார். இவர் இவ்வாறொழுகுதல் யார் செய்த பாவமோ அறிகிலேன். நம்மவர்க்கு இறைவன் நல்லறிவு தருவானாக.

ஒவ்வொரு வூரிலும் ஒவ்வொரு கூட்டுறவியக்கம் ஸ்தாபித்தல் வேண்டும். ஒவ்வொரு குடும்பத் தலைவரும் ரூபாய் 5 அல்லது ரூபாய் 10 பங்கு வைத்துக்கொள்ள வேண்டும். அரசாங்கமும் நமக்குப் பொருளுதவி செய்யும். இப்பொருளைக் கொண்டு நம் நாட்டில் உற்பத்தியாகும் மில்நூல், கதர் நூல் வரவழைத்தல், நெய்தற்கேற்ற கருவிகள் செய்தல் இயலாதாயின் வரவழைத்து அவற்றைச் சரச விலைக்கு விற்றல், அவ்வக்காலத்தில் விற்பனையாகும் ரகங்களை யறிந்து அவைகளை வேலைப்பாடு பொருந்த நெய்யச் செய்தல், நெசவாளிகளுக்குப் போதுமான லாபமிருக்கும்படி அவைகளை வாங்கி கிராக்கியான இடங்களில் விற்றல், வரும் லாபத்தைப் பங்குக் கேற்பப் பகிர்ந்து கொள்ளல் ஆகிய இவற்றைச் செய்ய வேண்டும். லாபத்தின் ஒரு பகுதியைப் பொதுவாக எடுத்துக் கல்வித் துறைகளில் செலவழிக்கலாம். இவ்வாறு செய்வதால் நம்முடைய துணிகள் விற்பனையாவதில் நமக்குக் கவலையும் உழைப்பும் காலச் செலவும் ஆக வேண்டுவதில்லை. நமது தொழிலும் மேம்பாடடையும். கூட்டுறவியக்கம் நமது தொழிலைக் கண்காணிப்பதால் நமக்கு அனாவசியப் போட்டியும் நஷ்டமும் ஏற்படா. நமது நெசவுக்குப் பழைய பெருமையுமேற்படும். ஆகையால் இத்துறையில் ஒவ்வொருவரும் முன்வந்து உழைப்பாராக.

கதரியக்கத்திற்காக நம்மவர் செய்யவேண்டிய கடமையிருக்கின்றது. நம்மவரில் பெண்மக்கள் பலர் வேலையில்லாது தவிக்கின்றனர். அவர்களிருக்குமிடஞ் சென்று அவர்களுக்குப் பெண் தொண்டர்கள் நூல்நூற்கக் கற்றுத் தருவாராயின் அவர்கள் நாளொன்றுக்கு ஒன்று அல்லது இரண்டணா சம்பாதித்தல் கூடும். ஒருவாறு ஜீவிப்பதற்குமியலும்.

இவ்வாறு பல துறைகளில் நாம் உழைக்கவேண்டியிருக்கிறது. இவற்றைப்பற்றி நன்கு ஆராய்ந்து என்னென்ன செய்யவேண்டுமென்பதை இம்மகாநாட்டில் முடிவு கட்டுவோமாக. நமது தலைவரும் நமக்கு வழிகாட்டுவார்.

### முடிவுரை

சகோதரிகளே, சகோதரர்களே, நாம் இனிச் செய்யவேண்டிய வேலைகள் பலவுளவாதலால் எனது சிற்றுரையை இதோடு முடித்துக் கொள்ளுகிறேன். பந்தல் வசதிகள், இட வசதிகள், உணவுகள் முதலியவற்றில் உங்களுக்குத் திருப்தியுண்டாகும்படிச்செய்ய நாங்கள் தவறிப் போயிருக்கலாம் அவற்றையெல்லாம் பொறுத்து, உடனிருந்து மகாநாட்டை நடத்தி, நல்ல முடிவுகள் கண்டு அவற்றின்படி சமூகசேவை செய்ய முற்படுவோமாக. எல்லாம் வல்ல முருகப்பெருமான் திருவருள் நிறைவதாக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

---

புதுவை பிரெஞ்சு அரசாங்க அமைச்சர் சைவத் திருவாளர்

## ஆ. வே. முத்தைய முதலியார், B.A., B.L., அவர்களுக்கு

ஷை மகாநாட்டு வரவேற்புக் கழகத்தினர் உவந்தளித்த

## நல் வரவேற்புப் பத்திரம்.

சாந்தமுஞ் சீலமுந் தனிப்பெருவாய்மையும்
ஏந்துசீர்க் கல்வியு மிணங்கிய பெரும!

பண்டைப் பெரும்புகழ்த் தொண்டைமாநாட்டில், மெச்சும் பலபுகழ்க் கச்சியம்பதியில் கூடும் தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாட்டுத் திறப்புவிழாவாற்ற எங்கள் வேண்டுகோட்கிணங்கி இசைந்தமைக்கு நாங்கள் கழி பேருவகையெய்துகின்றோம்.

நுண்ணறி வனைத்தையும் நண்ணிய வள்ளால்!

தாங்கள் உயர்தனிச் செங்குந்தப் பெருங்குலத்துதித்துக் கல்வி, அறிவு, ஒழுக்கங்களை அங்கமாகக் கொண்டிலகி நம்மனோர்க்கு அவசியமாகவும், அவசரமாகவும் வேண்டற்பாலனவாகிய வீரமொழிகளை எடுத்துரைத்துத் திருத்தஞ் செய்து வரும் பேராற்றலை நினைக்குந்தோறும் தங்களை இனிது புகழ்ந்து வாழ்த்துகின்றோம்.

ஆங்கிலர் மெச்சும் பாங்குமிக் குடையீர்!

எல்லாரிடத்தும் இன்னுரையாடல், ஆடம்பரமற்றவாழ்க்கை, பார்தநோக்கம், பேரறிவு முதலிய நற்குணங்கள் வாய்க்கப்பெற்ற தாங்கள் புதுவை அரசாங்க அமைச்சராகத் திகழ்ந்து விளங்குகின்றமையால் நமது குலத்துக்குற்ற பெரும்புகழ் காரண

மாகத் தங்கள்பால் நாங்கள் பெருமை யாராட்டிக் கொள்கின்றோம்.

ஏழைமக்கட் கிரங்கும் அண்ணல்!

தாங்கள் பரோபகாரச் சிந்தையோடு தன்னலங் கருதாது உழைத்து வருவதுபோல் இன்னும் குலத் தொண்டு புரிந்து பல்லாண்டு வாழவேண்டுமாக எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

நலம்! நலம்!! நலம்!!!

கவிச்சக்ரவர்த்தியார் கழலிணைவெல்க.

காஞ்சீபுரம்
16-5-31.

இங்ஙனம்,
வரவேற்புக் கழகத்தினர்.

## திரு. ஆ. வே. முத்தைய முதலியார் பி. ஏ., பி. எல்., அவர்கள்

சொற்பொழிவு.

சகோதரர்களே! சகோதிரிகளே!

உங்களுடைய மகாநாட்டை, செங்குந்தர் இரண்டாவது மகாநாட்டைத் திறந்துவைக்கும் பணியை எனக்கிட்ட நண்பர்கள், ஏன் இவனுக்கிந்தச் சமயத்தை யளித்தோமென எண்ணக்கூடு மென்று சந்தேகிக்கிறேன். எனது கடமையை ஆற்றுதலை எனதுரிமையாகக் கொண்டிருப்பவனாதலால் எனது மனப்போக்கை அறிஞர்களாம் உங்களுக்குத் தெரியப்படுத்தாம லிருக்க முடியவில்லை.

என்னபிப்பிராயங்களுக்கு உத்திரவாதி யான் மாத்திரமே. அவைகள் தங்களுக்குத் தப்பாகத் தோன்றினால் திரும்பவும் அவைகளைப்பற்றி ஆழ்ந்து ஆலோசனைசெய்து பின்பு வேண்டுமானால் தள்ளிவிடுங்கள். ஆனால் முன்னதாகவே உங்கள் மனதில் படிந்திருக்கும் எண்ணங்களைக்கொண்டு, விசாரியாமலே நிராகரிப்பது நியாயமல்ல வென்பதை மாத்திரம் ஞாபகப்படுத்துகிறேன்.

கடந்த முதலாவது மகாநாட்டில் யான் தலைமை வகித்தபோது, நமது குல முன்னேற்ற மடைவதானால் வாலிபர்களே தான் அடைய முடியுமென்பதாகக் குறிப்பிட்டேன். அப்படிச்சொல்லி இரண்டு வருடமாகிறதல்லவா? எல்லாம் மறந்து போயிருக்கலாம். ஆகவே அதையே இப்போதும் வேறுவகையில் வற்புறுத்துகிறேன். தேசமானாலும், நாடானாலும், குலமானாலும், குடும்பமானாலும், இவைகள், முன்னேற்றம், மேன்மை, பெருமை, உயர்வு அடைவது ஆங்குள்ள இளைஞர்களைப் பொறுத்ததே யாகும். சுருங்கக்கூறின், வருங்காலம் வாலிபர்களுடையதே. அதனால் குல முன்னேற்ற மடையவேண்டியது அக்குல இளைஞர்கள் கையிலடங்கியுள்ளது. எவ்வளவு ஊக்கம், எவ்வளவு ஒற்றுமை, எத்தனை உயரிலக்கியங்கள் உங்கள் உள்ளத்தில் புகுமோ, பதியுமோ, அதுபோலவே குலமும் சீர் பெற்றிலங்கு மென்பது திண்ணம். முக்காலும் திண்ணம்.

நம்மவர்கள் தங்களுக்குப் பெரிய புகழ்ப்பட்டமாகக் கருதுவதொன் றுண்டு. அது "செங்குந்த மக்கள் விசேஷ சமயப்பற்றுத லுடையவர்கள்" என்பதேயாகும். இதுமெய்யான புகழ்ப்பட்டமோ? அன்றி இச்சகமொழிகளோ? என்று நிதானியுங்கள். இந்தச் சமயப்பற்றினாலே நம் குலம் கீழுக்குக் கீழாகப் போய்க்கொண் டிருக்கிறது. எடுத்ததற்கெல்லாம் முருகன் ஏற்பதற்கெல்லாம் வினைப்பயன்! சொந்த உணர்ச்சி, சொந்த அறிவாராய்ச்சி அணுவளவுமிடையாது. இதனாலேயே நமதுகுலம் இந்த தாழ்ந்த நிலையை அடைந்துள்ள தென்பது எனது சொந்த அபிப்பிராயம். நம்மைச் சுற்றிலும் பார்க்கும்போது சமய உணர்ச்சியை நம்மிடம் வற்புறுத்தும் அல்லது சிலாகிக்கும் வேற்று வகுப்பினர் அச்சமய உணர்ச்சியின்றியே அல்லது அவ்வுணர்ச்சியை விலக்கி வைத்துக்கொண்டே மேன்மையடைந்து முன்னேற்ற வழியில் தலைதூரம் சென்றுவிட்டார்கள். தங்கள் அறிவை வலுப்படுத்துவதிலும், விசாலப்படுத்துவதிலும் விடா முயற்சி செய்துகொண் டிருப்பதாலேயே அந்த மேன்மை, உயர்வு அவர்களுக்குக் கிடைத்தன, கிடைக்கின்றன என்ற விஷயம் நிதானித்துப் பார்த்தால் உங்களுக்கு விளங்காமற் போகாது. அப்படியிருக்க, நாமும் மேனிலை யடையவதற்கு அறிவை, அறிவின் விளக்கத்தை, அறிவை விளக்கும் வழிகளைக் கைக்கொள்ளாமல் போலிச்சமய மயக்கத்தில் ஆழ்ந்து, கல்வியின்றி, செல்வமின்றி இருட்டில் தயங்குவதேன்?

போலிச்சமய மயக்கமென்று சொன்னேன்; கவனியுங்கள்.

சமய ஏற்பாடுகளெல்லாம் நமது நன்மைக்காகவே, நமது விடுதலைக்காகவே அமைக்கப்பட்டன வென்று பல சமயாபிமான நண்பர்கள் சொல்லுவதுண்டு. அப்படியாயிருந்தால் அவைகளைப் பற்றிக் குறை கூற இடமில்லை. ஆனால் நடைமுறையிலிருப்பதென்ன? இச்சமயங்களே நமக்குப் பெருந்தீமை, பெருநட்டம் இவைகளை விளைவிப்பதும், ஒற்றுமையைக் கெடுப்பதும், முன்னேற்றத்தை, விடுதலையை, நன்மையைத் தடுப்பதுமாக இருக்கின்றன. இதை ஆக்ஷேபிப்பது பகலவன் வெளிச்சத்தைக் கண்ணில்லாதவன் ஆக்ஷேபிப்பதை யொக்கும்.

சமயக் கொள்கைகள், சமய வழிபாடுகள் நமக்கு ஊக்கத்தை யளித்து முன்னுக்கேற்றுவ தானால் அவைகளைக் கொள்ளுங்கள். இல்லை; அவைகளைத் தள்ளுங்கள்; அல்லது அவைகளை அடியோடே மாற்றுங்கள்.




திரு. ஆ. வே. முத்தயா முதலியார்,
பி.எ., பி.எல்.,

சமூக மகாநாட்டுத் திறப்பு விழா
வாற்றிய பெரியார்





திரு. V. S. செங்கோட்டையா முதலியார்

கொடி உயர்த்திய பெரியார்



திரு. தி. நா. சபாபதி வள்ளலார்
சமூக மகாநாட்டுத் தலைவர்



திரு. ம. த. காசிநாத முதலியார்
சமூக மகாநாட்டு வரவேற்புத் தலைவர்



"முருகா", "குமரா" வென்னும்போதே உங்கள் உள்ளத்தில் உற்சாகமும், அஞ்சாமையும் உதிக்கின்றனவா? உதிக்கிறதானால் எழுந்து தீரமாக முன்னே நடக்கவேண்டும். இல்லை; பத்தி பெருகுகிறது; மனம் குழைகிறது; ஒன்றுஞ் செய்ய உள்ளம் ஒப்பவில்லை யென்றிருந்தால் அதைத் தள்ளுங்கள். நாம் அழிந்து பட்டுப்போவதற்கோ குமரனைக் கூப்பிடுவது?

குமரன் ஒரு காலத்தில் சூரசம்மாரஞ் செய்துவிட்டு, அது முதல் எங்கேயோ வானுலகில் வதிந்து வருவதாகவும், அவனுடைய பல உருவங்களை இருண்ட கட்டடங்களில் சில ஊர்களில் பார்க்கலாமென்றும் நீங்கள் கண் மூடிக்கொண்டு மனப்பால் குடிக்கிறீர்களேயன்றி, குமரனென்றால் நீங்களொவ்வொருவரும் குமரன்தான், குமாரத் தன்மை உங்களிடந்தான் விளங்கவேண்டும் என்பதாகத் திடவெண்ணம் கொள்ளவில்லையே! மனத் திண்மையையும் மனவெழுச்சியையும் குறைக்கும் வழிபாடு வழிபாடாகுமோ? நாமெல்லோரும் நவ வீரர்கள் வழித்தோன்றல்கள். நமது முன்னோர்கள் தீரர்கள், வீரர்கள் ஆகையால் அவர்கள் வழி வந்த நாம் ஏழைகள், கோழைகள் என்பதாகச் சொல்லாமலே விளங்குவது எவ்வளவு பரிதாபமும் மதிப்புக்கேடும் என்பதை உணருங்கள்.

ஆகையால் கடவுளைப்பற்றி, சமயத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டு காலத்தைக் கழிப்பவர்கள் கழிக்கட்டும். தங்கள் ஆராய்ச்சியில் உண்மையைக் கண்டு உங்களுக்குச் சொல்ல வந்தால் செவி சாயுங்கள். அவர்கள் கூறுவதையும் உங்கள் அறிவென்னும் விளக்கு வெளிச்சத்தில் பாருங்கள். விடுதலைத் தேட்டத்திற்கு, இன்ப அடைவிற்கு முன்னேற்றத்திற்கு ஒப்ப அனுகூலமான கூற்றானால் ஏற்றுக்கொள்ளுங்கள். அன்றேல் விலகிப் போங்கள்.

இங்கே நாகரீகம், மேனாட்டு நடைமுறை (Modern civilisation) இவைகளை உயர்த்தியோ அல்லது இவைகளைக் குறிப்பிட்டோ யான் சொல்லுகிறதாக நினைக்கவேண்டாம். அந்த வாழ்க்கையிலும் பல கெடுதிகள் உண்டென்பது உண்மையே. ஆனால் நம்மிடத்தில் நமது வாழ்க்கையிலே இருக்கும் ஊழல்கள் இன்னும் அதிகமானவை யென்பதும் மறுக்க முடியாததே. நல்லது எங்கிருந்தாலும் கொள்ளத் தக்கதே. தீயது எங்கிருந்தாலும் தள்ள வேண்டியதே. இதில் அறிவியக்கம் தலைபெற்று நிற்கவேண்டும்.

இந்த அறிவே, நம் ஒவ்வொருவரிடமும் உள்ள தூய அறிவே நமது வழிகாட்டியாக விருக்கவேண்டும். நமதறிவை, பிறருடைய அறிவை, நம்குல மக்களுடைய அறிவை விளக்குவதே, விளக்குவதற்கு வேண்டிய முயற்சி யெடுப்பதே சமய வழிபாடாகும். கல்வி, கேள்வி, போதனை இவைகளெல்லாம், மறைந்து கிடக்கும், மாசடைந்து கிடைக்கும் அறிவைத் துலக்க வைப்பதற்கேயாகும். இந்த வழிபாட்டிற்கு, இந்தச் சமய வழிபாட்டிற்கு ஆக்ஷேபிப்பவர்களும் இருப்பார்களோ? இந்த வழிபாடு உண்மை வழிபாடா? அல்லது உட்கார்ந்துகொண்டோ, நின்றுகொண்டோ, கண்ணை மூடிக்கொண்டோ, திறந்துகொண்டோ, படமாடுங் கோயில் முன்னே "குமரா, குஹா" வென்று தேம்பியழுவது வழிபாடா? யோசியுங்கள், சகோதரர்களே! நமது வாழ்க்கை அடிமை வாழ்க்கையாகவா இருக்க வேண்டும்? விடுதலையின்றி மடிவதும் மனிதத் தன்மையாமோ? ஏதோ நாமே கண்ணை மூடிக்கொண்டு ஏற்படுத்திவிட்டு அந்த மனோ சிருஷ்டிப் பொருள்கள் உண்மையில் இருப்பதாக பயந்துகொண்டு பயந்த குடித்தனம் செய்து வருவதும் மானிடத் தன்மையா?

ஆகையால் தீரர்களாக வெழுந்து நர்ச்சியுங்கள். உண்மையைத் தேடுங்கள். பிறர் சொல்லுவதை அப்படியே விழுங்கிவிடாதீர்கள். உங்கள் அறிவென்னும் விளக்கை அமர்த்திவிடாதீர்கள்.

அறிவே கடவுள்; கடவுள் அறிவே! அறிவை விளக்குவதே கடவுள் வழிபாடு. அறிவு மறைந்து கிடக்கும் இடங்களாகிற வறிய மக்களே கோயில்கள். அந்தக் கோயிலைச் சீர்படுத்தப் பொருள் வேண்டும். கல்விநிதி வேண்டும். இந்த வழிபாட்டில் சிறந்து நிற்க வேண்டியது அன்பு, தூய ஒழுக்கம். அன்பு எல்லோரையும் சேர்த்துப் பிடிப்பது; ஒற்றுமையை வளர்ப்பது. தூய ஒழுக்கம் வீரத் தன்மையை, விடாமுயற்சியைத் தருவது; ஏழை மக்களிடம் இரங்கச் செய்வது.

அறிவான கடவுளை வழிபடும் துறை அன்புத் துறை. அறிவே கடவுள் அன்பே சமயம் என்பதாகப் பறை சாற்றுங்கள். கல்வி நிதியைப் பெருக்க ஏற்பாடுகள் செய்யுங்கள்.

பெரிய பொது நோக்கைக் கைக்கொள்ளுங்கள். குறுகிய சிறு நெறிகளைத் தள்ளுங்கள். விழிப்புடன் முன்னடக்க வேண்டும்.

கடைசியாக வாலிபர்களுக்கு ஒருவார்த்தை கூற விரும்புகிறேன்.

கோழைத்தன்மை, தளர்ச்சி இவை முதலியன வயதுமுதிர்ச்சியின் குறிப்பென்பதை மறவாதீர்கள்.

ஊக்கம், அஞ்சாமைகளே வாலிபர்களுடைய அடையாளங்கள்.

எதையும் உங்கள் உள்ளத்தில் ஒளிரும் தூய அறிவின் சுடர் வெளிச்சத்தில் பாருங்கள். வீண்காலம் போக்காதீர்கள். வம்பு கேள்விகளைக் கிளப்பிக்கொண்டு வாதாடாதீர்கள். இளங்குமாரச் செல்வர்களாக எங்கும் சஞ்சரித்துக் குலத்தை உங்கள் குணங்களால் உயர்த்துங்கள்.

இந்தச் சில எச்சரிக்கை வார்த்தைகளோடு என் முழு மனதுடன் உங்கள் மகாநாட்டைத் திறக்கின்றேன்.

என்றும் எங்கும் பொங்குக மங்களம்!

## திருவாரூர் சைவத் திருவாளர் T. N. சபாபதி முதலியார் அவர்களுக்கு ஷை மகாநாட்டு வரவேற்புக் கழகத்தினர் உவந்தளித்த நல் வரவேற்புப் பத்திரம்.

நேரிசை ஆசிரியப்பா.

சபாபதி வள்ளால் சபாபதி வள்ளால்
சபாபதி வள்ளால் சயமுடன் வருக
வருக வருக பெரியோய் வருக
பொதுநலங் கருதும் புண்ணிய வருக
செய்ந்நன்றி மறவாச் சீரிய வருக
பரோப காரச் சிரோமணி வருக
தோலா நாவின் மேலோய் வருக
செழுந்திரு வாரூர்த் திலகமே வருக
செங்குந் தகுலப் புங்கவ வருக
சென்னையிற் றென்னிந் தியசெங் குந்த
மகாசன சங்கத் தாபக வருக
கறையில் மனமும் கல்வியும் வாய்மையும்
பொறையுஞ் சீலமும் புகழும் பொருந்திய
அருங்குணக் கடலே அண்ணல் வருக
உச்சிமேற் புலவர்கொள் கச்சிப் பதியில்
மெச்சப் பலரும் நச்சியே கூடும்
தென்னிந் தியசெங் குந்த ரிரண்டா
வதுமகா நாட்டு மாபெருந் தலைமை
போற்ற யாவரும் வீற்றிருந் தியற்றப்
போந்தமை யெங்கள் புண்ணியப் பயனே
உயர்தனிப் பெருங்குலத் துதித்தநாட் டொடங்கித்
தன்னலங் கருதாப் பன்னருஞ் செயலால்
சமூகத் தொண்டே தனதெனக் கொண்டு
செங்குந்த வுலகஞ் சீருற வேண்டிப்
பயன்றூக் காது நயன்றரு முதவிசெய்
நின்னருங் குணத்தை யென்னென் றியம்புவோம்
மேன்மே லும்பல வேண்டுவ செய்தே
வாழ்கநின் மரபு வளர்கநின் னாயுள்
சேர்கநின் செல்வம் திகழ்கநின் பெருமை
எல்லாம் வல்ல விறைவனின் னருளால்
ஊழி ஊழி காலம்
வாழி வாழியிவ் வளமலி நிலத்தே.

நலம்! நலம்!! நலம்!!!

காஞ்சிபுரம்,
16-5-31.

இங்ஙனம்,
வரவேற்புக் கழகத்தினர்.

2-வது மகாநாட்டுத் தலைவர்

## திரு. தி. நா. சபாபதி முதலியார் அவர்களது சொற்பொழிவு.

எப்போ தகத்து நினைவார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்.

அன்பிற் சிறந்த பிரதிநிதிகளே! சகோதரர்களே! சகோதரிகளே!

நமது இரண்டாவது மகாநாடு சிறப்பாக நடந்தேறுமாறு நமது குல தெய்வமாகிய முருகக் கடவுளை வழுத்தி அன்பு கூர்ந்து இங்குக் குழுமியுள்ள பெரியோர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பண்டைக் காலந்தொட்டுக் கல்வி ஒழுக்கங்களால் மேம்பட்டதும், தென்னிந்தியாவிலுள்ள பல மதஸ்தர்களாலும், இனத்தவர்களாலும் தலை நகரமாகப் போற்றப் பெற்று வருவதும், பல அரிய அற்புதங்கள் அமையப் பெற்றதும், உலகத்திலுள்ள எந்த நகரத்தையும் ஒப்பிட்டுச் சொல்ல முடியாதபடி அளவிறந்த தேவாலயங்கள் நிறைந்துள்ளதும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சூரிய ஒளி எக்காலத்திலும் நீங்குவதில்லை என்பதுபோல வெடி முழக்கும் விழாக் கொண்டாட்டமும் எந்நாளும் நீங்காது விளங்கி வருவதும், நம்மவர் அனைவர்க்கும் தலைமை ஸ்தானமாக மிளிர்வதுமாகிய இத்தியாதி பெருமை வாய்ந்த இக்காஞ்சிமா நகரின்கண் இன்று கூடுகின்ற இப்பெரிய மகாநாட்டினுக்குத் தலைமை வகிக்கக் கூடிய பெரியார்கள் பலர் இருக்கையில் நமது சமூக சேவை செய்யும் தொண்டர்களுள் ஒருவனாக இருக்க விரும்பும் சிறியேனாகிய என்னைத் தலைவனாக நியமித்துக் கௌரவப் படுத்தியது எக்காரணம் பற்றியோ அறியேன். ஆயினும் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பது எனது கொள்கை யாதலின் பெரியோர்கள் இட்ட பணியை உங்கள் போதரவைக்கொண்டு ஒருவாறு ஆற்ற முன் வந்துள்ளேன். இம்மகத்தான கௌரவத்தை எனக்களித்த வரவேற்புச் சபையாருக்கு எனது மனப்பூர்வமான வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

பெரியோர்களே! சகோதர சகோதரிகளே!!

'வளம்பட வேண்டாதார் யாருமில்லை' யாகையால் வளம் பெறுவதெவ்வாறென யோசிக்கும் பொருட்டே நாம் இங்கு ஒருங்கே பெருந்திரளாகக் கூடியுள்ளோம். யோசிக்க வேண்டியது அவசியந்தான். பலர் ஒருங்கே கூடி யோசிப்பது அதனினும் சிறந்தது தான் என்றாலும் எப்போதும் யோசித்துக்கொண்டே இருப்பதினாலும் பேசிக்கொண்டே இருப்பதினாலும் மாத்திரம் யாரும் யாதொரு பயனையும் அடைய முடியாது. எண்ணித் துணிக கருமம் என்றபடி தீர ஆலோசித்து முடிவு கட்டினவுடனே காரியத்தில் செய்து காட்ட முயல வேண்டும். ஆகையால் நாம் உண்மையிலேயே வளம்பட வேண்டுவோமாயின் யோசித்து முடிவு கட்டியவற்றைத் தாமதமின்றிச் செய்கைக்குக் கொண்டுவர



வேண்டும். இம்மகாநாட்டில் நாம் கலந்து பேசி முடிவுகட்டி ஒன்றையும் திருப்திகரமாகச் செய்யாமல், விட்டுவிடுவதைக் காட்டிலும் சில தீர்மானங்களை மட்டும் நிறைவேற்றி அவற்றைக் கூடியவரையில் நடவடிக்கைக்குக் கொண்டு வருவதே சாலச் சிறப்புடைத்தென அபிப்பிராயப்படுகிறேன்.

### நமது முன்னேற்றம்

நமது முன்னோர்களுடைய பெருமைகளைப்பற்றித் தெரிந்துகொள்வதும், பேசுவதும் நல்லதுதான். ஆனால் அவை வளம்படவேண்டும் என்ற கருத்தோடு தளரா ஊக்கங்கொண்டு உழைக்கும் தாளாளனுக்குப் பயன் தருமேயன்றி ஏனையோர்க்கு ஒரு பயனும் தாராதென்பது திண்ணம். விடாமுயற்சி செய்துவரும் தாளாளனுக்கு முன்னோரது அரிய செயல்கள் நம்பிக்கையையும், பேருக்கத்தையும் உண்டாக்கு மென்பதிற் சந்தேகமில்லை. பண்டையோர் பெருமை நம்முடையதாகாது. அன்னோர் வழித்தோன்றிய நாமும் சோம்பலின்றி முயற்சி செய்வோமானால் அவர்களைக் காட்டிலும் பெருமை யுடையோராகலாம் என்ற தீரமான ஒரு எண்ணத்தை நமக்கு அது தரும். முன்னோர் புகழைப்பற்றி மாத்திரம் அடிக்கடி வீணில் பேசி அவை யாவும் நமக்குரியவென எண்ணியிருத்தல் அறிவுடைமை யாகாது.

### நமது தற்கால நிலைமை

நமது தற்கால நிலைமை மிகவும் சீர்கேடுற்றிருக்கிறதென்பதை யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டியதே. எத்துறையிற் சென்று பார்த்தாலும் நாம் பின்னணியில்தான் நிற்கிறோம். நாம் சீர்பெற வேண்டுமாயின் விடாமுயற்சியோடு கட்டுப்பாடாக உழைக்கவேண்டும். பிறர் உதவியை எதிர்பார்ப்பதில் பயனில்லை. பிறர் உதவி நமக்குப் பலவீனத்தையே உண்டாக்கும். இதை அனுபவத்தில் காணலாம். ஆகையால் வளம்பட விரும்பும் நீங்கள் உங்கள் சொந்த பலத்தையே வாளாயுதமாகக்கொண்டு பல துறைகளிலும் நின்று போராடி வெற்றி பெறுங்கள்.

### கல்வி

கல்வியில் மிகத்தாழ்ந்த நிலையிலுள்ள குலங்களுள் நமது குலமும் ஒன்று. எழுத்துக்களை மட்டும் கற்றுக்கொண்டு அவற்றைச் சேர்த்துப் படிப்பதும் எழுதுவதுமே கல்வி என அநேகர் கருதுகிறார்கள். பெரியோர்களால் வகுக்கப்பெற்றுள்ள ஒழுக்க முறைகளை நன்குணர்ந்து, நுண்ணறிவையும் உலக அநுபவங்களையும் பெற்று நியாய வழியில் பொருளீட்டி, உலக வாழ்க்கையை இனிது நடத்தத் தெரிந்துகொள்வதே இம்மைக்கு வேண்டிய கல்வியாகும். இவ்வுலக வாழ்க்கைக்கு வேண்டிய கல்வியை அறியாமையாலோ சோம்பலினாலோ பலர் அடியோடு அசட்டை செய்து முத்திக்குரிய கல்வியைக் கற்றுக்கொள்ளுவதே போதுமென வீண் வார்த்தைகள் பேசித் தங்கள் வாழ்நாளை வீழ்நாளாக்குகின்றனர். அது ஒருபோதும் அமையாது. நியாய வழியில் உலக வாழ்க்கையைச் சீர்பெற நடத்தி இன்புறுதற்கு வேண்டிய அறிவும் ஆற்றலுமற்ற ஒருவன் முத்திபெற முயல்வேன் என்பது பயனில் கூற்றேயாகும்.

கல்வி கற்பது அரசாங்க உத்தியோகத்திற்காகவே என்று கருதுவதும் கூடாது. பிற்காலத்தில் உலக வாழ்க்கையை வெற்றிபெற நடத்தக்கூடிய பல தொழில் முறை வியாபார முறை முதலியவற்றில் தேர்ச்சி பெறுமாறு கற்கவேண்டும், உலகானுபவத்தோடு கூடிய கல்வியே நம்மைப் பெருநோக்கமுடையவர்களாகவும், நுண்ணறி வுடையவர்களாகவும் செய்யும்.

### பெண் கல்வி

ஆண்கள் மட்டும் அறிவுடையவர்களாக இருப்பின் போதாது. பெண்மக்களும் கற்றலும் கேட்டலும் உடையவர்களாய் ஆழ்ந்த கருத்தும் நுண்ணிய அறிவும் பெற்று இல்வாழ்க்கையை துன்பமின்றி இன்பப் பெருக்குடையதாய்ச் செய்யும் பெருஞ் சக்தி வாய்ந்தவர்களாய் இருத்தல் வேண்டும். இதுவே பண்டைத் தமிழர் கொள்கையுமாம். நிறைந்த அறிவுடையான் ஒருவன் அறிவற்ற பெண்ணோடு வாழ்க்கை நடத்துவது பொருந்தாததாகவே முடியும். ஆகவே நமது சமூக சீர்திருத்தம் வேண்டுமாயின் முதலில் நம் பெண்மணிகளிடமே சீர்திருத்த வேலைகளை ஆரம்பிக்கவேண்டும். கல்வியின் உதவியால் பெண்மணிகளை உலகப் போக்கிற்கேற்பச் சீர்திருத்துவோமாயின் ஆண்மக்கள் சலபத்தில் சீர்திருத்த மடைவதோடு கல்வியிலும் விருத்தியடைவார்கள்.

### குலத்தொழில்

நம்மவர்கள் நெசவையே குலத்தொழிலாகக் கருதி வேறு தொழில்களைத் கற்றுக்கொள்ள முயல்வதே இல்லை. நெசவுத்தொழில் ஒன்றையே நம்பியிருத்தல்தான் நம்முடைய தற்காலத் தாழ்ந்த நிலைமைக்கு முக்கிய காரணமெனப் பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். நெசவையே நம்பியுள்ளோர் இரவும், பகலும், ஆணும், பெண்ணும், பெரியோரும் சிறியோரும் இடைவிடாது உழைத்தாலன்றி அத்தொழிலால் பெறக்கூடிய சொற்ப வருமானத்தையும் பெறமுடியாது. அதனாலேயே கல்வியறிவு, உலகானுபவம் முதலிய இன்றியமையாதவற்றைப் பெறச் சந்தர்ப்ப மில்லாதவர்களாய் நாம் பின்னணியில் நிற்கிறோம். ஆகையால், நாம் நெசவை மட்டும் நம்பியிருத்தல் கூடாது. நம்முடைய சிறுவர்களை அவர்களுக்குப் பொருத்தமான வெவ்வேறு தொழில்களில் பழகவிட வேண்டும். அன்றியும், ஒவ்வொரு கிராமத்திலும் பொதுப்பணத்தைக் கொண்டோ அல்லது, நம்மவர்களுக்குள் பங்குகள் சேர்த்தோ நமது குலத்தொழில் சம்பந்தமான வியாபாரங்களை நாமே நடத்த முயலவேண்டும்.

நமது வறுமைக்கு இன்னொரு காரணமு முண்டு. நெசவுத் தொழில் புரியும் நம்மவர்கள் காலத்திற்கேற்றபடி உடைகளை மாற்றி நெய்யவோ, அழுத்தமாக நெய்யவோ முயற்சிப்பதில்லை. நம்மவர்களைத் தவிர வேற்றினத்தவர்கள் நெய்யும் ஆடைகளுக்கு

ஏற்பட்டுள்ள கிராக்கியும் மதிப்பும் நம்மவர் நெய்யும் ஆடைகட்கு ஒரு சிறிதும் இல்லை. இந்தக் காஞ்சீபுரத்திலேயே இதற்கு உதாரணம் காட்டுகிறேன். இந்த ஊரில் நம்மவர்களும் சாலியர்களும் வெள்ளை வேஷ்டி நெய்கின்றார்களாயினும் அனைவரும் சாலியன் கோத்துக்களை விரும்பி வாங்குகின்றார்களே ஒழிய நமது கொத்தை வாங்குவதில்லை. கல்யாணங்கட்கு வேண்டிய புனுஞ்சு, தேசூரஞ்சு வேஷ்டிகள் நெய்யும் நம்மவன் ஒருவன் தனது வீட்டில் நேரும் கல்யாணகாலத்தில் சாலியன் வேஷ்டியையே வாங்குகின்றானெனின் இவர்கள் துணியின் மேன்மை எத்தகையதென நீங்களே யூகித்துப் பாருங்கள். நாம் நெய்யும் ஆடைகளை நாம் அணிந்துகொள்ள விரும்பாமல், அவற்றை ஒன்றுக்குப் பாதியாக விற்று சீமைத்துணி வாங்கி அணிவதை நம்மவர்களில் அநேகர் வழக்கமாகக் கொள்கின்றனர். நமது வறுமைக்கு இது முக்கிய காரணமாவதோடு மிக அவமானந் தரத்தக்க செயலுமாம்.

நாம் இயன்றவரை சீமைத்துணிகளைப் பகிஷ்கரிக்க வேண்டும். இனி நமது வறுமையைப் போக்கி வாழ்க்கைக்குப் புத்துயிர் தர வல்லது கதர் இயக்கமேயாம். கோவை ஜில்லாவில் தற்போது செங்குந்த ஏழை மக்களுக்குப் பிழைப்பு தந்து நிற்பது கதர் ஒன்றேயாகும். ஆதலால், இந்த ஜில்லாவிலும் நம்மவர்கள் கதர் நெய்யவும் அணியவும் தொடங்கவேண்டும். நெசவுத் தொழில் செய்யும் நம்மவர்கள் தாங்கள் நெய்யும் ஆடைகளைத் தவிர வேறு ஆடைகளைத் தாங்கள் அணிவதில்லை என உறுதி கொள்வார்களாயின் நமக்குள்ளேயே எவ்வளவு ஆடைகள் செலவாய்விடு மென்பதை நீங்களே ஆழ்ந்து யோசித்துப்பாருங்கள்.

### ஒற்றுமை

செங்குந்தர்களாகிய நாம் மிகுந்த கட்டுப்பாடும் ஒற்றுமையும் உள்ளவர்கள் என்பதை யாவரும் அறிவர். அது நம் பெரியோர்கள் நமக்குத் தேடிவைத்த ஒரு பெரிய நிதியாகும். ஆனால் இப்போது அவ்வருமையான நிதியால் மேன்மையுறாது நம் அறியாமையால் அதனைப் பாழ்படுத்தித் தாழ்மையடைந்து வருகிறோம் இவ் விஷயத்தில் நம்மைப் போல் அறியாமை உள்ளவர்களைக் காண்பதே அரிதெனக் கூறலாம். நம்மவர்களில் கட்சிகள் இல்லாத ஊர்களோ அக்கட்சிகளுக்காகப் பதினாயிரம் இருபதினாயிரம் செலவு செய்யாத செங்குந்தர்களோ இல்லை எனக்கூறலாம். கட்சிகளை நமக்குள்ளேயே வைத்துக்கொண்டாலும் போதும். நாம் அரிதில் ஈட்டிய பொருளை வீணில் ஆயிரக்கணக்காகச் செலவு செய்தும் பிறர் எள்ளி நகையாடும் இழி தகைமையையே அடைகின்றோம். பண்டைக் காலம்தொட்டுப் பலவகைத் தர்மங்களும், தேவாலயத் திருப்பணிகளும் செய்வதில் பேர்போன நாம் கட்சிப் பிரதி கட்சிகளால் ஏழை மக்களை வதைத்தல், கடவுள் பூஜையை நிறுத்தல் முதலிய பாபச் செயல்களைச் செய்து வருகிறோம். இவை தான் நாம் கட்சிகளால் அடையும் பயன்கள்.

இக்காஞ்சி மாநகரத்தை யடுத்த ஒரு சிறு கிராமத்தில் அழகான ஆலயம் ஒன்றிருக்கிறது. அந்தக் கோயிலில் உள்ள கடவுளுக்குப் பூஜை நின்று பதினைந்து வருடங்கள் ஆயின. அந்த ஆலயத்திற்குள் சென்ற ஆண்டில் ஊர்ப் பொதுப்பணத்தில் சுமார் 3000ரூபாயை ஒரு புதுப்பானையில் வைத்து 5 பூட்டுக்கள் பூட்டி இருக்கின்றனர். அதில் சில நோட்டுகளும் உள்ளன. இன்னும் ஆயிரக்கணக்காக வசூலாக வேண்டிய பொதுப்பணமும் ஊரில் பலரிடம் உள்ளது. அக்கிராமத்தில் சுமார் 30 வீடுகளே உள்ளன. பெரும்பாலோர் ஏழை மக்களாகவே இருக்கின்றனர். இதுதான் தற்காலத்திய செங்குந்தர்களது பெருமையாக இருக்கிறது. இத்தகைய முரட்டுப் பிடிவாதத்தால் வந்த லாபமென்ன?

இந்த ஜில்லாவில் பெரும்பாலான கிராமங்கட்கு நான் சுற்றுப் பிராயணஞ் செய்திருக்கிறேன், ஒவ்வொரு கிராமத்திலும் கட்சி ஏற்பட்ட விதத்தை நான் விசாரித்துப் பார்த்தபோது எனக்கு அடங்காச் சிரிப்பும், வியப்பும் உண்டாயின. நமக்காகக் கட்சி ஏற்பட்ட கிராமங்கள் பெரும்பாலும் கிடையா. வேற்றினத்தவர்களின் விவகாரத்தில் தாங்கள் வீணைத் தலையிட்டுக்கொண்டு கட்சி யமைத்து ஆயிரக்கணக்கில் செலவு செய்து வருவதே ஒவ்வொரு கிராமத்தின் வழக்கமாகவும் இருந்து வருகிறது. கவனித்துப்பாருங்கள். ஒரு ஊரில் வண்ணானுக்காகக் கட்சி; மற்றொரு ஊரில் பணிச்சவனுக்காகக் கட்சி; இன்னொரு ஊரில் பார்ப்பானுக்காகக் கட்சி. இந்த வினோதக் கட்சிகளுடைய மூன்று ஊர்களும் காஞ்சீபுரத்திற்குச் சமீபத்திலேயே உள்ளன. இப்படி வீண் கட்சிகளுக்காக ஆயிரக்கணக்கிலும் லட்சக்கணக்கிலும் செலவு செய்து ஏழைகளாய்த் தவிப்பதைக் காட்டிலும் அப்பணங்களை முதலாக வைத்து நமது தொழிலுக்கு ஒத்தாசையாக வர்த்தகச் சங்கங்கள் ஸ்தாபித்து, அதனால் வரும் லாபத்தைக் கொண்டு நமது சிறுவர்கட்கு உயர்தரக் கல்வி கற்பிக்கலாகாதா?

‘ஒன்று பட்டாலுண்டு வாழ்வே அன்றி
ஒற்றுமை குலைந்திடில் அனைவர்க்குந் தாழ்வே.’

என்ற பாரதியார் பொன்மொழியை மனதிலிருத்தி இனிமேலாயினும் நம்மைத் தாழ்வுபடுத்தும் கட்சிப் பிரதி கட்சிகளை வேரோடு வெட்டி எறியுங்கள். ஒற்றுமையாலுண்டாகும் நன்மைகளைப்பற்றி விவரித்துக் கூற இது இடமல்லவாகையால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

### சமயம்

கோயில்களுக்காக நம்மவர்கள் ஏராளமான பொருள் செலவிடுகிறார்கள். இது நம்மவர்களுக்கு இயற்கையாக உள்ள ஒரு புராதீன வழக்கமாகும். இன்றைக்கும் கோயில் சம்பந்தமாக வரி கொடாத செங்குந்தன் இல்லையென்றே சொல்லலாம். அதுவும் சாதாரணமாய்க் குடும்பத்தின் சக்திக்கு அதிகப் பட்டதாகவே இருக்கிறது என்றாலும் சமய ஆராய்ச்சியாவது சமய ஒழுக்கமாவது பெரும்பாலோருக்கு இல்லை. ஆனால் கோயில் சம்பந்தமாகக் கட்சிகள் வளர்ந்து தீமையே விளைத்து வருகின்றன. இதற்குக் காரணம் அறியாமையே. சமயம், ஆசாரம், கைத்தொழில், வியாபாரம் முதலிய எல்லாவற்றிற்கும் கல்வியானது அத்தியாவசியமாய் உலக வாழ்க்கைக்கு முதுகெலும்புபோல் விளங்குகிறது. எனவே உண்மையான கல்வி ஆண் பெண் இருபாலாரிடமும் பரவுமாயின் அநாவசியமான கட்சிகள் ஏற்படா; பொருளும் வீணில் செலவாகாது.



### சங்கமும் பத்திரிகையும்

பலர் ஒன்று கூடிச் செய்யும் விடாமுயற்சியினாலேயே ஒரு சமூகமோ மதமோ தேசமோ முன்னேற்ற மடையக் கூடும். இவ்வாறு உயர்ந்த நோக்கத்தோடு பலர் யோசிக்கவும் முயற்சி செய்யவும் கூடும் கூட்டத்திற்கே சங்கம் என்று பெயர். சங்கத்தினாலுண்டாகும் பயனை எடுத்துரைக்கப் புகின் பெருகும். சங்கத்திற்கு எக்காலத்திலும் மிகுந்த மதிப்புண்டு. ஒரு பெரிய பணக்காரர் செய்ய முடியாத காரியத்தைப் பல ஏழைகள் சேர்ந்து சுலபத்தில் செய்து முடிக்க வியலும். ஆகையால் நம்முடைய சமூகத்தைச் சீர் திருத்தி நல்ல நிலைக்குக் கொண்டுவர வேண்டுமாயின் சங்கம் அவசியமாகவே இருக்கிறது.

சங்கம் நமக்காகச் செய்து வரும்வேலை இன்னதென்றும் ஆங்காங்குள்ள நம்மவர்கள் நிலைமையையும் அவர்கள் முன்னேற்றத்திற்காக அப்போதைக்கப்போது செய்து வரும் முயற்சியையும் நாம் காலத்திற்கேற்ப நடந்துகொள்ள வேண்டிய முறைகளையும் நமக்குத் தெரிவித்து வருவது நமது ‘மித்திர’னேயாகும். ஆகையால் நமது தலைச்சங்கத்தையும் ‘மித்திர’னையும் போற்ற வேண்டுவது நமது முக்கிய கடமையாகும். செங்குந்த குடும்பம் ஒவ்வொன்றிலும் நமது ‘மித்திரன்’ காணப்படும் காலமே நமது சமூகம் ஏனைய சமூகங்களோடு சமநிலை பெற்று மேன்மை எய்தும் காலமாகும் என்பதை நாம் ஞாபகப்படுத்திக்கொண்டு அதற்கான முயற்சியைச் செய்வோமாக. நமது சமூகம் மேன்மையுற எல்லாம் வல்ல முருகன் இன்னருள் பாலிப்பானாக.

மங்களம் பெருக. சுபம்.

---

தென்னிந்திய செங்குந்தர்

## இரண்டாவது வாலிபர் மகாநாட்டு வரவேற்புத் தலைவர்
## திருவாளர் சா. ர். தங்கவேல் முதலியார் அவர்கள் சொற்பெருக்கு

வாலிப சகோதரர்களே!

இரண்டு ஆண்டுகளாக ஆவலோடு எதிர்பார்த்திருந்த மகாநாடு இப்போது கூடியிருக்கிறது. எங்கள் அழைப்புக் கிணங்கி பல ஜில்லாக்களிலிருந்தும் விஜயம் செய்திருக்கும் வாலிபர்களாகிய உங்களுக்கு வாலிபர் மகாநாட்டு வரவேற்புக் கமிட்டியின் சார்பாக நல்வரவு கூறுகிறேன்.

எந்தக் காரியமாயினும் அது வெற்றி பெறுதற்கு இளைஞர்களின் உழைப்பு அல்லது தொண்டு அவசியமானது. இளைஞர்களே ஊக்கம், உறுதி, விடாமுயற்சி முதலிய அருங்குணங்கள் பொருந்தியிருந்து காரியங்களைச் சாதிக்க வல்லவர்கள். அத்தகைய இளைஞர்களை ஒருங்கு திரட்டி, அவர்களுக்குத் தொண்டின் பெருமையை விளக்கி, ஊக்கமளித்து, சமூகத் தொண்டி லீடுபடச்செய்ய வல்லவர்களே இளைஞர் மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கும் தகுதியுடையோர் ஆவர்.

சென்ற மகாநாட்டில் தொண்டர் தலைவராகவிருந்து, வந்திருந்த பிரதிநிதிகள் யாவருக்கும் தக்க சௌகரியங்களைச் செய்துகொடுத்து மகாநாடு செவ்விதின் நடைபெறுவதற்குக் காரணராகவிருந்த திரு. மீனாட்சிசுந்தர முதலியார் அவர்கள் அத்தகைய தகுதியினைச் சிறப்பாகப் பெற்றவராவர். அன்றியும் அவர் இளைஞர்களாகிய மாணவர்களோடு எப்போதும் பழகும் பேறு படைத்தவராதலின் இளைஞர் மகாநாட்டுக்கு அவர்கள் தலைமை வகித்தல் மிகவும் பொருத்தமாகும். அவர்கள் நமது மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க இசைந்தமைக்கு அவர்களைப் பாராட்டுவதோடு அவர்களுக்கும் வரவேற்புக் கமிட்டியின் சார்பாக நல்வரவு கூறுகின்றேன். அவர்கள் வரவு வாலிபர்களுக்குக் குன்றாத ஊக்கத்தைத் தருவதாக.

### இளைஞர் இயக்கம்

சென்ற ஆண்டின் நிகழ்ச்சிகளைக் கவனித்துத் துவக்கும் ஆண்டில் செய்யவேண்டுவனவற்றை எல்லோரும் ஒருங்கு சேர்ந்து ஆராய்ந்து முடிவுகட்டி அம்முடிவுகளின்படி வேலை செய்யத் துவக்குவதற்காகவே ஆண்டுதோறும் மகாநாடுகள் கூடுகிறோம். வாலிபர்களும் அதுபோலவே கூடித் தங்கள் இயக்கங்களைப் பலப்படுத்திக்கொள்வது அவசியமாகின்றது. இளைஞர் இயக்கத்தின் மேன்மையினையும் அவசியத்தையும் பலர் பல சந்தர்ப்பங்களிலும் கூறி விளக்கியுள்ளார்கள். அயர்லந்து முதலிய சமீபத்தில் விடுதலை பெற்ற நாடுகள் இளைஞர் இயக்கத்தின் பெருமையை உலகிற்கு நன்கு உணர்த்தின.

இளைஞர் இயக்கமானது பெரிதும் அவசியமானது என்பது தெரியலாகும். ஆனால் நம் விருப்பப்படி ஒவ்வொரு கிராமத்திலும் வாலிபர் சங்கம் இன்னும் ஏற்படவில்லை. ஏதோ சில கிராமங்களில் தான் ஏற்பட்டன. அவைகளும் சில மாதங்கள் வேலை செய்தபின்பு உறங்க ஆரம்பித்துவிட்டன. துவக்கும் ஆண்டில் நமது தலைவரின் முயற்சியாலும்,

வாலிபர்களின் குன்றாத ஊக்கத்தாலும் இளைஞர் இயக்கம் பலப்படுமென்று நம்புகின்றேன்.

### தேச நிலையும் சமூக ஒழுங்கும்

இளைஞர் இயக்கங்கள் செய்யவேண்டிய வேலைகள் அளவிறந்தனவா யிருக்கின்றன. உலகம் போகும் போக்கைக் கவனிப்பின் முன்னணியில் செல்லும் நாடுகளுடன் நம் நாடு சம அந்தஸ்தை அடைவதற்கே அரும்பாடு படவேண்டி யிருக்கிறது. விடுதலை பெற்ற மற்ற நாடுகளுடன் நம்நாடு தலை தூக்கி நிற்கும் காலம் வரும் வரையில் நாம் மனிதர்களென்று கூறிக்கொள்வதற்கும் வெட்கப்படவேண்டியிருக்கிறது. நம் நாடு விடுதலை. யடைதற்பொருட்டு உழைக்கும் இயக்கத்திற்கு எல்லோரும் ஒத்துழைத்தல் வேண்டும். அதற்குத் தனி மனிதனென்ற முறையி லுழைப்பதிலும் ஒவ்வொரு சமூகமும் தன்னைத்தான் பலப்படுத்திக்கொண்டு நாட்டின் பொது வியக்கத்தோ டொத்துழைத்தல் சாலச் சிறந்தது. நம் சமூகத்தை எடுத்துக் கொள்வோமாயின் மிகப் பிற்போக்கான நிலையி லிருக்கிறது. நம்மவரிற் பெரும்பாலார் நாட்டின் நிலையை அறிந்து கொள்ளாத கிணற்றுத் தவளைகளாக விருப்பது பெரிதும் விசனிக்கத் தக்கதாகும். நம் சமூகம் பலப்படவேண்டுமாயின் நமது இளைஞர் இயக்கம் பலப்பட்டுத் தளராவூக்கத்தோடு வேலை செய்ய வேண்டும். அவர்கள் செய்யவேண்டிய வேலைகளை இரு கூறாகப் பிரித்துக்கொள்ளலாம். (1) தாங்கள் சீர்திருந்துதல் (2) பிறரைச் சீர்திருத்துதல் என்பனவாம்.

### சீர்திருத்தம்

சமூக சேவை செய்ய முன் வருவோர் முதன் முதல் தங்களைத் தாங்களே சீர்திருத்திக் கொள்ளுதல் வேண்டும். அவர்களுக்கு முக்கியமாக விருக்கவேண்டிய குணங்கள் உண்மையே பேசல், குற்றத்தை ஒப்புக்கொண்டு பொது ஜனங்களின் மன்னிப்பைப் பெறத் தயங்காதிருத்தல், உழைப்பு, விடாமுயற்சி, எளியதும் தூயதுமானவாழ்வு நடாத்தல் முதலியனவாம்.

மகாத்மா காந்தியின் இயக்கம் வெற்றி பெறுவதற்குக் காரணம் முதன் முதல் அவர் தம்மைத் திருத்திக்கொண்டு பிறகு அவர் பிறரைத் திருத்த முற்படுவதே யாகும். அவர் இயக்கங்களை எவ்வாறு நடத்துதல் வேண்டும், நடத்துவோர் எவ்வாறு நடந்துகொள்ளல் வேண்டும் என்பனவற்றை அவ்வப்போது பத்திரிகைகளின் மூலமாக வெளியிடுவதை இளைஞர்கள் கவனிக்க வேண்டுகிறேன். இனி இளைஞரியக்கங்கள் செய்யவேண்டிய வேலைகள் சிலவற்றைக் கூறுகிறேன்.

### கல்வி

நமது சமூகம் பிற்போக்கிலிருப்பதற்கு முக்கியமான காரணம் கல்வி யின்மையே யாகும். கல்வியென்றால் நமது தாய்மொழியை நன்றாய் எழுதப் படிக்கத் தெரிந்து, உலகத்தின் மற்றப்பாகங்களின் நிலையையும் நம் நிலையையும் உணர்ந்து, சாதாரண வாழ்வு நடத்துவதற்கு அறிவு தரத்தக்க இன்றியமையாத கல்வியேயாகும். இதை ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் அளிக்கச் சௌகரியங்கள் செய்து கொடுக்கவேண்டும். இளைஞர்கள் கிராமம் கிராமமாகச்சென்று அங்கு வதியும் நம்மவர்கள் கல்வி பயிலுவதற்கு ஏற்ற வசதிகள் இருக்கின்றனவா இல்லையா என்பதைக் கவனிக்கவேண்டும். இல்லையாயின் அங்குப் பாடசாலை ஏற்படும் வரையில் வாளாவிருத்தல் கூடாது. ஏற்ற முயற்சிகள் செய்து பாடசாலையை நிறுவுதல் வேண்டும். பெற்றோர்களிடம் வீடு வீடாகச் சென்று அவரவர் சிறுவர் சிறுமிகளைப் பாடசாலைக் கனுப்பும்படிக் கேட்டுக்கொள்ளுதல் வேண்டும்.

உயர்தரக்கல்வி பயில விருப்பமுள்ளவர்கள் அவ்வாறே செய்யலாம். செல்வர்கள் தங்கள் புதல்வர்களைப் பயிலச் செய்வதோடு படிக்க விருப்பமுள்ள ஏழை மாணவர்கட்கு உதவுதல் வேண்டும். இளைஞர்கள் செல்வந்தரிடம் சென்று உதவி வேண்டுவோருக்கு உதவியளிக்கும்படி மன்றாடிக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

நமது சமூகம் ஒட்டக்கூத்தர், படிக்காசர், இரட்டையர், பொய்யாமொழியார் முதலிய அரும்பெரும் புலவர்களை உலகுக்கீந்த சமூகம். ஆனால் தற்போது நம் சமூகத்தில் புகழ்படைத்த தமிழ்க் கவிவாணர்கள் தானும் இல்லாதிருத்தல் பெரிதும் வருந்தத்தக்க தாகும். நமது வாலிபர்கள் இந்தக் குறையையும் நீக்க முற்படுதல் வேண்டும். செந்தமிழ் மொழியினை நன்கு பயிலுதல் வேண்டும். இலக்கிய விலக்கண வாராய்ச்சிகள் செய்தல் வேண்டும். அதோடு மேனாட்டு அறிவியற் கலைகளை நன்கு பயின்று அவைகளைத் தமிழினிற் பெயர்த்திடுதல் வேண்டும். அவ்வறிவியல் நூல்களில் தேர்ந்த அறிவினரை ஆராய்ச்சியில் ஈடுபடுத்தி வெற்றிபெறச் செய்யவேண்டும்.

சகோதரர்களே! மேற்கூறியவை யாவும் பெண்களுக்கும் பொருந்துமென்பது சொல்லாமலே போதரும். 'பெண்களுக்குப் படிப்பேன்' என்று கேட்போர் இன்னும் இல்லாமலில்லை. சமூகத்தின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாகவுள்ள இவர்கள் நமது சமூகம் செய்த பாவத்தின் அலவுருவங்கள் என்றுதான் கூறுதல்வேண்டும். பெண்கள் கல்வியறிவில்லாதவரா யிருப்பின் நமது சமூகமாகிய ஒருபழத்தின் ஒருபாதி அழுகியிருப்பதையே ஒக்கும். அன்றியும் பெண்களே தாய்மார்களாக வேண்டுபவ ராதலானும், தாய்மார்களே தங்கள் சிறுவர் சிறுமிகளின் நடைக்குப் பெரிதும் காரணராதலானும் பெண்கல்வி யில்லாதிருப்பது எறக்குறைய முழுச்சமூகத்தையுமே பாதிப்பதாகும். ஒவ்வொரு வாலிபனும் கல்வி கற்ற பெண்ணையே மணக்க விரதஞ் செய்துகொள்ள வேண்டும். மணந்து கொண்டோர் தங்கள் மனைவியருக்குக் கல்வி கற்பிப்பதைத் தங்கள் கடமையாகக் கொள்ளல்வேண்டும்.

### மதுபானம்

நமது சமூகத்திற்கே அபகீர்த்தியை விளைவிப்பதும் நமது சமூகத்தை அடியோடு முன்னேறவொட்டாது தடுப்பதும் மதுபானமேயாகும். இதையொழித்தற்குத் தீவிரமான முயற்சிகள் செய்தல் வேண்டும். இளைஞர்கள் இப்பழக்கத்தை மேற்கொண்டிருப்பின் இன்றே விட்டொழித்தல் வேண்டும். இப்பழக்க முடையாரிடம் சென்று குடியாதிருக்கும்படி பணிந்து கேட்டுக் கொள்ளவேண்டும். தென்னை பனை முதலிய மரங்களைக் கள்ளுக்கு விடுவோரிடம் சென்று கள்ளுக்கு விடாதிருக்கும்படி பணிந்து வற்புறுத்தல் வேண்டும். கள்ளுக்கடை மறியல் முதலியனவும் செய்ய இளைஞர்கள் துணிவுடன் முற்படவேண்டும். அடுத்தவாண்டு நமது மகாநாடு கூடுவதற்குள் நம்மவரில் மதுபானஞ் செய்வோர் ஒருவருமிலராகச் செய்யும்படி ஒவ்வொரு செங்குந்த இளைஞனும் வாக்குறுதி செய்து கொள்ள வேண்டும்.

### ஒழுக்கம்

வாலிபர்களே பின்னால் நமது சமூகத்தை நடத்துவோ ராகவேண்டியவ ராகையால் வாலிபர் தங்கள் ஒழுக்கங்களைச் சீர்பெற வமைத்துக்கொண்டால் பின்னால் நமது சமூகம் ஒழுங்காகச் செல்லும் என்று உறுதியாகச் சொல்லலாம். அப்போது நமது சமூகம் பிற சமூகங்களுக்கு வழிகாட்டியாகவுமிருக்கும்.

“தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டும்” என்பது பழமொழியாயினும் வாலிப காலத்தில் நமது குணங்கள் மாறுதலுக்கேற்ற நிலைமையை அடைவதால் நமது தீக்குணங்களை அப்போது நமது முயற்சியால் மாற்றிக்கொள்ளுதல் அருமையன்று.

நமது சிறுவர்களும் வாலிபர்களும் பெரியவர்களும் கூட இழிமொழிகள் நிறைந்த பேச்சுக்களை சாதாரணமாகப் பேசுதலைக் காணலாம். இது நமக்குள்ள தாழ்ந்த நிலையைக் குறிப்பதாகின்றது. வாலிபர்கள் இதுபோன்ற இழிமொழிகளைப் பேசுவதில்லை என்று வாக்குறுதி செய்து கொண்டு அவ்வாறு பேசுதலை ஒழித்தலோடு தாங்கள் பெற்றோராகுங்கால் தங்கள் குழந்தைகள் அத்தகைய பேச்சுக்களைப் பேசாதிருக்கப் பழகுவிக்கவேண்டும்.

நமது சிறுவர்கள் தீயொழுக்கங்களைக் கடைப்பிடிப்பதில் மிகுந்த சமர்த்தர்களாக விருக்கின்றார்கள். சுருட்டுக் குடித்தல், பொடி போடுதல் முதலிய பழக்கங்களை மிகவெளிதில் பழகிவிடுகின்றனர். அவ்வவ்வூரிலுள்ள இளைஞரியக்கங்கள் இத்தகைய தீயவொழுக்கங்களால் உடலுக்குண்டாகும் தீமைகளை விளக்கி அவர்களை இத்தகைய தீயவொழுக்கங்களை விட்டுவிடும்படி செய்தல் வேண்டும்.

நமது வாலிபர்களிற் சிலர் கல்வியின்மையாலும், தீச்சார்பாலும் உடல்நலக்கேட்டை விளைவிக்கும் கூடாவொழுக்கங்களில் தலைப்படுகின்றனர். அதனால் அவர்கள் அடையும் பிணிக்கோரளவில்லை. நம்மவரில் பெரும்பாலார் வறியராகலின் அப்பிணிகளைப் போக்கிக் கொள்ளுதற்கு வழியின்றி நெடுநாள் பிணியால் வருந்திப் பின்னர் இறந்து படுகின்றனர்.

நமது பெண்களுக்கிருக்கும் கட்டுப்பாடுகள் நமது வாலிபர்களுக்கு மிருப்பின் அவ்வாறு கெட்டுப் போகாரென நம்புகிறேன். அற்பங்களுக்கெல்லாம் பெண்களைக் கடியும் ஆடவர்கள் தங்கள் ஒழுக்கத்தைச் செவ்விதின் காப்பாற்றாதிருப்பது என்ன மடமை என்று கேட்கிறேன்.

### இளமை மணம்

தங்கள் புதல்வர்களின் ஒழுக்கத்தின்மீது நம்பிக்கைக் குறைவாலோ அல்லது செல்வம் பாராட்டியோ நமது சமூகத்தினருக்குள் இளமை மணம் நடைபெற்று வருகிறது. அதை யொழிப்பதற்குச் சட்டங்கள் ஏற்பட்டிருந்தும் அரசாங்கம் பராமுகமா யிருப்பது வருந்தத் தக்கது. இளமை மணத்தால் ஏற்படும் இன்னல்கள் பலப்பல. ஒரு குடும்பத்தைக் காப்பாற்றும் திறமையில்லா வொருவனைக் குடும்ப பாரத்தை வகிக்கச் செய்வது பாவமல்லவா? அன்றியும் இளமை மணத்தால் பிறக்கும் சிசுக்கள் எக்கதியடைகின்றன என்பது அறிந்ததே. கருப் பை நன்றாய் வளராத முன்பே கருவுண்டாவதால் தாய்க்கும் சிசுவுக்கும் ஒருங்கே மரண முண்டாகலாமன்றோ? இத்தகைய மரணங்களால் எவ்வளவு துக்கமும் பொருள் நஷ்டமும் உண்டாகின்றன என்பதைக் கவனிப்பின் இத்தகைய மணங்கள் செய்ய முற்படுவாரா? இளமை மணத்தினாலல்லவோ பாலிய விதவைகள் பெருகுகின்றனர்? நமது இளைஞர் இனியாயினும் இத்தகைய மணங்களுக்கு இடந்தாதிருக்கும்படி வேண்டுகிறேன்.

### பிரமசரியம்

அன்றியும் நம் வாலிபர் 20 வயது வரையிலாயினும் பிரமசரிய விரதம் காத்தல்வேண்டும். பெண்களும் குறைந்தது 15 வயது வரையில் அவ்விரதத்தைக் காத்தல் நல்லது. அவ்விரதத்தைக் காத்தல் வேண்டுமாயின் தீய நினைவுகளை அகற்றுதல் வேண்டும்; தீயொழுக்கத்திற் செலுத்தும் நாவல்கள் படித்தல், நாடகங்கள் சினிமாக்களுக்குப் போதல் இவற்றை யொழித்தல்வேண்டும்; மனதைப் பலப்படுத்தவேண்டும். மனவுறுதிதான் எல்லாவற்றையும் சாதிக்க வல்லது. காலை மாலைகளில் இறைவழிபாடு செய்தல் மனதைத் தூயதாக்கும். ஒழுங்கான உணவு உறக்கம் முதலியனவும் இதற்கு அவசியமானவை.

### உடற்பயிற்சி

எல்லாவற்றிற்கும் ஆதாரமான உடலைப் பாதுகாத்தல் மிகவும் அவசியமானது. திடமான மனது திடமான உடலிலே (A sound mind in a sound body) என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. ஆதலால் மனோபலம் பெறுவதற்கும் தேகதிடம் இருக்கவேண்டும். நாம் உலகில் மேன்மை அடையவேண்டுமாயின் உள்ளத்தை உயரிய நோக்கங்களால் நிறைவிக்கவேண்டும்: உறுதி, விடாமுயற்சி முதலிய குணங்களால் நிறைவிக்க வேண்டும்.

'உள்ளத்தனையது உயர்வு' ஆகலின். ஆனால் திடமான உடலையுடையோர்க்கே மனோபலம் உண்டாம். அன்றியும் உடல் சௌக்யமாக விருக்க வேண்டுமாயின் உடற்பயிற்சி செய்தல் அவசியமானது.

மாணவர்கள் தாங்கள் படிக்கும் பாடசாலைகளிலேயே உடற்பயிற்சி செய்யலாம். பாடசாலையில் வசதியில்லா மாணவர்களும் மற்ற வாலிபர்களும் தங்கள் தங்கள் ஊர்களில் உடற்பயிற்சிக் கூடங்கள் அமைத்துக்கொண்டு காலை மாலைகளில் உடற்பயிற்சி செய்யலாம். நெசவுத்தொழில் முதலிய செய்யும் வாலிபர்களும் உடற்பயிற்சி செய்தல் இன்றியமையாதது. துவக்கத்தில் அயர்வும் நோக்காடும் தருமாயினும் சின்னாள் பழகிய பின்பு சுகமும் பலமும் தரும்.

இதற்கும் மேற்கூறியவற்றிற்கும் 'அவர் அதைச் சொல்வார்' இவர் இதைச் சொல்வார்' என்று பின்னிடுதல் கூடாது. ஒழுங்கானதும் நியாயமானதும் நன்மை தரத் தக்கதுமான எதையும் எவ்வளவு துன்பந் தருவதாயிருப்பினும் அஞ்சாது செய்ய முற்படுதல் வேண்டும். இளைஞர்களே! விவேகானந்தர் கூறியவண்ணம் "எழுமின்! விழிமின்! கருதிய கருமம் கைகூடும்வரை சலியாதுழைமின்!!".

முடிவுரை

வாலிப சகோதரர்களே, உங்களுக்குப் பணிவார்ந்த வணக்கம். எங்களுடைய ஏற்பாடுகளில் பல குறைகள் நிகழலாம். அவைகளை யெல்லாம் பொறுத்துக்கொண்டு நமது தலைவர் பணிக்கும் வண்ணம் நமது கடமைகளையாற்றி நமது சமூகத்திற்குத் தொண்டு செய்ய முற்படுவோமாக. வெற்றிவேலன் உற்றதுணையாகுக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

---

இரண்டாவது வாலிபர் மாகாநாட்டைத் திறந்து வைத்த தக்கோலம் திருவாளர்

## அ. ரா. செல்லப்ப முதலியார் அவர்கள் சொற்பொழிவு

எனது வாலிப சகோதரர்களே! சகோதரிகளே!


இவ்வாலிபர் மகாநாட்டைத் திறந்து வைக்கும் உயரிய கௌரவத்தை எனக்குத் தாங்கள் அளித்ததற்காக என் உள்ளத்தினின்று மெழு நன்றி சொல்லால் எடுத்துரைக்கும் தகையதன்று. இம்மகாநாட்டை அனுபவமும், ஆற்றலும், வீரமும், யுக்தியும் நிறைந்த தலைவரொருவர் திறந்து வைத்திருப்பின் அது மிகப் பொருத்தமா யிருந்திருக்கும். அன்னவர் அனுபவ ஞானத்தோடு நாம் இனி செய்ய வேண்டும் பணிகளைப் பகர்ந்துரைக்க வாய்ப்புடையவராவார். ஆயினும் இவ்வாலிபர் மகாநாட்டை ஒரு வாலிபரைக்கொண்டே திறந்து வைக்க வேண்டுமென்று எனக்காணையிட்டுள்ளீர்கள். உங்களாணைக்கஞ்சி யானும் இணங்கினேன். ஒரு தொண்டனுயிருக்கின்ற நான், எனக்கிட்ட பணி யெதுவோ அதினின்று பணியாற்றுவதே என் கடமை. ஆகவே, இப்பெரும் பதவியை எனக்களித்ததற்காக நான் மிக இறும்பூதெய்தி எனது நன்றியறிதலை மீண்டு மொருமுறை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தொண்டின் இலக்ஷணம்


இளைஞர் மகாநாடு கூட்டுவது இப்போது வெகு சகஜமாகிவிட்டது. எந்த விதமான கொள்கையாயிருப்பினும் அதனை நடத்திக்காட்ட இளைஞர்கள் அவசியம் வேண்டப்படுகிறார்கள். அரசியல் கூட்டத்தாரும் வகுப்புச் சங்கத்தினரும் தங்கள் தங்கள் இயக்கங்களுக்கு வேலை செய்ய இளைஞர்களையே கூட்டி ஊக்க மளித்து விடுகிறார்கள். அதே முறையில் நமது சமூகத்திற்குத் தொண்டு செய்யுமன்பர்களுக்கு ஊக்கமளித்து உற்சாகப்படுத்துவதற்காகவே இவ்விளைஞர் மகாநாடு கூட்டப்பட்டிருக்கின்றது. இம்மாதிரி மகாநாட்டைக் கூட்டி விடுவதால்மட்டும் பயனில்லை. தொண்டின் தன்மையை உணர்ந்து காரியத்திலும் உண்மையுணர்வுடன் நன்மைக்கான தொண்டை மேற்கொள்வதே சால்புடைத்தாகும். நிதானமாக யோசித்துப் பார்த்தால், உலகத்திற்கு வேண்டியது துன்பமற்ற இன்ப நிலையேயாம். அதற்கான தொண்டு செய்வதுதான் உத்தமமான தொண்டாகும்.

தொண்டர்கள் யார்?


தொண்டு செய்ய முற்படுவோர்களனைவரும் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராகவே மதிக்கப்படுவார்கள். சிறந்த இலட்சியங்களுக்காகப் பாடுபட முன்வரும் தொண்டர்கள் தியாகம் செய்துதான் தீரவேண்டும். தாங்கள் மேற்போட்டுக்கொண்ட தொண்டுக்காக உயிர் விடுவதாயினும் சித்தமாயிருக்க வேண்டும். தமது நிலை தளர்வதையோ, காரியம் கெடுவதையோ கருதாமல் சமூகத்திற்காகத் தம்மைப் பலி கொடுக்கவும் உண்மைத் தொண்டர்கள் தயாராயிருப்பார்கள். பஞ்சு மெத்தையில் துயிலும், பாயாசத்துடன் போஜனமும், பார்வையான மோடார் சவாரியும் தொண்டர்களுக்குக் கிடைக்காது. பட்டினியையும், பசியையும் பொருட்படுத்தாமல் கிராமங்கள் தோறும் சென்று திரும்பவும் சந்தர்ப்பங்கள் நேரும். பனியால் நனைந்து வெயிலாலுலர்ந்து பலவித கஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டியிருக்கும். தொண்டர்களுக்கு இவற்றை யெல்லாம் சகித்துக்கொள்ள மன உறுதியும் அமைதியும் வேண்டும். வாலிபர்களுள்ளம் தான் குடும்பக் கவலைகளால் நிரப்பப்படாமல் பரிசுத்தமாயிருக்கும். வயோதிகர்களோ அவ்வாறின்றிக் கவலையால் சூழப்பட்டு என்றும் நிம்மதியற்றவர்களா யிருப்பார்கள். ஆகையால் தொண்டிற்குரியார் யார்?




திரு. S. மீனாக்ஷிசுந்தர முதலியார், பி.எ., எல்.டி.,
வாலிபர் மகாநாட்டுத் தலைவர்




திரு. சா. ரா. தங்கவேல் முதலியார்
வாலிபர் மகாநாட்டு வரவேற்புத் தலைவர்



திரு. M. குருசாமி முதலியார், சேர்க்காடு
(பென்ஷன்டு சப்ஜேதார்)
வாலிபர் மகாநாட்டு வரவேற்புக் கழக உபதலைவர்.



திரு. கா. தெய்வசிகாமணி முதலியார்
மகாநாட்டுப் பொதுக் காரியதரிசி.



திரு. க. குழந்தைவேல் முதலியார், ஐயம்பேட்டை
சமூக மகாநாட்டு வரவேற்புக் கழக உபதலைவர்.



என்று பார்க்கும்போது வாலிபர்களென்று தெற்றென விளங்கும். இந்த நமது இளமைக் காலமே இத்தொண்டிற்குரிய காலம் •இதுதான் அச்சமற்ற ஆண்மையுடைய காலம். இக்காலத்தை நாம் வீணுக்கிவிடுதல் கூடாது. மனிதர் உயிர் நீப்பது கட்டுப்பாட்டுக் குட்பட்டதல்ல. எந்த நேரமாயினும் மரணம் நேரும். அதை எப்பொழுதென்றும் செப்ப முடியாது. ஆதலால் அறிவறிந்த காலத்தில் நம்மால் கூடிய நல்ல காரியத்தை நாம் தைரியமாய்ச் செய்வோம். என்றைக்கும் உயிர் நீப்பது நிச்சயமாதலால், நாம் தலையிட்டுள்ள உத்தமத் தொண்டில் உயிர்விட நேரிட்டாலும் அக்கரையில்லை. இருந்தால் வீர இளைஞரை உயிர் வாழ்வோம். இறந்தாலும் வீர இளைஞரகவே உயிர் விடுவோம். உண்மைத் தொண்டர்களுக்கு இத்தகைய உன்னத நோக்கங்களிருக்க வேண்டுமென்று நான் கூறுவது மிகையாகாதென்றே கருதுகின்றேன்.

இளந்தொண்டர்கள் வீரம்.

இளைஞர்களே தொண்டிற்குரியாரென்று கூறினேன். அதற்கு உலக சரித்திரத்திலுள்ள சான்றுகள் சிலவற்றை எடுத்துக்காட்டுகிறேன். கிரேக்கர் முதல் துருக்கியர் வரை இளைஞர்களின் தொண்டாலேயே முன்னுக்கு வந்தார்கள். இத்தாலியா தேசம் உன்னத நிலைமைக்கு வருவதற்கு, மாஜினி, கரிபால்டி போன்ற அறிஞர்கள் இளைஞர்களைக் கூட்டிக்கொண்டு செய்த கிளர்ச்சியல்லவா காரணம்? கிரீஸ் தேசத்து மூட நம்பிக்கைகளைப் போக்கடித்தது யார்? சாக்ரடீஸ், ப்ளாட்டோ, ப்ளினி போன்ற தியாகிகளும் அவர்களின் வாலிப சீடர்களுமல்லவா? பிரான்ஸ் தேசத்தில்தானென்னே? ஜனநாயக விதையை விதைத்த நெப்போலியன் சேனை தேசாபிமான மிக்க வாலிபர்களாலேயே தானே ஆக்கப்பட்டிருந்தது. அவ்வாலிபர்களின் பாராட்டுதற்குரிய வீரமல்லவா நெப்போலியனை "ஐரோப்பாவின் கிலி" என்று பெயரெடுக்கச் செய்தது? ஜெர்மனி தேசத்தை யெடுத்துக் கொள்ளுங்கள். அதன் நிர்மாண கர்த்தவாகிய பிஸ்மார்க்குக்குப் பக்கபலமாயிருந்தவர் அத்தேச வாலிபர்களல்லவா? மகா யுத்த காலத்தில் கெய்சர் சக்கரவர்த்திக்கும், ஜெர்மனிக்கும் என்றும் மாறாப் புகழை வாங்கிக்கொடுத்தவர் அத்தேச இளைஞர்களல்லவா? பிறகு குடியரசை நிறுவி, வான் ஹிண்டன்பர்க்கை தலைவராக்கியவர் அத்தேசத்தின் வாலிபர்களல்லவா? கொடுங்கோலாட்சி நிறைந்திருந்த ருஷ்யாவை இன்று உலகம் கண்டு அஞ்சத்தகுந்த உன்னத நிலைக்குக் கொண்டு வந்தது யார்? லெனின், ட்ராட்ஸ்கி, ஸ்டாலின் போன்ற இளைஞர்களாலல்லவா சோவியட் அரசாட்சி ஏற்பட்டது? ருஷ்யப் புரட்சிக்கு ஜீவநாடியாயிருந்தவர்களும், மதப்புரட்டை அந்நாட்டில் தலையெடுக்காமல் விரட்டி யடித்தவர்களும், இன்று கடவுள் புரட்டைக்கூட தகர்க்கப் போராடிக் கொண்டிருப்பவர்களும், அத்தேச வாலிபர்களென்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. சம்மையாளும் பிரிட்டிஷ் சர்க்காரின் ஏகாதிபத்திய வாழ்வும், வர்த்தக மேம்பாடும், அத்தேச வாலியர்களின் இடையரு முயற்சியா லேற்பட்டதல்லவா? அயர்லாந்திற்கு எப்படிச் சுதந்திரம் ஏற்பட்டது? சின் பின் புரட்சி எத்தனை வாலிபர்களின் இரத்தத்தைக் குடித்திருக்கின்றது? கார்க் நகர மேயரா யிருந்தவரும், தன் நாட்டிற்கு உயிரை இரையாக்கிய வள்ளலுமாகிய மாக்ஸ்வினியன் சவக்குழியின் மேலல்லவா தற்போதிய ஐரிஷ் சுவாதீன அரசாங்கம் நிறுவப்பட்டிருக்கின்றது. அமெரிக்கா உன்னத நிலக்கு வரக் காரணமா யிருந்தவர்கள், வாஷிங்டன், பேஜ் முதலியவர்கள் காட்டிய வழி நின்றுழைத்த அத்தேச வாலிபர்களல்லவா? ஐரோப்பிய வல்லரசுகள் கண்டு எள்ளி நகையாடி வந்த துருக்கியை இன்று சிகரம்போல் விளங்கச் செய்தது யார்? கமால் வீரரால் நிறுவப்பட்ட வாலிப துருக்கியர் சங்கமல்லவா பிற்காலத்தில் அங்கோரா கவர்ண்மெண்டாக மாறியது? உறம்பெற்ற மனதுடைய, அவ்வாலிபத் தொண்டர்களாலல்லவா அத்தேசத்திய மூட நம்பிக்கைகளும், குருட்டுப் பழக்க வழக்கங்களும் மதப்பூச்சாண்டிகளும் பஞ்சாகப் பறந்தோடின? எகிப்து, கொரியா, போன்ற தேசங்களிலெல்லாம், அத்தேச இளைஞர்களல்லவா உயிருக்கும் துணிந்து சுதந்திரப் போராட்டத்தி லீடுபட்டனர்? ஜப்பான் தேசத்தின் வெகு துரிதமான முன்னேற்றத்திக்கும் இன்றையதினம் அவர்கள் அதிசயிக்கத்தக்க விதமாக அபிவிருத்தியடைந்து வருவதற்கும் அத்தேச வாலிபர்களல்லவா காரணம்? சைனு தனது பழைய மாமூல்களை ஒரேயடியாக ஒதுங்கக்கட்டி வைத்துவிட்டு ஒற்றுமையும் உயர்வும் பெற்றதற்கு, சன்யர்ட்சென்னும் அவரது வாலிப வீரர்களுமல்லவா காரணம்? ஆப்கானிஸ்தானத்தை எடுத்துக் கொள்ளுங்கள். பாச்சர்சாக்கோவின் கொடுங் கோலாட்சியை நிர்த்தூளாக்கி அமீர் நாதிர்கானின் ஆட்சியை ஏற்படுத்தியவர்கள் அத்தேச வாலிபர்களல்லவா? பர்ஷியாவும் சொற்ப காலத்திற்குள் உயர்நிலை யடைந்தது ஆண்மை படைத்த அத்தேச வாலிபர்களால் தான். இன்னும் இதேபோன்று எல்லா நாடுகளும் அவ்வந்தத் தேச வாலிபர்களால்தான் மேனிலை யெய்தி யிருக்கின்றன.

அதிகம் போவானேன்? நம் நாட்டு விடுதலைக்காக எத்தனை ஆயிரம் வாலிபர்கள் சிறை சென்று கஷ்டப்பட்டார்கள்? இன்னும் படுகிறார்கள்? சரியாகவோ—அன்றித் தப்பாகவோ, இன்று வட இந்தியாவில் உயிரையும் வெறுத்துப் புரட்சி செய்கின்றார்கள்? பகவத்சிங்கும் அவரது சகாக்களும் எவ்வளவு ஆனந்தமாகத் தேசத்தின்பொருட்டு உயிரை விட்டார்களென்பதை உங்களுணர்ச்சியாலளந்து பாருங்கள்! அவர்களது செய்கை தவறான முறையில் திருப்பப்பட்டதென நினைத்தாலுங்கூட அவர்களது ஆண்மையையும் திடமான தியாக உணர்ச்சியையும்ஒருவரும் மறக்க முடியாது. உத்தமமான இலட்சியங்களுடன் மட்டும் நில்லாமல் ஊக்கமாகவும் போராடி அயல்நாட்டு வாலிபர்கள் தங்கள்

தங்கள் தேசத்திற்கு ஆக்கம் தேடி யிருக்கின்றார்கள். அதே போன்று நம் நாடோ, அன்று நம் சமூகமோ, உயர்நிலை யடையவேண்டுமானால், அது வாலிபத் தொண்டர்களாகிய நம் போன்றார் கையில்தா னிருக்கிறது.

### செங்குந்தர்களின் பண்டைப் புகழ்

பண்டைநாளிலே நம் சமூகமானது மிக்க உன்னதமான நிலைமையிலிருந்தது. இதற்கு ஆங்காங்கே காணப்படும் கல்வெட்டுக்களே போதிய சான்றாகும். நாம் செங்கோலோச்சினோம்; வீரர்களாய் வாழ்ந்தோம்; பெரும் கல்வியாளர்களாய்த் திகழ்ந்தோம். முற்காலத்திலே நாம் மிக மேன்மையுற்றிருந்தோமென்பதற்கு அநேக சான்றுகளுள்ளன.

### செங்குந்தர்கள் வீழ்ச்சிபெற்ற நிலை

பண்டைப்புகழைப் பற்றிப் பன்னிப்பன்னிப் பேசுவதில் பிரயோஜனமில்லை. தற்போதோ நம் வீரம் விலகிற்று. நம் மாண்பு மங்கிற்று. நம் சீர்மை சிதைந்தது. கல்வியிலும் அந்தஸ்திலும், கைத்தொழில் வியாபாரங்களிலும் நம் சமூக மடைந்துள்ள ஏழ்மைத்தனத்தை யுன்னும்போது நமக்கு வெட்கமுண்டாகவில்லையா? இதர சமூகங்களடைந்துள்ள முன்னேற்றத்தை யறிந்து நாம் எல்லாச் சமூகங்கட்கும் ஓரடி முன்னதாகச் செல்லுதல் வேண்டும். இல்லையேல் மிகுந்த மேலான வீழ்ச்சியை யடையவேண்டியதுதான்.

### கல்வி

ஒரு சமூகம் முன்னேற்ற மடைவதற்கு அடிப்படையானது கல்விதான். கல்விச் செல்வமே கைகண்ட செல்வம். கல்வியானது நம் சமூகத்தில் போதுமானபடி முன்னேற்ற மடையவில்லையாயின் நம் சமூகம் முன்னேற்ற மடையவே முடியாது. இதை நீங்களுணர்ந்து அதற்கான ஏற்பாடுகளை விரைந்து செய்வீர்களாக.

### நமது வேலை

எனது இளந்தோழர்களே! நம் சமூகத்தின் முன்னேற்றம் இளைஞர்களிடமே யுள்ளது. நீங்கள் நம் சமூகம் முன்னேற்ற மடைந்து உயர்ந்த நிலையை வகிக்க விரும்புகின்றீர்களா? இதுபோழ்துள்ள தாழ்ந்த நிலையிலேயே இருக்க விரும்புகின்றீர்களா? மனோதிடமும், ஆண்மையும், ஆற்றலும் கொண்டு சமூக முன்னேற்றத்தின் பொருட்டு தொண்டு புரிய முன் வாருங்கள்! நம் சமூகத்தில் காணப்படும் மூடப்பழக்கங்களையும் குருட்டு நம்பிக்கைகளையும் நிர்த்தூளாக்குங்கள்!! கல்வியில், கலையில், கைத்தொழிலில் முன்னேறுங்கள்!!! இனி உறக்கம் வேண்டாம். உறங்குவதற் கிது காலமன்று. உங்கள் முயற்சிகள் நற்பயனளிக்குமாக.

---

இரண்டாவது வாலிபர் மகாநாட்டுத் தலைவர் உயர் சைவத் திருவாளர்

## S. மீனாக்ஷிசுந்தர முதலியார் B.A., L.T., அவர்களுக்கு

ஷை மகாநாட்டு வரவேற்புக் கழகத்தினர் உவந்தளித்த

## நல் வரவேற்புப் பத்திரம்.

**செங்குந்த குலத்துச் சீரிய மணியே!**

தங்கள் வரவு நல்வரவு ஆகுக. எங்கள் சங்கம் இன்புடனேங்குக. இளமைக்காலந் தொட்டு விடா முயற்சியாலும், சொந்த உழைப்பாலும், ஆங்கிலப் பெரும் பரீக்ஷையிற்றேர்ந்து, பலவழியிலும் பெருமை பெற்று விளங்குகின்ற தாங்கள், இந்நகரில் இன்று கூடும் தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாட்டுப் பெருவிழாவுக்குத் தலைமை வகிக்க எங்கள் வேண்டுகோட்கிணங்கி விஜயம் செய்தமைக்குப் பெருமகிழ் வெய்துகின்றோம்.

**செயற் கருஞ் செய்கை செயவல தீர !!**

சமூக சேவையே தக்கதெனக் கருதி முன்னேற்றத்துக்குரிய அரும்பெருங் காரியங்களைச் செய்து வருகின்ற தாங்கள் ஈரோட்டில் நம் முதலாவது மகாநாட்டுத் தொண்டர்படைத் தலைவராயிருந்து ஆற்றிய அருஞ்செயல்களை என்னென் றுரைக்க வல்லோம்.

**ஆங்கிலங் கற்றுத் தீங்கெலாங் கடிவோய் !!!**

நல்லாசிரியரிலக்கணங்கள் முழுதும் கொண்டிலங்குகின்ற தாங்கள், சிவகெங்கை இராஜாஸ் ஐஸ்கூலில் தலைமை ஆசிரியராக அமர்ந்து மாணவர்களிடத்துப் பேரன்பு, நடுநிலைமை, பரோபகாரம் முதலிய தூய நற்குணங்களுடையராய்த் திகழ்கின்றமையைக் குறித்து நாங்கள் பெருமை பாராட்டிக் கொள்கின்றோம்.

**குறைவிலா தோளிரும் நிறைகுணக் குன்றே !!**

தாங்கள் எங்கள் வேண்டுகோட்கிணங்கிச் சிரமம் பாராது இங்கு விஜயஞ் செய்து தலைமை வகித்தமைக்கு நாங்கள் என்ன கைம்மாறியற்ற வல்லோம். எல்லாம் வல்ல ஸ்ரீ கச்சபேசுவரர் இன்னருளால், நோயின்மை நீண்ட ஆயுள், பொருளுடைமையாகிய எல்லா நலன்களையும் பெற்று நீடூழி வாழ வேண்டுகின்றோம்.

நலம்! நலம்!! நலம்!!!

செங்குந்த வாலிபர் சீரோடு நிலவுக!

காஞ்சீபுரம்,
16—5—1931.

இங்ஙனம்,
வரவேற்புக் கழகத்தினர்.



## உயர் திரு. S. மீனாக்ஷிசுந்தர முதலியார் B.A., L.T., அவர்கள் சொற்பொழிவு.

சகோதரிகளே! சகோதரர்களே!

என்னைக் காட்டிலும் அநுபவத்திலும், சமூகத் தொண்டிலும் தியாகத்திலும் சிறந்த பலர் நம் சமூகத்தில் இருக்க, என்னை நீங்கள் இம் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கத் தெரிந்தெடுத் திருப்பது எனக்கு வியப்பைத் தருகின்றது. சமூக சேவையில் ஈடுபடாத என்னை அதில் ஈடுபத்த எண்ணித்தான் இக்கௌரவத்தை எனக்கு அளித்திருக்கின்றீர்கள் என்று நான் நினைக்கின்றேன். ஆனால் நான் இதைச் சமூகசேவைக்கு ஒரு சந்தர்ப்பமாகக் கருதி யிருக்கின்றேன். இத்தகைய சந்தர்ப்பத்தை எனக்கு அளித்தமைக்கு உங்களுக்கு என்மனமார்ந்த வந்தனம்

வாலிபர்களே! நாம் உலக சரித்திரத்தின் ஒரு மகத்தான காலத்தில் வசிக்கின்றோம். உலகமெங்கும் புதிய உணர்ச்சி தோன்றி யிருக்கின்றது. மக்களெல்லாம். புத்துயிர் பெற்றிருக்கின்றனர். நெடுநாள் உறங்கிக்கிடந்த நம் தாய் நாடாம் இந்தியா திடீரென விழிப்புற்றது. நூற்றாண்டுகளில் செய்து முடிக்காத காரியங்களைச் சில மாதங்களில் செய்துவிட்டது. நம் நாட்டோடு உறங்கிக் கிடந்த நாமும் சமீபத்தில் விழிப்படைந்தோம். நம்மைத்தட்டி எழுப்பியவர்கள் பாக்கியவான்கள். உண்மைத்தியாகிகள். செங்குந்தர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்வதே இழிவென எண்ணியிருந்தார்கள் நம்மில் அநேகர். செங்குந்தமித்திரன் பத்திரிகையைத் தொடாமல் தூக்கி யெறிந்தவர்கள் எனக்குத் தெரியும். ஒரு ஜில்லாவிலுள்ள செங்குந்தர்கள் மற்ற ஜில்லாவிலுள்ள செங்குந்தர்களை விரோதிகளாகக் கருதாவிடினும் அந்நியர்களாகவே கருதி வந்தனர். நாம் ஆறுலக்ஷம் தொகையினர் என்பதைக் கனவிலும் கருதினோமல்லோம். ஆனால் ஒரு சில சமூகத் தொண்டர்களின் முயற்சியால் நாம் விழிப்புற்றோம்; ஒன்று பட்டோம். நம்முள் தோன்றியுள்ள உணர்ச்சியின் அளவு ஈரோட்டில் நடந்த நம்மவர் முதல் மகாநாட்டிற்கு வந்திருந்தவர்களுக்கு நன்கு தெரியும்.

இவ்வுணர்ச்சியைக் குறையவிடாமல் மேன்மேலும் வளர்ப்பது வாலிபர்களாகிய உங்களது கடமை. வாலிபர்களே! நம் சமூகத்தின் உயர்வும், கௌரவமும், முன்னேற்றமும் உங்கள் கையிலிருக்கின்றன. நாம் இதுவரை செய்துள்ள காரியங்கள் மிகச்சில. செய்யவேண்டியவை கணக்கில. பொருளாதார நிலையிலும், கல்வியிலும், மாதர் முன்னேற்றத்திலும், அரசியல் துறையிலும் நாம் எவ்வளவோ முன்னேறவேண்டி யிருக்கின்றது. இந்தியா அதி விரைவில் சுதந்தரமடையும். சுதந்தர இந்தியாவில் நீங்கள் கௌரவமான ஓர் நிலையை வகிக்க விரும்புகின்றீர்களா? அன்றி பிற்போக்கான சமூகத்தார் என ஒதுக்கப்பட விரும்புகிறீர்களா? விடுதலை பெற்ற இந்தியாவில் முன்னேற்றமடைந்த சமூகங்களுக்கே எல்லா ஏற்றமும் கிடைக்கும். இதைக் கருத்திற்கொண்டு நாம் பாடுபடுவோமாக. மௌனமாய் இருப்பவன் மறக்கப்படுவான். முன்னேறாதவன் பின்னடைவான். நின்ற நிலையிலே நிற்பவன் முன்னேறுபவர்களால் தள்ளப்பட்டு மிதிக்கப்படுவான். ஆகையால் வாலிபர்களே! முன்னேறுங்கள். எத்துணை இடர்வரினும் அஞ்சற்க. வாலிபத்திற்கு வலிமையுண்டு, தளராத சிந்தையுண்டு. இடரெல்லாம் எதிர்த்து நிற்கும் ஆற்றலுண்டு. இரும்பினும் வலிய மன உறுதியுண்டு. அலைகடல்போல் பரந்த நோக்கமுண்டு. அனைத்தையும் தியாகம் செய்யும் ஆசையுண்டு. உலக சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் வாலிபர்களின் சக்தி நன்கு புலனும். சமீப காலத்தில் விடுதலை யடைந்த எகிப்து, அயர்லாந்து, ருஷியா, துருக்கி முதலிய நாடுகளின் விடுதலைக்கு அந்நாடுகளின் வாலிபர்களே காரணம்.

ஆகவே, ஒட்டக்கூத்தர் பெருமானின் ஈட்டியெழுபதிற்கு ஆயிரஞ் சிரங்களை அறுத்துக் கொடுத்த நம் வாலிபர்களுக்கு நம் சமூகத்திலுள்ள குறைகளைக் களைந்து அதை முன்னேற்றமடையச் செய்வது ஒரு பெருங்காரியமல்ல. நம்மரபின் முன்னேற்றத்திற்கு முதற்பெருந் தடையாக நிற்பது நமக்குள் உள்ள ஒற்றுமை யின்மையேயாகும். ஒன்று பட்டாலுண்டு வாழ்வே நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே என்பதை இன்னும் நாம் உணரவில்லை. நம்மில் ஒற்றுமை இல்லாததனால் எடுத்த காரியங்கள் எதிர்பார்க்கும் பயனை அளிப்பதில்லை. அற்ப வித்தியாசங்களுக்கும் அபிப்பிராய பேதங்களுக்கும் நாம் கக்ஷிகளை யேற்படுத்திக்கொள்கிறோம். கக்ஷிச்சண்டைகள் இல்லாத செங்குந்த நகரமோ கிராமமோ இல்லையென்றே உறுதியாகச் சொல்லலாம். இக் கக்ஷிச் சண்டைகளுக்குக் காரணங்களை ஆராயப் புகுந்தால் தான் நமக்கு நகைப்பு உண்டாகின்றது. தாடி வளர்ப்பதா கூடாதா, கிராப்பு வைப்பதா குடுமி வைப்பதா, விக்கிரக ஊர்வலத்தை முதலில் இந்த முதலியார் தெருவழியே விடுவதா அந்த முதலியார் தெருவழியே விடுவதா, முதல் முதல் கோயில்களில் விபூதி யார் வாங்குவது என்ற இவை போன்ற அற்ப காரணங்களுக்காக நம்மில் பிளவுண்டாகின்றது. எனக்குத்தெரிந்த ஒரு நகரத்தின் ஒரு பகுதியில் நம்மினத்தவர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் வசித்து வருகின்றனர். அவர்களுள் சிறிய கக்ஷி பெரிய கக்ஷி என இரண்டு கக்ஷிகள் ஏற்பட்டன. அற்பமான பல காரணங்களை முன்னிட்டு அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டனர். விவகாரங்களில் பொருள்களை வாரி இறைத்தனர். தங்களுக்குள் ஏற்பட்ட கக்ஷி காரணமாக பிற ஜாதியானொருவனைத் தங்கள் பகுதிக்கு நகரபரிபாலன சபை அங்கத்தினனாக நிறுத்திவைத்து அவனுக்கு அந்த ஸ்தானத்தையும் வாங்கிக் கொடுத்தார்கள். கடைசியில் தன் மருமகனை பிருதிவிராஜனைத்

தண்டிக்க முகம்மது கோரியை உதவிக்கு நாடிய ஜய்சந்திரன் கதையாக முடிந்தது அவர்கள் பாடு. இது என்ன மடமை! செங்குந்த குலத்திலே பிறந்து செங்குந்தர்களுக்குத் தாழ்மையும் பிற ஜாதியினருக்கு உயர்வும் தேடிக் கொடுப்பவர்கள் செங்குந்தர்களா? எவ்வளவோ சங்கங்கள், ஸ்தாபிக்கப்பட்ட சில வாரங்களிலோ மாதங்களிலோ அபிப்பிராய பேதத்தாலும் கக்ஷிச் சண்டைகளாலும் அழிந்து போயின. எவ்வளவோ கௌரவ ஸ்தானங்களை இதனால் நாம் இழக்க நேரிடுகின்றது. சகேதரர்களே! இம்மாதிரி சண்டைகளுக்கு நீங்கள் இனி இடங்கொடுக்க வேண்டாம். மனிதன் என்றிருந்தால் அபிப்பிராய பேதம் இருக்கத்தான் செய்யும். நம்மிலும் மாறுபட்ட அபிப்பிராயம் கொள்பவர்கள் நம் விரோதிகளல்லர்.

அடுத்தபடியாக நமது முன்னேற்றத்திற்குப் பெருந் தடையா யிருப்பது நம்மிடையே உள்ள கல்வியின்மை. பொதுவாகக் கல்வி யறிவில்லையேல் சமூக உணர்ச்சியில்லை, பரந்த நோக்கமில்லை, தியாக சிந்தனை இல்லை, உயர்ந்த வாழ்க்கையில்லை, வாழ்வில் வேட்கையில்லை. எழுத்து வாசனை இல்லாதவனுக்குத் தொட்டதெல்லாம் தலையெழுத்து, உலகமே சுவர் கட்டாத சுடுகாடு, பெண்டு பிள்ளைகள் பெரும் பிணிகள், வாழ்வாவது மாயம், மண்ணுவது திண்ணம். நாம் திருக்கைலாய பரம்பரையினராயிருக்கலாம், முருகனுக்குப் படைத்துணையாகப் போந்தவர்களா யிருக்கலாம். பண்டைக்காலத்தில் குறுநில மன்னராயும் செங்குந்த சேனாவீரர்களாவுமிருக்கலாம். ஆனால் நாம் நம் குலப் பெருமையைப் பேசத் தகுதியுடைய வர்களல்லவே. "கல்லானொருவன் குலநலம் பேசுதல் நெல்லினுட்பிறந்த பதராகும்மே." கல்வித்துறையில் மிகவும் பிற்போக்கான நமது நாட்டிலும்கூட நூற்றுக்கு கற்றவர்கள் ஐவருண்டு. நம்மரபிலோ நூற்றுக்கு ஒருவர் கூட இல்லையே. ஆறுலக்ஷம் பேருக்கு முப்பது பட்டதாரிகள்கூடக் காணோமே. அத்தி பூத்தது போல் இப்பொழுது தான் நம்குல வாலிபரில் ஒருவர் மேல் படிப்பிற்காக இங்கிலாந்து சென்றிருக்கின்றார். இப்பெருங் குறையை நீக்கினாலொழிய நாம் ஏற்றமடைய மார்க்கமில்லை. இன்னும் 5-வருடங்களில் நம்மவர்களில் நூற்றுக்குக் குறைந்தது 50 பேருக்காவது கல்வியறிவு ஏர்படவேண்டும். இதற்காகவேண்டி கிராமங்கள்தோறும் பெரியவர்களுக்கு இலவச இரவுப் பள்ளிக்கூடங்கள் ஏற்பட வேண்டும். பள்ளிக்கூடம் போகும் வயதுடைய ஆண் பெண்கள் அனைவரும் ஆரம்பக்கல்வி கற்க வேண்டும். பணக்காரர்கள் தங்கள் குழந்தைகளுக்கு உயர்தரப் படிப்பு கொடுப்பதோடு புத்திசாலிகளாயுள்ள நம் ஏழைச் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் மேல் படிப்புக்குப் பண உதவி செய்ய வேண்டும். சில வருடங்களுக்குமுன் கல்வியில் மிகவும் பிற்போக்கான நிலையிலிருந்த எத்தனை ஜாதியார் தங்கள் குலப்பிள்ளைகளுக்கு இலவசப் பாடசாலைகளும் ஹாஸ்டல்களும் ஏற்படுத்தியும், உபகாரச் சம்பளங்கள் கொடுத்தும் இப்பொழுது முன்னுக்கு வந்திருக்கின்றனர்! தாராள சிந்தையோடு ஒன்றுபட்டு உழைத்ததின் பலன் இது. பத்திரிகைகள் நடத்தியும், சங்கங்கள் ஸ்தாபித்தும் தீவிர பிரசாரம் செய்ததின் பலனாகச் சட்டசபை, தாலூகா ஜில்லா போர்டுகள், நகரபரிபாலன சபை முதலியவைகளில் பெருவாரியான ஸ்தானங்களைப் பெற்றிருக்கின்றனர்.

தாலூகா போர்டார் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தித் தருவதாக முன்வந்தாலும் நம்மவர்கள் 'எங்கள் ஊருக்குப் பள்ளிக்கூடங்கள் வேண்டாம்' என்று புத்திசாலித்தனமாய்ப் பதிலுரைத்து விடுகின்றனர். நம் சமூகசீர்திருத்தத்தில் இதுதான் முக்கியமானதும் முதலிலே செய்துமுடிக்க வேண்டியதும். இந்த வேலைக்கு உபகாரம் செய்வது பெரும் புண்ணியம். கோயில் கட்டுதல், குளம் வெட்டுதல், சத்திரம் சாவடி கட்டுதல் முதலிய தர்மங்கள் எல்லாவற்றிலும் தலையாய தர்மம் ஒரு ஏழைக்கு வித்யாதானம் செய்தல். ஆகையால் இதற்கு

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவு மற்றவர் வாய்ச்சொல் லருளீர்
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்
எதுவுங் கொண்டிங்கு எவ்வகையானும்
இப்பெருந்தொழில் நாட்டுதும் வாரீர்.

தலைச்சங்கம் செய்துவரும் இப்பெரும் காரியத்திற்கு நீங்கள் எல்லாவிதங்களிலும் உதவி செய்ய வேண்டும்.

நம் மரபிலுள்ள ஆண்மக்களுடைய கல்வி அபிவிருத்தியே பரிதபிக்கக்கூடிய நிலையிலிருக்க, பெண்மக்கள் கல்வியைக்குறித்துப் பேசவும்வேண்டுமோ? பெண்கல்வி அவசியமா இல்லையா என்று வாதாடும் காலம் மலையேறி விட்டது என்பதை வாலிபர்களாகிய நீங்கள் நன்கறிவீர்கள். ஒரு சமூகமோ நாடோ மேம்படவேண்டில் அதன் பெண்கள் அறியாமையென்னும் அந்தகாரத்திலிருந்து வெளிவர வேண்டும் என்பதை யாரே உணராதார்? "நுண்ணிடைப் பெண் ஒருத்தி பணியிலே நூற்றிரண்டு மலைகளைத் தாண்டும்" ஆற்றல் கொண்ட வாலிபர்களாகிய நீங்கள் 'பெண்கள் ஆண்களிலும் தாழ்ந்தவர்கள். ஆகையால் அவர்களுக்குக் கல்வியவசியமில்லை' என்று கூறுவதைக் கேட்கவும் சகிக்கமாட்டீர்கள். நம் பெண்மணிகள் கல்வி யறிவில்லாதவர்களாய், மூடக் கொள்கைகளுக்கு இருப்பிடமாய், கோழைகளாய் இருந்தால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் எப்படி இருக்கும்? நிலத்தின் தன்மை பயிர்க்குளதாகுமாம். நீசத்தொண்டும் மடமையும் கொண்ட தாய் தவத்தில் மாண்புயர் மக்களைப் பெற்றிடல் சாலவே அரிதாவதோர் செய்கையாம். கற்றறியாத மனைவியோடு கல்வியறிவு நிரம்பிய வாலிபன் எவ்வாறு இல்லறத்தை இனிது நடத்த முடியும்? ஆகையால் ஆண்மக்களின் கல்வியபிவிர்த்தியை யொட்டி பெண்களின் கல்வியபிவிருத்தியும் ஏற்படுதல் மிகவும் அவசியம். பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புவி; பேணி வளர்த்திடுமீசன்; மண்ணுக்குள்ளே சில மூடர் அந்த மாதறிவைக் கெடுத்தார். கண்களிரண்டினில் ஒன்றைக் குத்திக் காட்சி



கொடுத்திடலாமா? ஆகையால் நீங்கள் செய்ய நினைத்திருக்கும் சீர் திருத்தங்கள் கைகூடவேண்டுமெனில் நம்குல பெண்களுக்குக் கல்வியறிவை யூட்டுங்கள். உலகமெங்கும் மாதர்கள் விழிப்படைந்து விட்டனர். இதுவரை ஆடவர்கள் பெண்டிரின் விடுதலைக்குப் பாடுபட்டனர். இப்பொழுது நம் நாட்டுப் பெண்மணிகள் நம் நாட்டின் விடுதலைக்கே பெரும் தியாகங்கள் செய்து வருகின்றனர். நம் குலப் பெண்மணிகள் இவர்களைக் கண்டு விழிப்படைவார்களாக.

கனவான்களே! பொருளாதார நிலையில் நாம் மிகத்தாழ்ந்த படியி லிருக்கின்றோம். வர்த்தகர்களாகவும் நிலச்சுவான்தாரர்களாகவும் உள்ள சிலர் தவிர நம்மவரில் பெரும்பான்மையோர் ஏழைகளாகவே யிருக்கின்றனர். இந்த ஏழ்மையினால் நம்மவர் வாழ்க்கை நிலை உயர்கிறதில்லை. நம் குல மக்களுக்கு உயர்தரப் படிப்பளிக்கச் சக்தியில்லை. அறிவை அபிவிருத்தி செய்துகொள்ளப் போதிய அவகாசமில்லை. பிணியினாலும் தரித்திரத்தினாலும் ஏற்படும் பலவிதக் கவலையினின்றும் தங்களை விடுவித்துக்கொள்ள மார்க்கமுமில்லை. தங்கள் குழந்தைகள் தங்கள் தொழிலுக்கு உதவி செய்வதால் தங்களுக்குக் கிடைக்கும் சிறுதொகையை அவர்களைப் படிக்கவைப்பதால் இழக்க விருப்பமில்லை. ஆகையால் நம்மவர் வயிறு வளர்க்குமட்டும் பொருள் சம்பாதிப்பது கூடாது. வாழ்க்கை அனுபவிக்கத் தக்க செல்வம் ஒவ்வொருவருக்கும் வேண்டும். ஏழையாயுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்னும் கொள்கையைக் கட்டிக் கடலில் எறியுங்கள். திரைகடலோடியும் திரவியந் தேடுங்கள். சரியான வழியில் மூளையையும் சரீரத்தையும் உபயோகித்துப் பொருள் ஈட்டுவதில் பாபமொன்றுமில்லை. நெசவுத் தொழிலிலேதான் சம்பாதிக்க வேண்டுமென்ற விதியுமில்லை. உள்ளூரை விட்டு வெளியேறாமல் சம்பாதிக்க நினைப்பது வாலிபர்களாகிய உங்களுக்குச் சரியல்ல. உங்கள் நிலை உயர்வதாயின் உலகத்தின் எப்பாகத்திற்கும் நீங்கள் போய் வேலையிலமர வேண்டும். செல்வந்தர்கள் நம்குலத்து ஏழைக் குடிகளுக்குப் பல விதத்திலும் உபகாரம் செய்யவேண்டும். ஆங்காங்கே செங்குந்தர் பாங்கிகள் ஏற்படுத்தி வர்த்தகத்திலும் கைத்தொழிலிலும் ஈடுபட்டிருக்கும் செங்குந்த மக்களுக்குச் சொற்ப வட்டிக்குப் பணம் கொடுத் துதவவேண்டும். கலியாணங்களுக்கும், திருவிழாக்களுக்கும் ஆடம்பரமாகச் செய்யும் வீண் செலவுகளை நிறுத்தவேண்டும். யானை இறைக்கும் அரிசியால் பல்லாயிரம் எறும்புகள் பிழைக்கின்றன. கக்ஷிப் பிரதி கக்ஷிகள் ஏற்படுத்திக்கொண்டு கோர்ட்டுகளில் வழக்காட ஏழை ஜனங்களுக்கு வரிபோட்டு அவர்களைத் தொந்தரவு செய்தல் பாவம். நமக்குள் ஏற்படும் மனஸ்தாபங்களை நம் ஊர்க் கூட்டங்களில் தீர்த்துக்கொள்ளுதலே அறிவுடைமை. மேலும் கைத்தொழிலிலும் வர்த்தகத்திலும் புதிய புதிய முறைகளைக் கையாளவேண்டும். நெசவுத் தொழிலை எடுத்துக் கொள்ளுங்கள். துணிகளை வாங்குபவர்கள் மனதிற்குப் பிடித்த ரகங்களைத் தயார் செய்வதே இத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின் நோக்கமா யிருக்கவேண்டுமேயொழிய தலைமுறை தலைமுறையாக நெய்யப்பட்டு வந்த ரகங்களையே இன்னும் நெய்துவந்தால் நஷ்டமடைய நேரிடும். மகாத்மா காந்தியடிகளின் கதரியக்கம் நம்மவர்களுக்கு அளவற்ற நன்மை பயப்பதாய் இருக்கின்றது. எனினும் நாம் அதைக் கொண்டு நம் பொருளாதார நிலையை இன்னும் உயர்த்திக்கொள்ளவில்லை.

வாலிப சகோதரர்களே!

நான் மறுமுறையும் உங்கள் சமூகத்தின் கௌரவமும், பிற்கால வாழ்வும், உங்கள் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன வென்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். இந்த மகத்தான பொறுப்பை யுணர்ந்து இடைவிடாது பாடுபடுங்கள். நம் முன்னேற்றத்திற்குத் தடையாயுள்ள எல்லாவற்றையும் களைந்தெறியுங்கள். நமக்குள்ளேயே நாம் சமபந்தி போஜனம் செய்ய விரும்புவதில்லை. ஈரோட்டிலே நடைபெற்ற நம்மவர் முதலாவது மகாநாட்டிற்கு விஜயம் செய்திருந்த குலப்பெரியார்கள் சிலர் தனித்த விடத்தில் மறைவி லிருந்து சாப்பிட வேண்டுமென்றார்கள். இப்படிப்பட்ட பைத்தியம் உங்களைப் பிடிக்காதிருக்கட்டும்.

கலப்பு விவாகம் சர்வ சாதாரணமாக நடக்கும் இக்காலத்திலேகூட நம் மரபினரே ஒருவருக்கொருவர் பல பிரிவுகளாகப் பிரிந்துகொண்டு ஒரு பிரிவிலிருப்பவர் மற்றொரு பிரிவிலிருப்பவரிடம் விவாக சம்பந்தங்கள் வைத்துக்கொள்வதில்லை. இவையெல்லாம் நம் ஒற்றுமைக்குத் தடையா யிருக்கின்றன. நமது வாலிபர்கள் சிலர் இவ் விஷயத்தில் தைரியத்தோடு நடந்து கொண்டது பாராட்டற்குரியது. இப்புதிய மாறுதல்களை யெல்லாம் செய்து முடிக்க உங்களுக்கு மலை போன்ற மன உறுதிவேண்டும். வெசூவியஸ் எரிமலை நெருப்பைக் கக்கிய காலத்திலும் தன்னிடம் விட்டு நகராமல் காவல் புரிந்த பாம்பிய நகரத்து வீரனைப்பற்றி உலகம் இன்றும் புகழ்ந்து பேசுகிறது. ஓடிப்போனவர்களைப்பற்றி யார் நினைக்கின்றனர்? ஆகையால் உங்கள் கடமையை விடா முயற்சியோடும், தீரத்தோடும், பொறுமையோடும் செய்யுங்கள். வஸ்துக்கள் எல்லாம் பளுவுக்குத் தகுந்தாற்போல் பூமியினால் இழுக்கப்படுகின்றன என்ற அறிஞர் அரிஸ்டாட்டில் கொள்கையை ஆயிரம் வருடங்களுக்கு அதிகமாகவே உலகத்து ஜனங்கள் உண்மையென நம்பி வந்தனர். ஆனால் அந்த நூற்றாண்டுகளுக்குப் பின் வந்த கலீலியோ என்னும் வான சாஸ்திரி அக் கொள்கையைப் பைசா என்னும் ஊரிலுள்ள சாய்வு கோபுரத்தின்மீது நின்று பரீக்ஷை பார்த்த காலத்தில் அது பொய்யென்று ஒரு க்ஷண நேரத்தில் நிரூபிக்கப்பட்டது. ஆகையால் எதையும் ஆராய்ச்சி செய்யுங்கள். அவசரப்பட வேண்டாம். சீர் திருத்தம் செய்யவேண்டும் என்னும் ஆசையால் இருப்பதை எல்லாம் தகர்க்கவேண்டும் என்ற எண்ணம் வேண்டாம். வீட்டின் படி சிறிதாய் இருந்தால் அதை இடித்துப் பெரிது பண்ணினால் போ

தும். அதற்காக வீட்டையே இடிக்கவேண்டிய அவசியமில்லை. பழைய கருத்துக்களும், பழக்கவழக்கங்களும் நடைமுறைக்கு ஏற்றவையாய் நமக்கு நன்மை பயக்குமெனில் அவைகளை அழிக்க வேண்டியதில்லை. ஆனல் பழையது என்றதனுலேயே ஒன்றுக்குத் தனிப்பட்ட மதிப்பு ஏற்பட அவசியமுமில்லை.

ஒருவர் நினைக்கும் நினைப்பும், செய்யும் செய்கையும் எக்காலத்தும் வீண்போகாது. இது இயற்கை விதி, ஆகையால் வாலிபர்களே! நம் சமூகத்தின் முன்னேற்றம் எப்பொழுதும் உங்கள் நினைவிலிருக்கட்டும். சோர்வடைய வேண்டாம். சோர்வும் வீழ்ச்சியும் தொண்டருக்கில்லை. வீரர்களுக்கே இவ்வுலகத்தில் வெற்றியுண்டு, செல்வமுண்டு, புகழுண்டு. ஆகையால் வீரவாலிபர்களே! விழிமின் எழுமின், கருதிய கருமம் கைகூடும் வரை உழைமின்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று.

---

# தலைவர்களது சரித்திரங்கள்

## திரு. V. S. செங்கோட்டையா முதலியார்

நமது முதலாவது மகாநாட்டு வரவேற்புச் சபைத் தலைவரும், இரண்டாவது மகாநாட்டிற் கொடியுயர்த்தியவருமாகிய திரு. V.S. செங்கோட்டையா முதலியார் அவர்கள் சென்னிமலை என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில் மிகுந்த செல்வாக்குள்ள ஒரு பெரிய கௌரவமுள்ள செங்குந்த குடும்பத்திற் றோன்றியவர். இவர் வியாபாரத்தில் இயற்கை அறிவுள்ள நிபுணராகையால் தமது குடும்பத்தின் சார்பாக இவரே சென்னிமலை, கோயமுத்தூர், திருப்பூர், ஈரோடு, சென்னை முதலிய பல இடங்களிலும் பல விதமான வியாபாரங்களையும் நடத்தி வருகிறார். முதலியார் அவர்களே கோவை ஜில்லா செங்குந்தர்களுக்குள் மிகுந்த செல்வாக்குடைய செல்வந்தரென்று சொல்லலாம் கோயமுத்தூர் முனிசிபல் கௌன்சிலராக இருந்து வருவதன்றி, அநேக ஏழை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் முதலிய உதவி வருவதாலும், நமது முதலாவது மகா நாட்டைத் தமது ஜில்லாவிலேயே நடத்த வேண்டுமென்ற அவாக்கொண்டு, பொறுப்பு வாய்ந்த வரவேற்புச் சபைத் தலைவர் பதவியையும் ஏற்று, மகா நாட்டை யாவரும் வியக்கும் வண்ணம் மிகச் சிறப்பாக நடத்தி வைத்ததாலும், இவர் பொதுநல நோக்கமும், பரோபகார தரும சிந்தையும், மிகுந்த குலாபிமானமும், பேராற்றலும் உடையவரென விளங்குகின்றது. இவர் தமிழ் ஆங்கிலம் ஆகிய இருபாஷைகளிலும் போதிய ஞானமுள்ளவர். கோவை ஜில்லாவில் நம்மவர் நன்மைக்காகச் செங்குந்த பாங்கி என்ற ஒரு பாங்கி ஏற்படுத்துவதாகவும். 25 செங்குந்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம், உண்டி, உடை முதலியவை கொடுத்துதவுமாறு வேண்டிய ஏற்பாடுகள் கூடிய சீக்கிரம் செய்வதாகவும் உத்தேசித்துள்ளார் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நமது முதலாவது மகா நாட்டின் வரவேற்புச் சபைத் தலைதராக நியமிக்கப்பெற்று மகா நாட்டை நம்மவரே யன்றி பிற இனத்தவரும் ஆச்சரியப்படும்படி வெகு சிறப்பாக நடத்தியதனுலேயே இவருக்கு எவ்வளவு செல்வாக்கும் குலாபிமானமும் இருக்கிறதென்பதை நன்கு விளங்குகிறது.

---

## திரு. ம. த. சாமிநாத மூலியார்

நமது முதல் மகா நாட்டில் செங்குந்தக் கொடியை யுயர்த்திய திரு. ம. த. சாமிநாத முதலியார் அவர்கள், சான்றோருடைத்தெனப் பெரியோர்களால் பாராட்டப் பெற்றதும் நமது தமிழகத்திற்கு முகம்போல் விளங்குவதுமாகிய தொண்டை நாட்டின்கண், பொதுவாக வைதிகர்களால் சப்த க்ஷேத்திரங்களுள் ஒன்றாகவும், சிறப்பாகச் சைவர்களால் பஞ்ச க்ஷேத்திரங்களுள் ஒன்றாகவும் கொண்டாடப் பெறுவதாகிய காஞ்சிமாநகரில் சுமார் 250 வருஷங்களாக நீடித்துள்ளதும் செல்வாக்குள்ளதுமான ஒரு செங்குந்த குடும்பத்தில் தோன்றியவர். திரு. முதலியார் அவர்கள் முத்திமுடிவு, வீட்டுநெறி யுண்மை, ஒருபாவுண்மை உபதேசம் முதலிய வேதாந்த சாஸ்திரங்கள் செய்தவரும், திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துச் சீடரும், ஸ்ரீ கச்சியப்ப சுவாமிகள் ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் மாணவருமான ஸ்ரீமத் சரவண தேசிகர் பரம்பரையிலுதித்தவர். தற்போது இவருக்கு வயது ஏறக்குறைய 50 ஆகிறது. தமிழிலும் ஆங்கிலத்திலும் போதிய ஞானமுடையவர்.

ஆழ்ந்த அறிவும் மிகுந்த ஆற்றலும் பொருந்திய திரு. ம. த. சாமிநாத முதலியார் அவர்கள் தமது 19-ஆவது வயதிலிருந்தே பொது நன்மைக்காகச் சென்னை ராஜதானியிலுள்ள பல நாடுகளுக்கும் சென்று நம்மவரிடையே உண்டான கக்ஷி வித்தியாசங்களைத் தீர்த்து ஒற்றுமைப்படுத்தி வந்ததன்றி, சென்ற 20 வருஷங்களாகத் தொடர்ச்சியாய்க் காஞ்சிபுரம் முனிசிபல் கௌன்சிலராகவும் இருந்து வருகிறார். 15 வருஷம் பழைய காஞ்சிபுரம் தாலூக்கா தேவஸ்தானக் கமிட்டித் தலைவராகவும், இருமுறை காஞ்சிபுரம் முனிசிபல் சேர்மனாகவும், பல வருஷங்களாகத் தாலூக்கா ஜில்லா போர்ட் மெம்பராகவும் இருந்தவர்.



இவர் காஞ்சிபுரம் முனிசிபல் சேர்மனாக இருந்த காலத்தில் இவரது நடுநிலைமை, உண்மைக்குக் கட்டுப்படுதல், பொது நன்மைக்குழைத்தல் முதலிய பல அரிய குணங்கள் நன்கு விளங்கின. அன்றியும் காஞ்சிபுரத்தில் கட்டாயப் படிப்பை பெருமுயற்சி செய்து ஆசாரத்திற்குக் கொண்டு வந்தவர் இவரென்றே சொல்லலாம். எதிரிகளிடத்தும் பிரியம் காட்டுகிற மற்றொரு உயரிய குணமும் இவரிடமுண்டு. நம் ஜாதி முன்னேற்றத்திற்காக இன்றும் அரும்பாடு பட்டுக்கொண்டு வருபவர். இப்பெரியாரது விடாமுயற்சியினுலேதான் காஞ்சிபுரத்திலுள்ள நமது ஸ்ரீகச்சபேசுரர் ஆலயம் தற்போது பிரபல ஆலயங்களுள் ஒன்றாக விளங்குகிறது. காஞ்சிபுரத்தில் பெருந் தொகையினராக வசிக்கும் நம்மவர்களைத் திறமையுடன் கட்டி ஆளும் ஆற்றல் வாய்ந்தவர் இவரே யாவர். சுருங்கக்கூறின், இவர் தமது வாழ்நாள் முழுதும் நம் ஜாதி முன்னேற்றத்திற்காகவும், மற்றப் பொதுக் காரியங்களுக்காகவும் உழைத்து வருபவர்.

தற்போதும் மகாநாட்டுக் கொடி யுயர்த்தியதாமே தமது அஸ்த விசேஷத்தினுல் நமது இயக்கமும் குல முன்னேற்றத் தொண்டுகளும் மேலும் மேலும் விருத்தியடைய வேண்டுமெனும் பெருநோக்கத்தோடு எப்பொழுதும் வழி காட்டியாகவும் உறுதுணையாகவும் இருக்க வேண்டுமென்னும் உண்மையைக் கடைப்பிடித்து நமது முதலியார் ஒழுகுகின்றனர். ஈரோட்டை விட்டுப் புறப்படும் சமயம் அவரை வழி விட்டனுப்பிய நமது அமைச்சர் திரு. ம. சண்முகசுந்தர முதலியாரிடம் அவர் "என்னை இனித் தாங்கள் எதற்கும் நம்பி யிருக்கலாம்" என உறுதி பகர்ந்து விடைபெற்றுச் சென்றனர். அன்று கூறியவாக்குக் கிணங்க, அவர் காஞ்சிபுரம் சென்றதும், அவ்வூர் வாலிப சங்கத்தின் ஆண்டு விழாவைத் தலைச்சங்க அமைச்சரை வைத்துக்கொண்டு, நடத்தி அப்பெருங் கூட்டத்திலேயே அடுத்த மகா நாட்டினைச் செங்கற்பட்டு ஜில்லா வாசிகள் பொறுப்பில் காஞ்சிபுரத்தில் நடத்த வேண்டுமென்றும், நமது தலைச்சங்கத்தின் கல்வி நிதிக்குப் பொருள் சேகரஞ்செய்வதில் காஞ்சிபுரத்தாரே வழிகாட்டிகளா யிருந்து ஒரு சிறந்த எளிய முறையைக் கையாண்டு காட்ட வேண்டுமென்றும், அவ்வேற்பாடானது பிரதி அமாவாசை தோறும் தறிக்கோரு காலணு நமது தலைச் சங்க கல்வி நிதிக்கு ஒவ்வொரு செங்குந்தரும் அளிக்க வேண்டுமென்பதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றி வைத்தனர்.

இதுமட்டு மன்று. சென்ற மகாநாட்டின் தீர்மானங்கட் கிணங்க நமது சமூகத்தினரின் கல்யாணங்களில் ஆடம்பரமான வீண்செலவுகளைக் குறைப்பதற்கான பல வழிகளைக் கண்டு, அவற்றைச் செயலில் கொணர முயன்று வருகின்றனர். பெண்களை ஆடுமாடுகளைப் போன்று விற்பதற்குரிய பரியம் என்ற சடங்கை அடியோடு நிறுத்தவும், கல்யாணங்களில் தேங்காய் வழங்கல் முதலிய வழக்கங்களை நிறுத்திச் செலவுகளைக் குறைக்கவும், தம்மாலான வழிகளிலெல்லாம் முயன்று வெற்றி பெற்றும் வருகின்றார்கள். அன்றியும், நெடுநாட்களாய் ஐயம்பேட்டைக்கும் காஞ்சீபுரத்திற்கும் இருந்த மகாநாட்டு வழக்கை ஒழிக்கவேண்டிக் காஞ்சியில் விசேஷ காலங்களில் மகாநாட்டுத் தாம்பூலம் அழைப்பதை நிறுத்திக்கொண்டு வருகின்றார்கள். அதன் பயனாக இவ்விரண்டு ஊர்களும் ஒற்றுமை பெற்று வருவதோடு நம்மவர்கள் கல்யாண காலங்களில் அடைந்துவந்த துன்பங்களும் நீங்கி இன்புறுவதாயிற்று. ஈதன்றோ தலைவர்க்குரிய சீரிய நடத்தை!

---

## திரு. ஆ. வே. முத்தைய முதலியார் பி. ஏ., பி. எல்.

நமது முதலாவது மகாநாட்டின்கண் தலைமை வகித்த திருவாளர் ஆ. வே. முத்தைய முதலியார், பி. ஏ., பி. எல்., அவர்கள் புதுச்சேரி பிரெஞ்சு அரசாங்கத்தில் செக்ரிடேரியட் ஜெனரல் (Secretariate-General) என்னும் பிரதம அமைச்சர் பதவியிலுள்ளவர். இப்பெரியார் புதுச்சேரியில் பரம்பரையாய் மிகப் பிரசித்தி பெற்ற ஒரு செங்குந்த குடும்பத்தில் தோன்றியவர். மிகச் சாதுவாகிய இவர் தந்தையார் வேலாயுத முதலியார் பிரெஞ்சு அரசாங்க சிவில் உத்தியோகத்திலிருந்தவர். வேலாயுத முதலியார் தந்தையாகிய ஆநந்த முதலியார் என்பவர் புதுவை முத்தியாலு பேட்டையில் முத்தைய முதலியார் என்பவருக்கு ஸ்ரீ சித்தாந்த சுவாமிகள் என்னும் மஹான் திருவருட்பேற்றினுல் புத்திரராகத் தோன்றியவர். டை ஆநந்த முதலியார் மிக்க புகழ் வாய்ந்த பெரிய வியாபாரியாக விருந்து பல புண்ணியங்கள் செய்து செங்குந்த குலத்தை நிரம்ப விளக்கியவர். இவர் புதுவை முத்தையாலுப்பேட்டை, ஆலப்பாக்கம், சிதம்பரம், மயிலம் முதலிய இடங்களில் சத்திரங்கள் கட்டி வைத்ததன்றி ஸ்ரீ நடராஜப்பெருமான், வைத்தியநாத சுவாமி முதலிய மூர்த்திகளுக்குக் கட்டளையும் ஏற்படுத்தி யுள்ளார். வில்வநல்லூரிலுள்ள சிவாலயத்திற்குத் தர்மகர்த்தராயிருந்து அம்மையாருக்கு ரதம் செய்து வைத்த ஆநந்த முதலியார் அச்சிறுாக்கம் கோயிலிலும் சில திருப்பணிகள் செய்திருக்கின்றனர். இவர்களால் வைக்கப்பெற்ற தர்மங்கள் மேன்மேலும் விருத்தியாய்க்கொண்டே வருகின்றன.

1876௵ அக்டோபர்௴ 7௳ பிறந்த நமது முதல் மகாநாட்டுத் தலைவராகிய உயர் சைவத் திருவாளர் ஆ. வே. முத்தைய முதலியார் அவர்கள் பிரஞ்சு, இங்கிலீஷ், தமிழ் ஆகிய மூன்று பாஷைகளிலும் மிகவும் தேர்ச்சியுள்ளவர். ஹிந்தி, தெலுங்கு முதலிய பாஷைகளிலும் போதிய ஞானமுள்ளவர். சைவாசாரமும் அடியார் பக்கலில் பேரன்பும் உடையவராகையால், அடியார்கட்குத் தவறாது தினந்தோறும் அன்னமளிப்பவர்; பொது நலநோக்கமும், நடுநிலைமையும், அய

பரோபகார சிந்தையும் உடையவராய் நன்னெறிக் கண் வழாது நிற்பவர்; அரசாங்கத்தாராலும், ஜனங்களாலும் நன்கு மதிக்கப்பெற்று வருபவர். பிரஞ்சு அரசாங்கத்தில் தற்போது தமிழர்களுக்குள்ளே பெரிய உத்தியோகத்திலிருப்பவர் இவரே. அடிக்கடி கக்ஷி மாறுகிற புதுச்சேரியில் எக்காரணத்தாலும் இவரைக் கெட்டவரென்று சொல்லுவார் ஒருவருமில்லை யென்றே சொல்லவேண்டும். மிகுந்த குலப்பற்றும், சமயப்பற்றும் உடைய நமது தலைவரவர்கள் ஞானநூல் ஆராய்ச்சியிலும் தேர்ந்தவர்; பிரம்மஞான சங்கத்தில் ஒரு உயர்ந்த பதவியையும் வகித்து வருகிறார்.

சென்ற மகாநாட்டிற் றலைமை வகித்ததோடு நமது தலைச்சங்கத்தின் தலைவராகவும் இருந்து தமக்குள்ள குலாபிமானத்திற் கேற்றவாறு இவர் ஆற்றிவரும் தொண்டு அளவற்றதாம். இவர் சொற்பிறழாதவர் என்பதை, தாம் ஒருகால் நமது ஏழை மாணவர்கள் உபகாரத்திற்காக வழங்குவதாக இசைந்த மாத நன்கொடையை ஒருநாளேனும் ஏற்றத்தாழ்வின்றி 5-ஆந் தேதிதோறும் அனுப்பிவரும் பெருமை யொன்றினாலேயே அறியலாம்.

---

## திரு. தி. நா. சபாபதி வள்ளலார்

நமது முதல் மகாநாட்டில் வியாபாரிகள் மகாநாட்டைத் திறந்து வைத்தவரும், இரண்டாவது மகாநாட்டிற் றலைமை வகித்தவருமான சபாபதி வள்ளலாரை அறியாத 'மித்திரன்' வாசகர் ஒருவருமிலரென்றே சொல்லலாம். இவரும் இவரது மூத்த சகோதரராகிய திரு. கலியாணசுந்தர முதலியாரும், செங்குந்த மரபும் உலகமும் உள்ள அளவும் தங்கள் பெயரும் கீர்த்தியும் நிலைத்திருக்குமாறு நமக்காக உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்து உழைத்து வருகிறார்கள் என்பதை யாவருமுணர்வர். இவ்விரு சகோதர வள்ளல்கள் 'செங்குந்த மித்திரன்' நம் வீடுகள்தோறும் வந்து உலாவுவதற்கும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் ஓங்கி வளர்வதற்கும் காரணபூதரா யிருந்ததன்றித் தங்கள் செலவிலேயே பத்திரிகையை முதல் ஒரு வருஷ காலம் சங்கத்திற்கு இனாமாக அச்சிட்டுதவி வந்தார்கள். இவர்களது முயற்சி இல்லையென்றால் நமது 'மித்திர'னும், சங்கமும், சமீபத்தில் ஈரோட்டில் கூடிய மகாநாடும், காலப்போக்கிற் கிணங்கச் சில காலத்திற்குப் பிறகு நடைபெறுமாயினும், தற்போது நடைபெறுதல் அசாத்தியமென்றுதான் சொல்லவேண்டும். சபாபதி வள்ளலார் பொதுஜன சேவை செய்வதிலும் பிரியமுள்ளவராகையால் திருவாரூர் முனிசிபல் வைஸ் சேர்மன் பதவியையும் தாங்கிப் பொதுஜன நன்றிக்கும் பாத்திரராக இருந்து வருகிறார். ஊரறிந்த இவரைப்பற்றி வாசகர்களுக்கு அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை என்றே எண்ணுகிறோம். இவரது வள்ளன்மையினாலேயே இவர் நிறைந்த செல்வாக்கையும் அந்தஸ்தையும் உடையவரென இவரை நேரிலறியாதாரும் உணர்வர். மதராஸ் பழையகாட் கம்பெனி கூட்டாளிகளில் இவரும் ஒருவர். நமது 'மித்திரன்' ஆரம்பித்த காலத்தில் இவர் ஷை கம்பெனியின் மானேஜராக விருந்தார். இவருக்குப் பல இடங்களில் வியாபாரமுண்டு.

---

## திரு. சா. ரா. தங்கவேல் முதலியார்

ஸ்ரீமான் சாந்தா. ரா. தங்கவேல் முதலியாரவர்கள் பல்லாற்றானுஞ் சிறந்த காஞ்சியம்பதியின் மேற்றிசையில் ஒருபது மைல் தூரத்தில் உள்ள பனைப்பாக்கத்தில் இருநூற்றெண்பது ஆண்டுகட்கு முன்னிருந்து புகழும் மேம்பாடும் படைத்தொளிரும் தொன்மை நலஞ் செறிந்த ஒருசெங்குந்த குலக்குடியின் வழிவந்த தோன்றலார் ஆவர். இவர் தந்தையார் திரு. சாந்தா. ராமலிங்க முதலியாரவர்களின் பெயர் மிகப் பிரசித்தி பெற்றதாகும். இவருக்குச் சௌகார் என்ற அரசாங்கப் பட்டமும் உண்டு. இவர்தம் குடியானது தொன்றுதொட்டு வரும் செல்வ வளப்பம் உடையதாகும். தமிழ் வித்வான்களை ஆதரித்துத் தமிழையும் சைவத்தையும் வளர்த்தல் இவர் குடும்பத்திற்கு இயல்பாகும். இவர்கள் முன்னோர்களால் செங்குந்தர்களுக்கெனத் திருத்தணியில் கட்டப்பட்ட மடம் இன்றும் நம்மவர்கட்குப் பெரிதும் வசதியளித்து நிற்கின்றது. திரு. ராமலிங்க முதலியாரவர்கள் ஒரு லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட தமது சொந்த திரவியத்தில் தம்மூரில் ஒரு பெரிய சிவாலயம் எடுப்பித்தனர். அவ்வாலயத்திற்கு இன்றும் நித்திய நைமித்திக, விசேஷ பூசைகளும் திருவிழாக்களும், இவர்கள் குடும்ப திரவியத்திலிருந்து நடத்தப்பட்டு வருவதொன்றே இவர்கள் குடி சைவத்தை வளர்க்கும் இயல்புடையதென்பதை நன்கு விளக்கும்.

திரு. தங்கவேல் முதலியாரவர்கள் காஞ்சீபுரத்தில் ஒரு பிரபல வியாபாரியாவார்கள். இவர் ஐந்தாண்டுகளாகக் காஞ்சீபுரத்தில் சிவாலயங்களுள் தலை சிறந்ததாகிய ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் ஆலய தர்மகர்த்தராக இருந்து சமயத் திருப்பணி ஆற்றி வருகிறார். பல ஆண்டுகளாக ஜில்லா போர்டு தாலூகா போர்டுகளில் அங்கத்தினராக இருந்து பொதுநல சேவை செய்து வருகிறார். இவர் மிகுந்த பொறுமையும் நற்குணமும் வாய்ந்தவர். இவர் செல்வத்தால் மிகவும் உயர்ந்தவராயினும் யாவரும் எளிதில் கண்டு பேசுதற்குரிய நிலையில் இருப்பவர். இவர்களாலே நம் சங்கமும் செங்குந்த சமூகமும் மேனிலை யடையுமென்பதில் ஐயமில்லை.

---

## திரு. அ. ரா. செல்லப்ப முதலியார்

நமது வாலிபர் மகாநாட்டைத் திறந்து வைத்த திரு. அ. ரா. செல்லப்ப முதலியாரவர்கள், வடாற்காடு ஜில்லாவைச் சார்ந்த தக்கோலத்தில் பரம்பரையாய்ச் செல்வாக்குள்ள ஒரு பெரிய குடும்பத்தில் தோன்றியவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் போதிய ஞானமுள்ளவர். தக்கோலம் யூனியன் போர்ட் அங்கத்தினர் பதவியையும் இன்னு மிதர பொதுஜன ஊழியத்தையு மேற்கொண்டுள்ளவர். மிகுந்த குலாபிமான முடையவர். பிராமணரல்லாதாரியக்கத்தின் முக்கிய அங்கத்தினர்களி லொருவர். இவரது பரம்பரை, செல்வாக்கு, இளமை, ஊக்கம் முதலிய விசேஷங்களைக் கருதியே முகமன் கழகத்தாரிவரைக்கொண்டு வாலிபர் மகாநாட்டைத் திறந்து வைக்குமாறு தீர்மானித்தனர்.



---

## திரு. S. மீனாக்ஷிசுந்தர முதலியார் B. A., L. T.

உயர் திரு. S. மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்கள் B. A., L. T., பூந்துறை நாட்டுத் தலைநகராய ஈரோட்டில், வியாபாரியும் நாட்டாண்மைக்காரருமான திரு. ஸ்ரீரங்க முதலியார் என்னும் செங்குந்த சிரேஷ்டரது புதல்வராக 1899-௵ டிசம்பர் ௴ பிறந்தவர். இவருடைய 14-ஆவது வயதில் இவரது தந்தையார் விண்ணுலகெய்தினர். ஆகவே இவரைப் படிக்கவைக்கவேண்டிய பாரமும், குடும்பத்தை நிர்வகிக்கவேண்டிய பாரமும் இவரது தாயார்மேல் விழுந்தது. 'தந்தை மகற்காற்று நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்' என்ற மறைவாக்கையே லக்ஷியமாகக் கொண்டு தமது புதல்வரை B. A. வரையில் படிக்கவைக்க வேண்டுமென்ற பெருநோக்கம் ஸ்ரீரங்க முதலியாருக்கு இருந்து வந்தது. கணவரது கருத்தை நிறைவேற்றுவதே தமது கடமையெனக் கொண்ட கற்பிற் சிறந்த அம்மையார் (மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்கள் தாயார்) பலவித கஷ்டங்களினிடையே, வைராக்கிய சிந்தை, தைரியம், கூர்ந்த அறிவு ஆகியவற்றையே துணையாகக் கொண்டு தமது கணவரது கருத்தைப் பூர்த்தி செய்வித்தார்.

திரு. S. மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்கள் பி. ஏ. பரீக்ஷையில் தேர்ச்சி பெற்ற உடனே தேசசேவை செய்ய விருப்பங் கொண்டவராய்க் காங்கிரஸ் ஒத்துழையா இயக்கத்தில் சேர்ந்து ஒரு வருஷ காலம் கோவை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியாகவும் இருந்தார்கள். அப்போது பிரசித்திபெற்ற ஏறக்குறைய எல்லாத் தேசீயத் தலைவர்களையும் சந்தித்து அளவளாவும் சந்தர்ப்பம் வாய்க்கப் பெற்றார்கள். ஆயினும் குடும்ப நிலையானது தொடர்ச்சியாகக் காங்கிரசில் உழைத்துவர இடந்தரவில்லை. ஆகவே ஈரோடு மகாஜன ஹைஸ்கூலில் சரித்திர உதவி ஆசிரியராக 3 வருஷ காலம் இருந்து பின்னர் ஈரோடு முனிசிபாலிடி காரியதரிசியாக இருந்தார்கள். முனிசிபாலிடி நடவடிக்கைகள் பிடிக்காமையால் ஒரு வருஷத்திற்குள் அவ்வுத்தியோகத்தை இராஜிநாமா செய்துவிட்டு, எல். டி. பரிக்ஷைக்குப் படித்துத் தேர்ச்சியடைந்து மறுபடியும் ஈரோடு மகாஜன ஹைஸ்கூலில் ஆசிரியராக அமர்ந்தார்கள்.

திரு. முதலியார் அவர்கள் ஆசிரியர் கல்லூரியில் இருந்தபோது ஆசிரியர் சங்கத்தின் காரியதரிசியாகவிருந்து அக்கல்லூரித் தலைமை ஆசிரியர் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்கள். சில வருஷங்களுக்கு முன் சிவகங்கை ராஜா ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் ஸ்தானம் காலியாக, சமஸ்தான கலெக்டர் துரையவர்கள் அப்பதவிக்குத் தகுந்த அறிவாற்றலுடைய ஆசிரியரொருவரைச் சிபார்சு செய்யும்படி கேட்டபோது ஆசிரியர் கல்லூரி (Teacher's College) தலைமை யாசிரியரான திரு. செம்பியன் துரையவர்கள் ஞாபகம் வைத்திருந்து நமது முதலியார் அவர்களைச் சிபார்சு செய்தார். இரண்டு வருஷங்களுக்கு முன் சிவகெங்கை ஹைஸ்கூல் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பெற்ற முதலியார் அவர்கள் இன்றுகாறும் அப்பதவியிலேயே இருந்து வருகிறார்கள்.

அன்றியும் நமது முதலியார் அவர்கள் இராமநாதபுரம் ராஜா சாஹிப், சமஸ்தான கலெக்டர், பொது ஜனங்கள் ஆகிய எல்லோராலும் நன்கு மதிக்கப்பெற்றுள்ளதோடு, இராமநாதபுரம் பெஞ்சு கோர்ட்டு பிரசிடெண்டாகவும், ஜீவகாருண்ய சங்கத்தின் (S. P. C. A.) காரியதரிசியாகவும் இருந்து வருகிறார்கள்.

---

## 1931-ஆம் வருடம் 16,17 தேதிகளில் திருவாளர்கள் தி. நா. சபாபதி வள்ளலார், S. மீனாக்ஷிசுந்தர முதலியார் ஆகியோரது தலைமைகளின்கீழ் நடந்த தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது சமூக, வாலிப மகாநாடுகளில் நிறைவேறிய

# தீர்மானங்கள்

### அநுதாபம்

(1) பொதுநல நோக்கத்தோடு தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் நம் நாட்டுக்காகத் தத்தம் செய்த பெரியார்கள் மௌலானா மகமதலியும் பண்டித மோதிலால் நேருவும் காலஞ் சென்றமைக்கு இம்மகாநாடு அநுதாபங் காட்டுவதோடு அதை அவர்கள் குடும்பத்தினர்க்குத் தெரிவிக்கத் தலைவர்க்கு அநுமதி யளிக்கிறது.

பிரேரேபித்தவர்: தலைவர்

(2) நமது தலைச்சங்கத்தின் உபதலைவர்களுள் ஒருவரும், தென்னிந்திய செங்குந்தர் முதலாவது வர்த்தகர் மகாநாட்டு வரவேற்புச் சபையின் தலைவரும், ஷை மகாநாடு விமரிசையாக நடைபெற்றதற்குக் காரண பூதர்களுள் ஒருவராயிருந்தவரும், சேலம் ஜில்லாவிலுள்ள ஸ்தல ஸ்தாபனங்களிலெல்லாம் முக்கிய அங்கத்தினருள் ஒருவரும், குலத்தொண்டும் பொதுஜன ஊழியமுமே தமது வாழ்க்கைக்குரிய கடன்களென்று கருதி உழைத்தவரும், பிரபல வியாபாரியும், பெருந்தனிகருமான திருச்செங்கோடு ரா. கந்தப்ப முதலியார் அவர்கள் சுரங்கண்டு அகால மரண மடைந்தமைக்கு ஆற்றொணுத் துக்கமடைவதோடு, அவரது மரணத்தினால் செங்குந்த வுலகம் ஒரு சிறந்த குலாபிமான சிங்கத்தினை இழந்ததை யுன்னி மன நைந்து காலஞ்சென்ற முதலியாரவர்கள் சகோதரர்களுக்கும், மைந்தர்களுக்கும், அவரது இதர உறவினர்க்கும் இம்மகாநாடு மிக்க அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

பிரே: தலைவர்.

## காந்தி இர்வின் ஒப்பந்தம்

(3) நமது நாட்டில் ஏற்பட்ட ராஜீய கிளர்ச்சி சம்பந்தமான கலகத்தை நீக்கிச் சமாதானம் குடிகொள்ள ஒப்பந்தஞ் செய்து முடித்த மகாத்மா காந்தி அடிகளுக்கும் இர்வின் பிரவுக்கும் இம்மகாநாடு வாழ்த்துக் கூறி நன்றி செலுத்துகின்றது.

பிரே: தலைவர்.

## சட்டசபையில் நியமனந்தாராமைக்குக் கண்டனம்

(4) 18-9-30-இல் கூடிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் அவசர நிருவாக சபைக் கூட்டத்தில் நிறைவேறிய சட்டசபை நியமன சம்பந்தமான தீர்மானங்களைச் செங்குந்த உலகமனைத்தும் ஆமோதித்துத் தந்தி தபால் மனுக்களாகிய முறைகளில் தக்க சமயத்தில் தெரிவித்திருந்தும், அவற்றைச் சிறிதும் கவனிக்காமல் செங்குந்த சமூகத்துக்கு நியமன மூலம் இவ்வருஷமும் சென்னைச் சட்ட சபையில் பிரதிநிதித்துவம் வழங்காமைக்கு இந்த மகாநாடு செங்குந்த சமூகத்தினர் சார்பாக மிக்க வருத்தத்தையும் அதிருப்தியையும் சென்னை அரசாங்கத்தாருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

பிரேபித்தவர்: திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் எம். ஏ., எல். டி.

ஆமோதித்தவர்: திரு. M. V. பீமராஜா முதலியார் அவர்கள்

ஆதரித்தவர்: திரு. V. S. செங்கோட்டையா முதலியார் அவர்கள்

## கதரையும் சுதேசி ஆடைகளையும் ஆதரித்தல்

(5) நெய்தற்றொழிலே நம்மவர் குலத்தொழிலாக இருக்க, அதை வளர்ப்பதற்கும் நமது நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கும், கூடிய வரையில் நம்மவர் அனைவரும் கதரையே நூற்று, நெய்து உடுத்தல் வேண்டுமென்றும் அதற்கு அடுத்தபடியாக இந்தியாவிலுள்ள மில்களில் தயாராகும் நூல்களைக்கொண்டு நெய்யப் பெறும் ஆடைகளையே ஆதரிக்க வேண்டுமென்றும் இம்மகாநாடு நம்மவர் அனைவரையும் வேண்டிக் கொள்ளுகின்றது.

பிரே: S. P. ஸ்ரீராம் முதலியார் பி. ஏ.,
ஆமோ: K. வஜ்ஜிரவேல் முதலியார் பி. ஏ.,
ஆதரி: E. V. சிங்காரவேல் முதலியார் பி. ஏ.

## செங்குந்தரும் தேர்தல்களும்

(6) கோயமுத்தூர், சேலம், வடஆற்காடு, தென்னாற்காடு, செங்கல்பட்டு ஜில்லாக்களில் நமது சமூக வாக்காளர்களின் தொகை அதிகமாயிருப்பதால், இந்த ஜில்லாக்களுள் ஒவ்வொன்றிலும் நமது சமூக அபேக்ஷகரை அடுத்த சட்ட சபைத் தேர்தலில் நிறுத்தவும், அதற்குத் தகுந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்துச் சமூக ராஜீய அபிப்பிராய பேதங்களை ஒரு சிறிதும் பாராட்டாமல் நமது அபேக்ஷகர்கள் வெற்றி பெறுமாறு முழு மனதுடன் உழைக்க ஐந்து பேர்களுக்குக் குறையாமல் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு கமிட்டியை நியமிக்கச் சென்னைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு அதிகாரமளிக்கிறது என்றும், தற்போது நமது சமூகம் உள்ள பிற்போக்கான நிலையில், நமது சொந்த அபிப்பிராய பேதங்களைப் பாராட்டிக்கொண்டு இருப்போமானால் அவை சமூகத்தையே பெரிதும் பாழ்படுத்துமாதலால், அவற்றை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல் குலாபிமானத்தையே பெரிதாகப் பாராட்டி ஒவ்வொரு ஸ்தல ஸ்தாபனத்திலும் நமது அபேட்சகர்கள் வெற்றி பெறுமாறு உழைக்க வேண்டுமாய்ச் செங்குந்தர் ஒவ்வொருவரையும் வேண்டிக்கொள்ளுகிறது என்றும், எலெக்ஷன் காலங்களிலும், மற்ற சமயங்களிலும் இதர சமூகத்தினருக்குச் சிறிதும் மனஸ்தாபம் விளைக்காமல் பார்த்துக் கொள்ளுவதோடு, முடிந்த வரையில் அவர்களோடு சேர்ந்துழைக்க வேண்டுமென்றும், நம்மவர்கள் அடுத்த சட்டசபை தேர்தலுக்குள் வோட்டர் தொகையைப் பல வழிகளிலும் பெறுக்கிக் கொள்ள முயற்சி செய்ய வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரே: தலைவர் S. மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்கள் பி. ஏ., எல். டி.

## கல்வி

நம்மவரிடையே மிக்குள்ள அஞ்ஞானத்தை விலக்குவதற்குக் கல்வியே சிறந்த கருவியாக இருப்பதால் அதைப் பரப்புவதற்கான முறையிலே மிக்க ஊக்கமெடுத்துக்கொள்ள வேண்டுமென்று நமது தலைச் சங்கத்தை இம்மகாநாடு வேண்டிக் கொள்ளுகிறது.

பிரே: ம. சண்முக சுந்தர முதலியார்.
ஆமோ: V. இரத்தின முதலியார் பி.ஏ., பி.எல்.
ஆத: S. M. மீனாக்ஷிசுந்தர முதலியார்.



## கல்விநிதி

(8) கல்வியே கருந்தனம் என்ற முதுமொழிக்கேற்பக் கல்வி ஒவ்வொரு மானிடருக்கும் அத்யாவசியமாதலாலும், கல்வியில் நம் செங்குந்த சமூகத்தினர் மிகவும் பிற்போக்கடைந் திருப்பதாலும், அக்கல்வியினை நம்மவரிடையே பல வழிகளிலும் விருத்தி செய்யுமாறு நமக்கு ஒரு கல்விநிதி சேகரிக்க வேண்டியிருப்பதால், இம்மகாநாடு பொதுவாக நமது சமூகத்தினர் அனைவரையும், குறிப்பாகச் செங்குந்த தனவந்தர்களையும் வேண்டிய பொருளை இப்போது சென்னையில் ஸ்தாபகமாயுள்ள செங்குந்தர் கல்விநிதிக்கு உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்வதோடு, நம்மவர் குடும்பங்களில் ஏற்படும் கலியாணம் சுப சடங்குகள் சமயத்தில் ஒவ்வொரு செங்குந்தரும் தம்மால் இயன்ற அளவு அக்கல்விநிதிக்குப் பொருளுதவி செய்தல் வேண்டுமென்றும் உண்டியல் வசூல் மகமை முதலிய வழிகளிலும் உதவி புரிந்து ஷை கல்விநிதியை விருத்தி செய்ய வேண்டுமென்றும் நமது குலப் பிரமுகர்களையும் வியாபாரிகளையும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

பிரே: தலைவர்.

[இத் தீர்மானம் நிறைவேறியதும் மகாநாட்டுப் பந்தலிலேயே ‘செங்குந்தர் கல்விநிதிக்கு’ப் பல கனவான்கள் நன்கொடை யளிப்பதாகக் கையொப்ப மிட்டனர். அவ்விதம் கையொப்பமான தொகையின் மொத்தம் ரூபாய் 4420-8-0.]

## மதுபான விலக்கு

(9) நம்மவர் சிலரிடையே உள்ள மதுபான வழக்கம் நம் சமூக முன்னேற்றத்துக்கு ஒரு பெருந் தடையாயிருக்கிறபடியால், தமது சமூக ஆண் பெண் இளைஞர் அனைவரும் அதை அடியோடு விலக்கத் தீவிர முயற்சி செய்ய வேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரே: V. S. இராமலிங்க முதலியார்,
ஆமோ: பரமகுரு முதலியார்,
ஆத: சுப்பைய முதலியார்,
K. M. முனிசாமி முதலியார், குடியாத்தம்,
தி. கோவிந்தசாமி முதலியார்.

## கல்விநிதியும் சென்னையில் மாணவர் விடுதியும்

(10) துவக்கும் ஆண்டில் கல்விநிதியைப் பெருக்குவதற்காகவும் செங்குந்த மாணவர்க்கு உண்டிச்சாலை யொன்றைச் சென்னையில் ஸ்தாபிப்பதற்காகவும் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ளும்படி கல்விநிதிக் காப்பாளர் சபையினை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

பிரே: K. வச்சிரவேல் முதலியார்,
ஆமோ: P. C. மாணிக்கவாசக முதலியார்.

## வாலிபர் இயக்கம்

(11) ஒவ்வொரு கிராமத்திலும் வாலிபர் சங்கம் ஸ்தாபிக்கப் பெறல் வேண்டுமென்றும், அச்சங்கம் அக்கிராமத்திலுள்ள மாணவர்களும் ஏனைய வாலிபர்களும் அடங்கிய ஒரு ஒழுங்கான தொண்டர் படையை ஏற்படுத்தி அதன் வாயிலாகக் கீழ்க்கண்ட முக்கிய தொண்டுகளை ஆற்றல் வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

(i) தங்களோடு ஒத்துழைப்பதற்காகவும் தாங்கள் மேற்கொண்ட பணியைச் செவ்வனே நடத்துவதற்காகவும் அடுத்துள்ள கிராமங்களில் வாலிபர் சங்கங்களை ஸ்தாபித்தலும் இயற்கனவே உள்ளவற்றை ஊக்குதலும்.

(ii) எத்தகைய சீர்திருத்தத்திற்கும் முதற்படியாயுள்ள கல்வயினை, கிராமந்தோறும் சென்று சுலபமான கல்விப் பயிற்சிக்கேற்ற வசதிகளை ஏற்படுத்தல், சிறுவர் சிறுமிகளது கல்விப் பயிற்சியினைக் கட்டாயப் படுத்தல் முதலிய வழிகளில் பரப்புதல்.

(iii) நம்மவர் பொருளாதார நிலையினைக் கவனித்துத் திருத்துதல்.

(iv) முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டைகளாயுள்ள கக்ஷிப்பிளவுகள் முதலிய தீமைகளை யொழித்தல்.

(v) பொதுவாகச் சுகாதார விஷயங்களையும் சிறப்பாக மதுவிலக்குச் சம்பந்தமான விஷயங்களையும் கவனிக்கவேண்டிய சீர்திருத்தங்களைச் செய்தல்.

(vi) வாசகசாலைகள் நிருமாணித்தல் அடிக்கடி கூட்டங்கள் கூட்டி நன்மைபயக்கும் விஷயங்களைப் பற்றி உபந்நியசித்தல் முதலிய வழிகளில் நங்குல மக்களது உலக அறிவை வளர்த்தல்.

(vii) துர்ப்பாக்கியத்தால் இளமையிற் கல்லாது விடுத்த வயது முதிர்ந்தவர்களிடை அறிவுச் சுடர் கொளுத்தல்

பிரே: ஜெ. தங்கவேல், பி. ஏ.
ஆமோ: E. V. சிங்காரவேல் முதலியார், பி. ஏ.

## மதசம்பந்தமானவை

நமது செங்குந்த சமூகத்தின் தூய வொழுக்கத்திற்கு மாறாகச் சில விஷயங்கள் நடைபெறும் திருவிழாக்களில் உயிர்ப்பலியிடுதல், கச்சை கட்டிக்கொண்டு ஆடுதல் முதலியவை போன்ற தீய வழக்கங்கள் தவிர்க்கப்படவேண்டும் என இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரே: மொ. க. குழந்தையப்ப முதலியார்
ஆமோ: ம. அ. கனகசபை முதலியார்
ஆத: பி. செ. மாணிக்கவாசக முதலியார்

## ஒற்றுமை விவாகங்கள்

ஒரே வகுப்பினரான நமது செங்குந்த சமூகத்தார் பல்வேறிடங்களில் குடியேறினதாலும், இடமாறுதலாலும், மேற்கொண்டிருந்த நெய்தற்றொழில் வேறுபாட்டாலும், நெருங்கிய பழக்கமின்மையாலும், இதுவரை சமபந்தி போஜனம் தவிர விவாக விஷயத்தில் மாறுபாடு கொண்டிருப்பது சமூக முன்னேற்றத்திற்குத் தடையாயிருப்பதா

னும், ஒரே இரத்தக்கலப்புள்ள விவாகத்தால் சிறந்த சந்ததி தோன்றாமை, தோன்றிய சந்ததிக்கு அறிவு குன்றுதல், உடல் மனவலிவு இல்லாமையாதிய தீமைகளிருப்பதாலும், பொருளாதாரம், வேடிக்கை, சம்பந்தம் தவிர்ந்து போகுமென்னுமெண்ணம் முதலானவற்றைக் கருதுவதால் பெரும்பான்மையும் பொருந்தாத குடும்ப வாழ்க்கை புண்டாவதாலும் நமது சமூகத்திலே ஒன்றுபட்ட விவாகம் நடத்தப்பட வேண்டுமெனச் சென்ற மகாநாடு அபிப்பிராயப்பட்டதை யொட்டி இடையிலே ஒற்றுமைத் திருமணங்களை நிகழ்த்திய குடும்பத்தினரை இம்மகாநாடு பாராட்டுவதோடு மேன்மேலும் இத்தகைய விவாகங்கள் நடைபெற வேண்டுமென வற்புறுத்துகிறது.

பிரே: V. S. செங்கோட்டைய முதலியார்
ஆமோ: ம. த. சாமிநாத முதலியார்
ஆதரி: K. முத்துக்குமார முதலியார்.

### பரியம், ஒப்பந்தப் பணம்

நமது செங்குந்த மரபில் சிலவூர்களில் மருமகப்பிள்ளைகளுக்கு வருஷா வருஷம் சீர்கொடுக்கும் பழக்கவழக்கம் சமூக சிக்கனத்தைக் குறைப்பதாக இருப்பதால் அதை நிறுத்திக் கலியாணம் செய்யும் முதல் வருஷம் மட்டிலும் மறுமகப்பிள்ளைகளுக்குச் சீர் கொடுத்துப் பின்னால் வருஷாவருஷம் சீர் கொடுக்கும் வழக்கத்தையும், கலியாணங்களில் பரியம் வாங்கும் வழக்கத்தையும், ஒப்பந்தப் பணம் வாங்கும் வழக்கத்தையும் அறவே ஒழிக்கவேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரே: S. பழனியாண்டி முதலியார், சேலம்
ஆமோ: M. சரவண முதலியார்.

### பெண்கள் உரிமை

(15) ஒவ்வொரு செங்குந்த குடும்பப் பிதுரார்ஜித சொத்துக்களில் ஆண்மக்களைப் போன்று பெண் மக்களுக்கும் போதிய சொத்துரிமைகள் இருக்க வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிப்பதோடு, அதற்கான சட்ட திட்டங்களை இந்தியா கவர்மெண்டார் அதிசீக்கிரம் இயற்றி யமைக்க வேண்டுமென இம்மகாநாடு அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

பிரே: V. இரத்தின முதலியார் B. A., B. L.
ஆமோ: P. C. மாணிக்க வாசக முதலியார்

### விதவா விவாகம்

(61) புருஷனை இழந்த சந்ததி இல்லாத பெண்களுக்கு விருப்ப மிருப்பின் மறுமணம் செய்து கொள்ள உரிமை இருக்க வேண்டுமெனவும், இவ்வாறு மறுமணம் செய்துகொள்வோர்களை, விலக்கி வைத்தல் முதலியவை செய்தல் கூடாதெனவும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரே: அ. ரா. செல்லப்பா முதலியார்
ஆமோ: C. நடராஜ முதலியார் பி. ஏ.

### சமூக சிக்கனம்

(17) நமது சமூகம் வறுமையால் நலிவதாகக் கூறிக்கொண்டே கலியாணங்கட்கும், ஆலய திருமாலை உற்சவங்கட்கும் கட்சிச் சண்டைகளால் ஏற்படும் வழக்குகட்கும் அனுவசியமாகப் பெருந்தொகைகளைச் செலவழித்து வருவதைக் கண்டு வருந்துவதோடு, இனி ஆடம்பரச் செலவின்றிக் கலியாணங்களை நடத்தவும், இயற்கனவே பல வாலயங்கள் இருப்பதால் இனிப்புதியன திருமாணிக்காது, அவ்வாறுள்ளனவற்றின் உற்சவங்கட்கு அபரிமிதமான தொகை செலவிடாது மிருக்கவும், நம்மவர்க்குள்ளேயே பஞ்சாயத்து மூலமாக வழக்குகளைத் தீர்த்துக்கொண்டு நியாய ஸ்தலங்கள் மூலம் அளவிறந்த செல்வத்தை அழிக்காதிருக்கவும் நம்மவர் ஒவ்வொருவரையும் இம்மகாநாடு மிகவும் வேண்டிக்கொள்ளுகிறது.

பிரே: இ. முனியப்ப முதலியார்.

### கூட்டுறவு

(18) நம்மவர் பொருளாதார அபிவிருத்தியை முன்னிட்டு ஒவ்வொரு இடத்திலும் கீழ்க்காணும் விதமாகக் கூட்டுறவு முயற்சிகள் செய்ய வேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

(i) வியாபாரிகள் உள்ள கிராமங்களிலும் நகரங்களிலும் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவி அங்குள்ளவர்கள் பங்குகாரர்களாகச் சேர்ந்து அரசாங்கச்சட்டப் பிரகாரம் பெறக்கூடிய அங்கீகாரத்தையும் உதவியையும் பெற்று வியாபாரத்தை நடத்த வேண்டும்.

(ii) நமது நெசவுத் தொழி லபிவிருத்திக்காக நெசவுள்ள கிராமந்தோறும் தனிப்பட்ட ஐக்கிய நாணய சங்கங்களையும் சேமநிதிகளையும் ஏற்படுத்தி அவைகளை நடத்தும் மாதிரியைத்தெளிவுபடுத்தும் பொருட்டு அரசாங்கத்தின் கூட்டுறவுப் பிரசாரங்களைத் தூண்ட வேண்டும்.

பிரே: தலைவர்.

(19) நமது குலச் சீர்திருத்தத்திற்கு இன்றியமையாதன சங்கங்களாகையால் அவற்றை ஊர்தோறும் ஸ்தாபித்தல் வேண்டுமென்றும், அச் சீர்திருத்தமே முக்கிய நோக்கமாகக் கொண்டு வெளிவரும், நமது மித்திரனுக்குப் பல வழிகளிலும் வேண்டிய ஆதரவுகளை யளித்தல் வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரே: தலைவர்.

(20) ஈரோட்டில் கூடிய முதல் மகாநாட்டுக் கணக்கில் மிகுதியுள்ள தொகையைக் கோயமுத்தூர் சேலம் ஜில்லாக்களில் உள்ள செங்குந்த சங்கங்களின் பிரதிநிதிகள் கூடிய சபையில் ஒரு கமிட்டி தேர்ந்தெடுக்கப் பெற்றுப் பரிபாலித்து வர வேண்டுமென்றும் இதர ஜில்லாக்களில் கூடும் மகாநாடுகளின் கணக்கில் மிகுத்தப்படும் பணத்தை அவரவர்கள் இஷ்டப்பட்டால் சென்னையிலுள்ள செங்குந்தர் கல்விநிதிக்குக் கொடுக்கவேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மனிக்கிறது.

பிரே: தலைவர்.



(21) தமிழ் நாட்டு மக்களுக்கு உற்ற உயிர்த்துணையான சித்த வைத்தியத்தை ஆதரித்து நம் தலைவர்கள் நிர்வாகத்திலுள்ள ஸ்தலஸ்தாபனங்களிலெல்லாம் சித்த வைத்தியசாலைகள் ஏற்படுத்தும்படி முயற்சிக்கவேண்டுமெனவும் செங்குந்த மாணவர்கள் பலர் சென்னை இந்தியன் மெடிகல் காலேஜில் சித்த வைத்தியப் பகுதியில் பயிலும்படி முன்வரவேண்டுமெனவும் இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

பிரே: தலைவர்.

---

# தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாடு

## காஞ்சிபுரம்

(கண்டாரொருவர் கூற்று.)

### பிரதிநிதிகள்

காஞ்சீபுரத்திலுள்ள முக்கியமான தலைவர்கள் முன்னதாகவே மகாநாட்டு விஷயத்தில் தக்க முயற்சி எடுத்துக்கொள்ளாமையாலும், பொது ஜனங்களுக்குப் போதிய விளம்பரமில்லாமையாலும், வியாபார முடையால் செங்குந்தர்களுக்குச் சிறப்பாக ஏற்பட்டுள்ள கஷ்டத்தாலும், வெளி ஜில்லாக்களிலிருந்து பிரதிநிதிகள் எதிர்பார்த்த வண்ணம் வர இயலாமற் போயிற்று. மகாநாட்டுச் சமயத்தில் காஞ்சீபுரத்தில் காலரா என்ற வதந்தி சுற்றுப்பக்கங்களில் பரவியபடியால் செங்கற்பட்டு ஜில்லா வாசிகளும் பெருவாரியாக வரவில்லை.

எனினும், சென்னை, செங்கற்பட்டு, பிரஞ்சு இந்தியா, தஞ்சை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம், சேலம், கோவை, மலையாளம், கொச்சி ஆகிய 15 ஜில்லாக்களிலிருந்தும் இலங்கை, தென்னாப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளிலிருந்தும் சுமார் மூவாயிரத்திலிருந்து நாலாயிரம் பிரதிநிதிகள் வரையில் வந்திருந்தார்கள். செங்கற்பட்டு ஜில்லா நீங்கலாக வடஆற்காடு ஜில்லாக்காரர்களே பெருந் தொகையினராக வந்திருந்தார்கள். அதற்கடுத்தது (250 மைல்களுக்கு அப்பாலிருந்தபோதிலும்) கோவை ஜில்லாவாகும். கோவைஜில்லா செங்குந்தர்களது குலாபிமானமும் ஊக்கமும் மிகவும் பாராட்டத்தக்கவை. இவர்களே மற்ற ஜில்லாக்காரர்களுக்கு வழிகாட்டிகளா யிருப்பதன்றி முன்னேற்றத்தில் முதன்மை ஸ்தானத்திற் குரியவர்களென்று கருதவும் இடமிருக்கிறது.

### செங்குந்தர்களின் தீவிர முன்னேற்றம்.

இரண்டு வருஷங்களுக்குமுன் ஈரோடில் கூடிய முதல் மகாநாட்டுத் தீர்மானங்களையும் மே௴ 16, 17உகளில் இவ்வருஷம் கூடிய இரண்டாவது மகாநாட்டுத் தீர்மானங்களையும் ஒத்திட்டுப் பார்ப்பவர்களுக்கு இச் சமூகத்தவர் அடைந்துவரும் தீவிர முன்னேற்றம் விளங்காமற் போகாது. முதல் மகாநாட்டில் சட்டசபையிலும், தல ஸ்தாபனங்களிலும் தங்கள் இனத்தவருக்கு நியமன ஸ்தானங்கள் வழங்கவேண்டுமென்றும், உத்தியோகங்கள் தரவேண்டுமென்றும் அரசாங்கத்தாரைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். தங்கள் இனத்திற்குள்ளாகவே ஏற்பட்டுள்ள பல பிரிவுகளையும் ஒழிக்கும்பொருட்டு ஒற்றுமை மணம் செய்யலாம் என்ற தீர்மானத்தைப் பலத்த எதிர்ப்போடு நிறைவேற்றினார்கள். பெண்களுக்குச் சொத்துரிமை இருக்கவேண்டும் என்றும், விதவா விவாகம் பிரியமானவர்கள் செய்யலாம் என்றும் சிலர் கொண்டுவந்த தீர்மானங்களை விஷயாலோசனைக் கமிட்டியிலேயே தலைகாட்டவொட்டாமல் செய்துவிட்டார்கள். தங்கள் இனத்தவர் நெய்யும் துணிகளையே அணிந்துகொள்ள வேண்டும் என்று தீர்மானித்தார்களாயினும், கதர் இயக்கத்திற்குத் தெளிவான ஆதரவு தரவில்லை.

ஆனால் இந்த இரண்டாவது மகாநாட்டிலோ இனி அரசாங்கத்தாரை எவ்விஷயத்திலும் கெஞ்சிக் கேட்பதில் பயனில்லையென்றும், தங்கள் சொந்த முயற்சியினாலேயே முன்னேற முயலவேண்டுமென்றும் முடிவு கட்டிக்கொண்டார்கள். தங்கள் சமூகத்திற்குள்ளாகவே ஒற்றுமை மணம் செய்துகொள்ளலாம் என்ற தீர்மானம் யாதொரு எதிர்ப்புமின்றி ஏகமனதாய் நிறைவேறிற்று. முன்னர் விஷயாலோசனைச் சபையிலும் தலைகாட்டாத பெண்கள் சொத்துரிமைத் தீர்மானமும் விதவா விவாகத் தீர்மானமும் பகிரங்க மகாநாட்டில் கொண்டுவரப் பெற்று, எதிர்ப்பிருந்தபோதிலும் சில நிபந்தனைகளுடன் நிறைவேறின. கதரியக்கத்திற்கு இப்போது பூரண ஆதரவு அளிக்கப்பெற்றது. தேசாபிமானமும் ஓங்கி நின்றது.

சென்ற இரண்டு வருஷங்களுக்குள் இவர்கள் அடைந்துள்ள மாறுதல் மிகவும் போற்றத்தக்கதாயிருக்கிறது என்று சொல்லவும் வேண்டுமோ? எக்காலத்திலும் பிறர் உதவியை நாடாது சுயேச்சையாய் வாழ்ந்துவந்த செங்குந்தர்கள் சென்ற ஒன்று அல்லது ஒன்றரை நூற்றாண்டுகளாகப் பிற்போக்கை அடைந்திருந்தபோதிலும், விழிப்படைந்தவுடனே தங்கள் சுய அறிவை அதாவது தன் கையே தனக்குதவி என்ற அறிவை இரண்டு மூன்று வருஷங்களுக்குள்ளாகவே அடைந்துவிட்டார்கள் என நாம் அறியக் கிடக்கிறது. உறக்கத்தினின்று விழித்த உடனே முன்னேற்றத் துறையை நோக்கி வெகு விரைவாகச் சென்றுகொண் டிருக்கிறார்கள் என்று நன்கு விளங்குகிறது. இதே வேகத்தோடும், சுருசுருப்போடும் இச்சமூகத்தவர்கள் வேலைசெய்து வருவார்களாயின் சில வருஷங்களுக் குள்ளாகவே

முன்னணியிலுள்ள இந்திய சமூகங்களுள் ஒரு சமூகத் தலைவராக விளங்குவார்கள் எனக் கருத இடமிருக்கிறது.

### ஒற்றுமைக் குணமும் விட்டுக்கொடுக்கும் பெருந்தன்மையும்

ஈரோட்டு மகாநாட்டு மிகுதிப் பணம் கோவை, சேலம், ஜில்லாக்காரர்களிட மிருப்பதா? அல்லது சென்னையிலுள்ள செங்குந்தர் (பொதுக்) கல்வி நிதியில் சேர்வதா? என்ற விவாதம் சென்ற 2½-வருஷங்களாகக் கோவை ஜில்லாக்காரர்களுக்கும் மற்ற ஜில்லாக்காரர்களுக்கும் நடந்துவந்ததாகத் தெரிகிறது. இவ்விஷயத்தில் செங்குந்தர்களுக்குள் பிளவு ஏற்படுமோ என்றும் அநேகர் கருதினார்கள். திருவாளர்கள்:—திருவாரூர் தி. ந. சபாபதி முதலியார், சென்னை ம. சண்முகசுந்திர முதலியார், கோவை V. S. செங்கோட்டையா முதலியார், S. மீனாக்ஷிசுந்தர முதலியார், காஞ்சீபுரம் ம. த. சாமிநாத முதலியார் முதலிய தலைவர்கள் நன்முயற்சியால், ஒற்றுமையின் பொருட்டு இருதிறத்தாரும் விட்டுக்கொடுத்தல்வேண்டும் என்ற பெருநோக்கத்தால், ஒருவாறு முடிவுசெய்யப் பெற்றதானது சமூகத் தலைவர்களின் ஒற்றுமைக் குணத்தையும், பெருநோக்கத்தையும் காட்டுகிறது. இதைப்பற்றி ஆங்காங்குள்ள செங்குந்தர்கள் அற்ப காரணத்தை முன்னிட்டுக் கக்ஷிகள் ஏற்படுத்திப் பெருநஷ்ட மடைந்து நாளுக்குநாள் பொருளாதார நிலை முதலியவற்றில் பிற்போக் கடைந்து வருவதை அறவே ஒழித்து ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஒற்றுமையுற்று க்ஷேம மடைவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. இது செங்குந்தர்கள் இம் மகாநாட்டில் அடைந்த ஒரு பெரிய வெற்றி என்றே கூறலாம்.

தொண்டைவளநாடே செங்குந்தர்களுக்கு எல்லாம் தாயகம் என்பதை மறுப்பவர் யாருமில்லை. அந் நாட்டின் தலைநகராகிய காஞ்சீபுரத்தையே செங்குந்தர்கள் அனைவரும் தலைநகராகக் கருதி வருகிறார்கள். சென்ற எழுபது எண்பது வருஷங்களாகக் காஞ்சீபுரம் மகாநாடா அல்லது ஐயம்பேட்டை (காஞ்சீபுரத்திற்குக் கிழக்கே 2 மைல் தூரத்திலுள்ளது) மகாநாடா என்ற விவாதம் நடந்துகொண்டு வந்தது. இக்காரணத்தை முன்னிட்டுக் காஞ்சீபுரத்தாரும், ஐயம்பேட்டையாரும் சமூக சம்பந்தமான எந்தப் பொதுக் காரியத்திலும் இதுவரையில் ஒன்றுபட்டு உழைத்ததேகிடையாது எனத் தெரிகிறது. ஆனால் பல ஜில்லாக்களிலும், பல வெளி நாடுகளிலும் இருந்து தாய் நாட்டை நோக்கிவரும் சகோதரர்களை ஆர்வத்தோடு வரவேற்கவேண்டும் என்ற பெருநோக்க முடையவர்களாய் ஐயம்பேட்டைத் தலைவர்களும் காஞ்சீபுரத்துத் தலைவர்களும் தங்களுக்குள் இருந்த விவாதத்தை ஒருபுறம் ஒதுக்கி வைத்து இருதிறத்தாரும் ஒற்றுமையோடு நின்று இம் மகாநாட்டைச் சிறப்பாகத் தங்கள் தலைமை ஸ்தானத்தின் பெருமைக்குத் தகுந்தபடி நடத்திவைத்தார்கள் என்பது செங்குந்தர்கள் அடைந்த மிகப்பெரிய வெற்றியென்றே கூறலாம்.

---

## செங்குந்தர் வெற்றி முரசு

[திருவாளர் வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள், கண்டாச்சிபுரம்]

ஆநந்தக் களிப்பு

("தாயின் மணிக்கொடி பாரீர்" என்ற மெட்டு)

பல்லவி.

செங்குந்த வீரர்காள்! வாரீர்—நீங்கள்
சீரமாய் ஜாதிமுன் னேற்றத்தைக் கோரீர் (செங்)

சரணங்கள்

ஆதியில் சிவன்விழி வந்த—பொறி
யாறினிற் றோன்று மறுமுகன் சொந்த
சோதர ராம்நவ வீரர்—வழித்
தோன்றும் பெருமைகொள்சான்றோர்கள் நீரர்(செ)

சூரனை வேரற வீட்டி—அவன்
சுற்றங்கள் மாயவெம் போரிடை வீட்டி
வீரரெ னப்பெயர் பூண்டோர்—இந்த
மேதினி யிற்காஞ்சி மாநாட்டை யாண்டோர் (செ)

துராவி ரஞ்சிரம் வெட்டி—அதி
லொட்டக்கூத் தன்மகன் பாவாடை கட்டி
சீராயி ருந்ததன் மேலே—அன்று
செப்பினு னீட்டியெ ழுபதா றாலே (செங்)

சேவல்பு லிக்கொடி யுண்டு—நாம்
சேவிக்கக் கந்தன் குலதெய்வ முண்டு
ஆவலாய்ப் பகைவ்வரைக் கொல்ல—நமக்
காயுத மீட்டிப் படையுண்டு வெல்ல (செங்)

வல்லானை வென்ற வன்தேவி—வேண்ட
மாங்கல்ய மீந்துமே காத்தன ராவி
வில்லாரு கமனுக் கிங்கோலை—விட்டு
மீட்டன ரேழுபே ருயிரைமுன் போலே (செங்)

தில்லைக்கொ டியேற்று வித்தோர்—தர்க்கா
தேவிர தமோட்டி விழவாற்றி வைத்தோர்
எல்லையில் தியாகமுஞ் செய்து—உயி
ரீந்தனர் சாதிக்குத் தலைகளைக் கொய்து (செங்)

இத்தனை மாட்சியைப் பெற்றும்—இப்போ
தேங்கித் தவிப்பதேன் யோசிப்பீர் முற்றும்
சத்தியந் தவறியே விட்டோம்—கட்சிச்
சாதிச்சண் டையாலே தாழ்ந்துமே கெட்டோம்.()



கல்வியைக் கற்பது மில்லை—பொல்லா
சட்குடி யாலேய டைந்தோமே தொல்லை
செல்வத்தை யழித்திடுங் கள்ளே—அதைச்
சென்மப்ப கையெனச் சீக்கிரந் தள்ளே (செங்)

மதுபானம் விஸ்கிய ராக்கு—ஒயின்
வாங்கிக்கு டித்தல்சா ராயம்ப ராக்கு
இதுவாநங் குலத்தொழி லீனம்—சற்று
மில்லையோ வுங்கட் கிதிலவ மானம் (செங்)

எல்லாரு முன்னேறுங் காலம்—இதி
லேனோநாந் தாழ்ந்திட்டோங் கல்லாத கோலம்
பொல்லாத வஞ்சனை சூது—கொலை
புரிவது பொய்சொல்லல் களவுகள் தீது (செங்)

ஆங்கிலங் கற்றவர் கொஞ்சம்—நம்மி
லறிவற்ற பேர்களே அதிகமாய் மிஞ்சும்
ஓங்குந் தமிழ்க்கல்வி கூடக்—கற்றோர்
உண்மையில் வெகுசில ராகுமே தேட (செங்).

வறுமைக மக்காச்சு சொந்தம்—கெட்ட
வம்புவ ழக்குக ளெல்லாஞ்சம் பந்தம்
சிறுமையே பட்டுழல் கின்றோம்—இதைத்
தீர்க்கவ ழியின்றித் திகைத்துநிற் கின்றோம்(செங்)

சீமைத்து ணிமலி வாலே—வெகு
செலவிலை நந்துணி மிகுவிலை யாலே
தீமைத ரும்பிற நாட்டுச்—சாமான்
தேசத்தில் வாராம லேகடிந் தோட்டு (செங்)

நெய்தற்றொ ழிலொன்றை நம்பி—நாம்
நேர்மைகெட் டோமிடி யால்மிக வெம்பி
செய்தற்கொ ருதொழி லின்றிச்—சிலர்
தேங்கித்த விக்கின்றார் தம்மனங் கன்றி (செங்)

கைத்தறி ராட்டினம் போட்டு—வேண்டுங்
கதர்நூலு மாடையு முற்பத்தி காட்டு
மெத்தமெத் தலாப முண்டு—இது
வீணல்ல வுண்மைநந் தேசத்தின் தொண்டு (செங்)

ஆறுலட் சங்குந்த ராணும்—மெம்ப
ரானவர் சட்டச பைதனிற் காணோம்
வீறுமி கப்பேசி யென்ன—வெறும்
வேடிக்கை யல்லவோ வுயர்ந்தோ நாமென்ன (செ)

தாலுக்கா யூனியன் போர்டு—தனில்
ஸ்தானங்கள் வேண்டியே தலைமையை நாடு
மேலுக்கு வரலாநா மெங்கும்—அப்போ
மேவலாம் டிஸ்டிரிக்ட் போர்டினி லங்கம் (செங்)

இன்னல்கொண் டேழையாய்த் தூங்கி—நாம்
இருந்ததைத் தலைவர்க ளறிந்தன ரேங்கி
சென்னையில் நந்தலைச் சங்கந்—தனை
ஸ்தாபகஞ் செய்தனர் வியாபிக்க வெங்கும் (செங்)

செங்குந்த மித்திர னென்னும்—இதழ்
திங்கள்வெ ளியீடாய்ச் செய்தன ரின்னும்
நங்குல மாந்தர்பல் லோர்கள்—இதை
நன்கறி யாமலே துன்புறு வார்கள் (செங்)

ஒன்றரை ரூபாய்சந் தாதான்—இதை
உதவிய தைப்பெற வெண்ணுவீ ரேதான்
நன்றாகி ளைச்சங்க மூரூர்—தொறும்
நாட்டுவீர் நங்குல மோங்கவே சீரூர் (செங்)

சுபம்! சுபம்!! சுபம்!!!

---

## மகாநாட்டு வைபவம்

(காஞ்சிமாநகரில் நான் கண்டகாட்சி)

1. தலைவர்கள் கொலு வீற்றிருத்தல். (காஞ்சிபுரம் ரயில்வேஸ்டேஷன்.)

திருவாரூர்ச் சபாபதி வள்ளலார்
(பொன்னுலவு சென்னிகுளம்)

பல்லவி

சீருலவு பாரில் வளர் செங்குந்தர் குழுமி யிங்கு
சிந்தை மகிழ்ந்தாசனத் துட் காருமே!-சமூக
சீர்திருத்தம் சேவை செய்ய வாருமே!-இந்த

சுருள்

தேச மேவிய நேசரானவர்
வீசு மாதமிழ் பேசுமாறிவண்

ஷை

செய்த அற்புதங்கள் பல பாருமே!-நல்ல
சிங்காரப் பந்தர் சிறப்புஞ் சீருமே!-(சீருலவு)

எடுப்பு

தாரணி புகழும் கச்சி ம. த. சாமிநாதரொடு
தங்கவேல் முதலியாரது நாட்டமே-இங்குச்
சாரும்படி வந்ததின்றிக் கூட்டமே-இனி

சுருள்

சாலமின்றியூர்க் கோலம் வந்திட
மேளமும் பல பேரும் வந்தனர்

ஷை

சல்லியிலுடை யுடுத்திக் காட்டுவீர்!-தமிழ்
தங்கிடும் செங்குந்தர் குலம் நாட்டுவீர்!-(சீரு.)

### 2. வரவேற்புச் சபையினர்கள்

காஞ்சிபுரம், சாமிநாதர்—தங்கவேலர்கள்

(கோலாகல மயில்மீது வருங்குகனே)

பல்லவி

சீருள்ள தென்னிந்திய தேசத் தலைவர்களே!—
[செங்குந்த நேசரே!

சுருள்

வாருங்கள்! வாருங்கள்!! மன்னுந் தலைவரே!
வந்து மகிழ்ந்து மணக்களி கூறுங்கள் (சீருள்ள)

தொகையரு

வாருங்கள் காரினில் ஏறுங்க ளெங்களின் மலர்
[மாலை ஏற்றணிகுவீர்!
யாரும் கணிக்கரிய நஞ்சிரிலங்கிடற்கேற்றவிக்
[காஞ்சிநகரின்

எடுப்பு

இப்பொழுதெம் மொடுஞ் சித்தமுடன் வருவீர் !
[சுப நலந்தருவீர்!

சுருள்

ஓங்குடனுமே ஒன்றென நச்ச
உபசுப்பிரமண்யர் மரபென மெச்ச. (சீருள்ள)

தொகையரு

மருவார் மணக்குடி வருமொட்டக் கூத்தரின் வன்
[மையு மற்ற நலமும்,
திருவார் வளர்பிறை என்ன நஞ்சோதரர்
(தேசத்திலோங்க வேண்டும்.

எடுப்பு

சீக்கிரம் பிரசங்கம் செய்யப் புறப்படுங்கள்!
[மல ரணிந்திடுங்கள்!

சுருள்

ஊக்கமுடனே எழுங்கள்! துவஜம்
உயர்த்தக்குறித்த முகூர்த்த மாயிற்று. (சீருள்ள)

## 3. தமிழ்ப் புலவர்கள் 'ஜே' கூறுதல்

திரு. மா. முருகப்ப முதலி, மாணும்பதி.
ச. நா. குமரகுரு முதலி, மணவை.

(காட்சி கண் காட்சியே)

1. பல்லவி

சீர்ப்புகழ் பாடுவோம்! செங்குந்தருக்குரிய-சீர்ப்புக

அநுபல்லவி

வார்புகழ் சபாபதி வள்ளலுக்கு ஜே! ஜே!!
வையகம் புகழ் முத்தைய மந்திரிக்கு, ஜே! ஜே!!
தார்புகழ் சண்முகமாம் சுந்தரர்க்கு ஜே! ஜே!!
தாரணிபுகழ் மீனாட்சி சுந்தரர்க்கு, ஜே! ஜே!!
தாவு செங்கோட்டையாவுக்கு ஜே! ஜே!!-ஆர்வந்
தங்கிய செல்லப்பருக்கு ஜே! ஜே!!—அன்பு
மேவு வீம ராஜருக்கு ஜே! ஜே!!—சாமி
நாத தங்கவேலருக்கு ஜே! ஜே!!—என்று

சுருள்

மிகுப் பிரியரான குலத்தமர்கள் சூழ
தமிழ்ப் புலவர்பாட நமக்கினிமை கூட-சீர்ப்புக

## 4. தலைவர்கள் ஊர்வலம்

பொதுஜனப் புகழ்ச்சி

(சோமசேகரனருளும் பாலா வேலா)

பல்லவி

தொன்மை செங்குந்தர் புகழ் சொல்வோம்!
[சொல்வோம்!! குகன்
சோதரரிவரென் றன்பு கொள்வோம்! கொள்
[வோம்!—(தொன்மை

சரணம்

நன்மை மிகும்பன்னூட்டுக் கூட்டம் கூட்டம்-எங்கும்
நாகசுரமும் பல்வாத்ய கோட்டம் கோட்டம்-முன்
பன்மத கரிபரியின் ஓட்டம் ஓட்டம்-தமிழ்
பாவலருரைப்பருஞ் சிரேட்டம் சிரேட்டம்
(தொன்மை

எடுப்பு

நல்ல வீதியின் வனைவு நாட்டி, நாட்டி-கச்சி
நகரலங்காரத்துயர்ந்த பேட்டி, பேட்டி-கோயில்
எல்லையுள் வாருமென் றுகை நீட்டி நீட்டி-வர
வேற்பதென நின்றவாயில் காட்டி-காட்டி
(தொன்மை·

## 5. கோவை செங்கோட்டையா முதலியார் கொடியேற்று விழா

பொது—கொடிச் சிறப்பு

(விநோத சுந்தரபாலன்-விவேக தந்திர சீலன்)

பல்லவி

கொடியுயர்த்திய காட்சி அதைக் கூறுதல் பெரு
மாட்சி—குணக்
கோவை மேவு செங்கோட்டையா முதலி
தாவி வானின் சார்பை நாடி. (கொடியை

தொகையரு

காழியோர் பதிஞென்றில் நவீன போட்டோபடம்
[நாற்றிறமையோர் பிடிக்க,
கோழியோர் பால் ஒருபால் புலிவேல் நடுக்
[கொஞ்சு நற்றுவஜ முயர்வாய்க்

எடுப்பு

கும்மி புலவர் பாட-பல-நன்மை எங்கினும் நாட—
[முணம்
கோலமுடன் முன் ஈரோட்டின் கொடி
போலும் விண்ணினில் பொலிந்திடும்படி-
(கொடியை

## 6. தலைவர்கள் சபைஃ பூ மாலையிட்டு அனைவரும் ஜே கூறுதல்

(பாரதத்தாய் அம்பிகா, பஜனை பாடுவோம்.)

பல்லவி

சீர்மிகு செங்குந்தத் தலைவீர்! சிம்மாசனத்தமர்வீர்!
செப்புமுபசரியாசமியாவும் சிறப்புடனே—
[ஜே! ஜே!! ஜே!!!

எடுப்பு

வார்முடி வணங்குந் தோட்கும் மாலை சாற்றுவோம்
மாநிலச் செங்குந்த ரென்னும் மாந்தரியாவர்க்
[கும்—ஜே! ஜே!! ஜே!!! (சீர்மிகும்)



## 7. மகாநாட்டுத் திறப்பு விழா

திரு. ஆ. வே. முத்தைய முதலியார், (பி.எ., பி.எல்.,) புதுவை அரசாங்க அமைச்சர்.

(அம்மா மதுரை மீனாட்சி)

பல்லவி

இம்மா நிலத்தவரே கேளும் என்றும்
ஏற்றவறிவை யாளும், தமிழ்
இனிமையுட னுளும். (இம்மா)

எடுப்பு

சும்மா விருப்பது தகாது—உயிர்க்குச்
சொல்லும்பேதமேது, எடுத்துஞ்
சோதரர்க்கும் ஓது—இம்மா

ஷை

சேர்ந்த நிலைமைக்கிந்த கூட்டம்—வெறுந்
தொல்லையின்று வோட்டம்—பிடிக்கும்,
தோன்றுமினி நாட்டம் (இம்மா)

ஷை

குந்தர் குலத்தின் நிமித்தம்—கூடு
நாட்டைத் திறந்து வைத்தேம்—மிகுந்த
குளிர்மகிழ்வும் உற்றேம் (இம்மா)

## 8. தலைவர்கள் சொற்பொழிவு சாரம்

சபாபதி வள்ளலார்.

(தசரத ராஜ குமாரா)

பல்லவி

அவனி செங்குந்தர்களே! வாரும்!
வர்த்துட் காரும்!
நன்மை சேரும்
இனி பாரும்! (அவனி

நவசி தத்துப் பலவு மடங்கல் போலே
நாமுங்கச்சிப்பதியில் கூடுத லாலே
தவமுனுன் செய்தனமென் றியம்புத லாலே
தவரிலை அனைவரும் வாரும்
சொல்லைக் கோரும்,
இன்பம் சேரும்
நயம் . பாரும். (அவனி

ஷை

பற்பல சமூகமிக் கோரம்
வெகு தூரம்
செய்த வீரம்
பிர சாரம்
அற்புத மாக முன் அணியில் நின்றாரே
அரசினிய மனத்தை அன்டிச் சென்றாரே
மூற்பக துறக்கத்தால் நம்மை வென்றாரே
முழுதும் உரைக்க மனம் இல்லையே
வன்மை இல்லையே
வினைத் தொல்லையே
கேளென் சொல்லையே (அவனி)

## 9. மீனாட்சி சுந்தர முதலியார்

வாலிபர் மகாநாட்டுத் தலைவர்

(குருபரா சிவனே அதிபனே குறவள்ளி
கோனே—குமர)

பல்லவி

தேசாபிமவரே கேட்பீரே
செய்யும் நன்மைகளே இக்காலே

எடுப்பு

வீசும் பன்னலமும் சேமனமும்
மேன்மையும் பெறுவீர் இன்புறவீர். (தேசம்)

ஷை

ஒற்றுமை வேண்டும் உலகினோ (டு)
ஒழுகுதல் வேண்டும் என்ஞான்றும்

ஷை

கற்றிடல் வேண்டும் பலபாஷை
கருணையும் வேண்டும் சொன்னேன் கேள் (தேச

## 10. பல்வகைக் கிளர்ச்சி.

ஆசிரியர் திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ., எல். டி., அவர்கள்.

(வனஜாக்ஷி பகவதி குணநிதி—வனஜாக்ஷி)

பல்லவி

பெரியோரே சபையினி லமர்ந்திடும்-பெரியோரே

அநுபல்லவி.

தெரியிரு டன்மையின் தேசத்து வாழ்ந்தோம்
சிறுறும் பற்பல சமூகத்தின் தாழ்ந்தோம்
மருளுறு மனத்தின் வாஞ்சையில் ஆழ்ந்தோம்

(சுருள்)

மாசு போக்க, தேச நோக்கம் பேசு வோர்க்கும்—
ஏசு வாய்க்கும் (பெரியோரே)

அநுபல்லவி (எடுப்பு)

பற்பல சமூக முன்னேற்ற மிக் கோரம்
பாடுபட்டுச் சென்றதே வெகு தூரம்
சுற்ற னம்மவருக்கா [illegible]

(சுருள்)

கருணை கோரும், மகிமைக் காரும்,
தருணமாரும், தமிழைப் பாரும் (பெரியோரே)

## 11. படம் ஊர்வலம்.

(கட்டழகியே முனம்)

(பொது)

பல்லவி

கவிச்சக்கரவர்த்தி படம் எடுப்போமே [illegible]
கண்டு நமது வுளம் களிப் போமே
புவிச்சக்கர வர்த்திப்பேர் புனைந்தவ ரிவரே
பூவுலகி லறிவோர் பலதானே—நன்மை
தாவுமொட் டக்கூத்தர் நாமந்தானே—(கவிச்)

வள்ளலார் படமிட பாலீதே—இவர்
வந்தவூர் புகழ்திரு வாரூரே,

(எடுப்பு)

கள்ள மில்லாமலே—கருணை வழங்குமா
கனத்த பொருளளித்தோர் இவர்தானே-மித்ரன்
காசினி புலவீடும் கருத்தோடே (கவிச்)

## 12. போது: பல்வகைச் சிறப்பு:

(தங்கத்தினால் சதங்கை கட்டி
தரையில் விட்ட சேவல்)

சரணம் (தரு)

கண்மணியே தென்னிந்திய, செங்குந்தரின்
கூட்டம்—செங்குந்தரின் கூட்டம்—திரு
கச்சி புளார் செய்ய அன்ன சாலையின்கண்
ணோட்டம் அந்த
வெண்மலர் நேர் அன்னமும் விநோதமிட் டாய்
தோட்டம்—விநோத மிட்டாய் தோட்டம்
வேதியர் விசாரணையின் மேன்மைமிகும் கோட்டம்
எண்மணிபடி புணற்கு வாருமென்பர் சீராய்
வாருமென்பர் சீராய் இனி
எந்தஜில்லாக் காரர்களு மிங்கிருப்பீர் நேராய்-அவர்
துண்மணி யெனும்வாலிபத் தொண்டர்படை
யோரே—தொண்டர்படை யோரே
சொல்லுமன்பு முன்னொருக்கால் தோன்றமெனத்
தோராய் (கண்மணியே)

### தலைவர்கள் விடை பெறல்

(நீ நாம ரூப மூலகு)

பல்லவி

போய்வாரோம் எங்களூர்க்குப் புகழ்மிகுந்த நேயரே

அநுபல்லவி

ஆய்வார்பல் சாத்திரங்கள் அறிந்த உங்கள்
அன்பினுக்கே (போய்வாரோம்)
சீர்மிகுந்த தென்னிந்திய செங்குந்தர் குலம்விளங்க
நேருமிக்காடு கூடும் பலர்க்கும்
நித்யசுப மங்களம் (போய்வாரோம்)

ச. நா. குமாரகுரு முதலியார்,
தமிழ்ப்புலவர், கல்லாலம்பூண்டி.

---

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்

# இரண்டாவது அறிக்கைப் பத்திரம்

17—5—31-இல் காஞ்சிபுரத்தில் நடந்த சங்கத்தின் மூன்றாவது பொதுக் கூட்டத்திற்குச் சமர்ப்பிக்கத் தயாரித்தது.

### இரண்டாவது பொதுக்கூட்டம்

நமது தலைச்சங்கத்தின் புதுச் சட்டங்களின் படிக் கூட்டப்பட்ட முதல் பொதுக்கூட்டம் ஈரோட்டில் நம்மவர் முதலாவது மகாநாடு கூடிய சமயம் மகாநாட்டுப் பந்தலில் 21-1-29-இல் காலை 9-மணிக்குத் திரு. சைதாப்பேட்டை இரத்தினவேல் முதலியார் அவர்களின் தலைமையின்கீழ்க் கூடியது. அச்சமயம் சங்கத்தின் புதுச் சட்ட திட்டங்கள் அங்கீகாரமானதோடு கீழ்க்கண்ட கனவான்கள் தலைச்சங்கத்தின் உத்தியோகஸ்தர்களாகவும் நிருவாகசபை அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர் :

**தலைவர்**

திரு. ஆ. வே. முத்தைய முதலியார் அவர்கள், பி. ஏ., பி. எல்., பிரெஞ்சு அரசாங்கத்தின் தலைமை அமைச்சர், புதுச்சேரி.

**துணைத்தலைவர்கள்**

திரு. தெ. ப. கு. ஆறுமுக முதலியார் அவர்கள், பாங்கர், தென்காசி.

திரு. தி. ரா. கந்தப்ப முதலியார் அவர்கள், ஜில்லா தாலுக்கா போர்டு அங்கத்தினர், திருச்செங்கோடு.

திரு. அரு. சி. தியாகராஜ முதலியார் அவர்கள், மிராஸ்தார், (மதராஸ் பாளையகாட் கம்பெனி கூட்டாளி), மஞ்சட்கொல்லை.

திரு. சை. இரத்தினவேல் முதலியார் அவர்கள், தாலுக்கா போர்டு அங்கத்தினர், நகர பரிபாலன சபைத் துணைத்தலைவர், சைதாப்பேட்டை.

திரு. ச. குழந்தைவேல் முதலியார் அவர்கள், மானேஜர், பிங்கர்பிரின்ட் ஆபீஸ், போலீஸ் இலாகா, திருமயிலாப்பூர்.

**அமைச்சர்**

திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள், எம். ஏ., எல். டி., ஆசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்தர கலாசாலை, சென்னை.

திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள், தமிழ்ப் புலவர், காஞ்சிபுரம்.

**பொருட்காப்பாளர்**

திரு. தி. கா. சபாபதி முதலியார் அவர்கள், மிராஸ்தார், நகர பரிபாலன சபைத் துணைத்தலைவர், திருவாரூர்.



**இதர நிருவாக அங்கத்தினர்**

திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்கள், ஜெனரல் போஸ்டு ஆபீஸ், சென்னை (கோடம்பாக்கம்)

திரு. மா. பா. கந்தசாமி முதலியார் அவர்கள், பி.ஏ., பி.இ., (அசிஸ்டென்ட் எலக்ட்ரிகல் இன்ஜினியர்), திருவல்லிக்கேணி.

திரு. மு. சரவண முதலியார் அவர்கள், தலைமை யாசிரியர், கார்ப்பொரேஷன் மாடல் ஸ்கூல், திருமயிலாப்பூர்.

திரு. மா. பரமகுருநாத முதலியார் அவர்கள், சானிடரி இன்ஸ்பெக்டர், திருமயிலாப்பூர்.

மதராஸ் பாளையகாட் கம்பெனி மானேஜர் அவர்கள்.

திரு. சி. அருணாசல முதலியார் அவர்கள், காஞ்சிச் செங்குந்த மகாஜன சங்கக் காரியதரிசி, காஞ்சிபுரம், செங்கற்பட்டு ஜில்லா.

திரு. K. S. குப்புசாமி முதலியார் அவர்கள், அசனம்மாபேட்டை, வடஆற்காடு ஜில்லா.

திரு. வீ. இரத்தின முதலியார் அவர்கள், பி.ஏ., பி.எல்., அட்வொகேட், கொரநாடு.

திரு. R. மாணிக்க முதலியார் அவர்கள், மிராஸ்தார், உன்னியூர், திருச்சி ஜில்லா.

திரு. S. சாலை முதலியார் அவர்கள், மதுரை.

திரு. வா. செ. முருகேச முதலியார் அவர்கள், சென்னிமலை, கோயமுத்தூர் ஜில்லா.

திரு. ஆ. கு. சி. குழந்தைவேல் முதலியார் அவர்கள், வியாபாரம், அருப்புக்கோட்டை, இராமநாதபுரம் ஜில்லா.

திரு. P. A. கணபதி முதலியார் அவர்கள், பி. ஏ., அம்பாசமுத்திரம், திருநெல்வேலி ஜில்லா.

திரு. P. வேலாயுத முதலியார் அவர்கள், வியாபாரம், கோட்டாறு, திருவாங்கூர்.

திரு. K. P. சுப்பிரமணிய முதலியார், அவர்கள், பி. ஏ., பி. எல்., கொல்லங்கோடு, மலையாளம்.

அங்கீகரிக்கப்பெற்ற சட்ட திட்டங்களில் ஏதாவது மாறுதல் அவசியமா என ஆராய்ச்சி செய்து அபிப்பிராயங் கூற ஒரு ஆலோசனைச் சபை ஏற்படுத்தப் பெற்றது. அடுத்த மகாநாட்டினைக் காஞ்சியிலாவது குடியாத்தத்திலாவது கூட்ட அங்குள்ள பிரமுகர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டுமெனத் தீர்மானமானது. இக்கூட்ட இறுதியில் செங்குந்தருள் பழமையாகவும் புதுமையாகவும் சர்வகலாசாலைப் பட்டங்கள் பெற்றுள்ள அறிஞர்களுக்கு வாழ்த்துக் கூறப்பட்டதோடு, அவர்களுக்கெல்லாம் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற உப தலைவர்களுள் ஒருவரான திருவாளர் திருச்செங்கோடு ரா. கந்தப்ப முதலியார் அவர்களால் ஒரு விருந்தளிக்கப்பட்டது.

### மகாநாட்டு மலர்

மகாநாடு முடிந்ததும் அதன் வரலாற்றினையும், உபந்நியாசங்களையும், தீர்மானங்களையும் திரட்டித் தலைவர்கள் புகைப்படங்களுடன் மகாநாட்டு மலர் என்னும் ஒரு அறிக்கைப் பத்திரத்தினை 'மித்திரன்' ஆசிரியரும் தலைச்சங்க நிருவாகிகளும் வெளியிட்டனர்.

### செங்குந்தர் கல்வி நிதி

மகா நாட்டில் அங்கீகாரமான தீர்மானங்களில் ஒன்றில் கேட்டுக்கொண்டபடித் தலைச்சங்க நிருவாக சபையினர் ஏழைச் செங்குந்த மாணாக்கர்களுக்கு உபயோகமாகும்படி ஒரு சாசுவத நிதியைத் திரட்டுவதற்கு ஒரு கல்வி நிதிச் சீட்டினை ஆரம்பித்து நடத்தவேண்டுமென 1929-௵ மேமீ முடிவு கட்டினர். அதற்காகப் பிரசாரஞ்செய்து நம்மவர் வதியும் இடங்களிலெல்லாம் சீட்டினை விற்பனை செய்ய நமது தலைச்சங்கப் பிரமுகர்களாகிய திருவாளர்கள் பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்களும், தி. அ. சண்முக முதலியார் அவர்களும் பல மாதங்கள் அரும்பாடு பட்டனர். அவர்களோடு கௌரவப் பிரசாரகர்கள் சிலரும், சம்பளத்துக்கு அமர்த்திக்கொண்ட பிரச்சாரகர்கள் சிலரும் உழைத்தனர். சீட்டு விற்பனை முதலில் எதிர்பார்த்த அவ்வளவு அதிகமாக இராததினால், சீட்டுக் குலுக்குந் தேதி 1929-௵ அக்டோபர்மீ-த்திலிருந்து 1930௵ ஜெனவரிமீ 26உக்குத் தள்ளிவைக்கப்பட்டது. இடையே சீட்டு விற்பனைப் பிரசாரம் வெகு தீவிரமாக நடந்தது. குறிப்பிட்ட தேதியில் காஞ்சிபுரத்தில் ஸ்ரீகச்சபேசுரர் ஆலயத்தில் பல கனதனவான்கள் முன்னிலையிலும் செங்குந்த மகாஜனங்களின் முன்னிலையிலும் சீட்டுக் குலுக்கப்பெற்று 2567 பரிசுகள் அளிக்கப் பெற்றன. இதில் பல பிரமுகர்களும் குலாபிமானிகளும் பேரார்வம் காட்டித் தலைச் சங்கத்தோடு ஒத்துழைத்தமை மிகவும் பாராட்டற்பாலது. சிலர் தமக்குக் கிடைத்த பரிசுத்தொகைகளைத் தலைச்சங்கத்துக்கு நன்கொடையாகவும் அளித்துள்ளனர். இந்தச் சீட்டினால் 'செங்குந்தர் கல்வி நிதி'க்கு ஏறக்குறைய பத்தாயிர ரூபாய் எஞ்சியது. அதைப் பராமரிக்கக் கீழ்க்கண்ட கனவான்கள் கொண்ட

ஒரு காப்பாளர் சபையும் நியமிக்கப்பெற்றுள்ளது :

தலைவர்

திருவாளர் ஆ. வே. முத்தைய முதலியார், அவர்கள், பி. ஏ., பி. எல்., புதுவை.

உபதலைவர்

,, ம. சண்முக சுந்தர முதலியார், அவர்கள், எம். ஏ., எல். டி., சென்னை.

அமைச்சர்

,, மா. பா. கந்தசாமி முதலியார் அவர்கள், பி. ஏ., பி. இ., திருவல்லிக்கேணி.

பொருட்காப்பாளர்

,, வீ. இரத்தின முதலியார் அவர்கள், பி.ஏ., பி.எல்., கொரநாடு.

இதர அங்கத்தினர்கள்

,, தி. கா. சபாபதி முதலியார் அவர்கள், திருவாரூர்.

,, க. குழந்தைவேல் முதலியார் அவர்கள், திருமயிலாப்பூர்.

,, தெ. ப. கு. ஆறுமுக முதலியார் அவர்கள், தென்காசி.

,, வ. மு. மொட்டையப்ப முதலியார் அவர்கள், ஈரோடு.

,, மா. அ. கனகசபை முதலியார் அவர்கள், கோடம்பாக்கம்.

,, M. V. பீமராஜ முதலியார் அவர்கள், குடியாத்தம்.

,, R. மாணிக்க முதலியார் அவர்கள், உன்னியூர்.

,, அ. கு. சி. சிவசுப்பிரமணிய முதலியார் அவர்கள், அருப்புக்கோட்டை.

,, K. மாரிமுத்து முதலியார் அவர்கள், அம்மாபேட்டை, சேலம்.

,, S. இலட்சுமண முதலியார் அவர்கள், ஐயங்கார்குளம்.

,, K. V. இராமசாமி முதலியார் அவர்கள், வேலாயுதம் பாளையம்புதூர், (மதுரை ஜில்லா).

இச்சபையின் அமைப்பு, பொறுப்பு முதலியவற்றைப் பற்றிய சட்ட திட்டங்கள் 'மித்திர'னில் சென்ற கார்த்திகை௴ வெளியிடப்பெற்றன. எஞ்சியுள்ள தொகை மிகவும் சொற்பமாக இருப்பதால், மாணவர் விடுதியொன்றை ஏற்படுத்த வைத்திருக்கும் எண்ணம் தலைச்சங்கத்துக்கு இன்றும் நிறைவேறுமல் இருக்கிறது.

## இரண்டாவது மகாநாடு

கல்வி நிதி சம்பந்தமான வேலைகள் முடிந்ததும் காஞ்சிபுரத்தில் திரு. மா. த. சாமிநாத முதலியாரவர்கள் கூட்டித் தருவதாக ஒப்புக்கொண்ட இரண்டாவது மகாநாட்டு வேலைகளைத் தலைச் சங்கத்து நிருவாகிகள் (முக்கியமாகத் திருவாளர்கள் பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்களும், மா. அ. கனகசபை முதலியாரவர்களும், மா. பா. கந்தசாமி முதலியார் பி. ஏ., பி. இ., அவர்களும்) வெகு மும்மரமாகக் கவனிக்க வேண்டியதாயிற்று. வியாபார நெருக்கடியால் ஏற்பட்ட பணமுட்டுக் காரணமாக மகாநாடு கூடும் தேதி தள்ளிக் கொண்டேவந்து முடிவாக 1931-௵ மே௴ 16, 17உ களில் நடைபெறுமெனத் தீர்மானிக்கப் பெற்றது.

## பிரசாரம், சந்தா வசூல்: ஒத்தாசை யின்மை

முதல் மகாநாட்டு மலரைத் தயாரிக்க மூன்றுமாத காலமும் கல்வி நிதிக்காக ஏறக்குறைய ஒன்பதுமாத காலமும், இரண்டாவது மகாநாட்டைக் கூட்டுவதற்காகச் சுமார் ஒன்றரை வருஷ காலமும் இடைவிடாது தலைச் சங்க உத்தியோகஸ்தர்கள் உழைக்க நேர்ந்ததால், கிராமங்கள்தோறுஞ் சென்று கல்விப் பிரசாரஞ் செய்யவும், தூங்கிக்கொண்டிருக்கும் கிளைச்சங்கங்களைத் தட்டியெழுப்பவும், புதுச் சங்கங்கள் நிறுவவும், பத்திரிகையைப் பரப்பவும், பொதுவில் நம் மக்களிடையே பல ஜில்லாக்களிலும் புத்துணர்ச்சியையும் கிளர்ச்சியையும் உண்டாக்கவும் இயலாமற் போயிற்று. பத்திரிகைக்குப் பாக்கியாக நிற்கும் சந்தா தொகைகளை ஒழுங்காக வசூலிக்கவும் முடியவில்லை. உண்மையாக உழைப்பவர்களின் தொகை நம்மிடையே என்றும் அதிகமில்லாத குறையே இதற்கெல்லாம் காரணம். மூன்று நான்கு பொறுப்பாளிகளே மொத்த பாரத்தையும் சுமந்து ஓய்வு சாய்வின்றி உழைக்க வேண்டுமென ஏற்பட்டதால், பல வேலைகளைக் கவனிக்க முடியாமலும், அவசரமாகக் கவனிக்க வேண்டியவைகளையும் தீர்மையாகக் கவனிக்க முடியாமலும் போயிற்று. இதனால் முக்கியமான வேலைகள் இன்னும் பல துவக்கப்படாமல் நிற்பதோடு, துவக்கப் பெற்றுள்ளவற்றையும் திருப்திகரமாக நடத்த முடியவில்லை. சந்தாத் தொகை வசூலாகாததால் சங்கத்துக்குப் பணமுட்டு வெகு நிர்ப்பந்தமான நிலையில் ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து விடுதலையடைவதும் சுலப சாத்தியமாகத் தோன்றவில்லை. பிக்சட் டெபாசிட்டின்மீது அடிக்கடி பாங்கில் கடன் வாங்க வேண்டி யிருக்கிறது. இந்நிலையில் உண்மை உழைப்பாளர்களுக்குச் சலிப்பும் சஞ்சலமும் ஏற்படுவது சகஜமே. தமது ஊக்கத்தைக் கண்டு மற்றவர்களும் ஊக்கத்தோடு உடனுழைக்க வர்லாம் என்று எதிர்பார்த்தவர்களுக்கு இந்நிலை மிக்க ஏமாற்றத்தை உண்டு பண்ணி யுள்ளது. உண்மையாக உழைக்கக்கூடிய குலத் தொண்டர்கள் புதிது புதிதாகக் கிளம்பிப் பழந் தொண்டர்களுக்கு உற்சாகமும் ஓய்வும் இனியும் அளிக்காமலிருந்தால், குல முன்னேற்ற விஷயம் இனி அவர்களுக்குச் சலிப்பைத் தந்து அவர்கள் மனதை முறியச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை. எது எவ்விதமாயினும், சுயநலமற்ற உண்மைத் தொண்டர்கள்மீது ஆதாரமற்ற வீண் பழிகளைச் சுமத்தி அவர்களைத் தூற்றுமலிருந்தால் போதும்.

## உபகாரச் சம்பளம்

இத்தனை இடைஞ்சல்களிடையிலும் ஏழை மாணவர்க்கு அளிக்கப்பெறும் உபகாரம் நடை பெற்றுக்கொண்டு வந்திருக்கிறது. 1929-30-இல் 25 மாணவர்களுக்கும், 1930-31-இல் 35 மாணவர்களுக்கும் உபகாரச் சம்பளம் அளிக்கப்பெற்றது. ஆனால் தலைச்சங்கத்தின் தற்காலத்திய பொருளாதார நிலையில் இவ்வருஷத்திற்கு அனுமதிக்கப்பெற்ற உபகாரச் சம்பளங்களில் ஒரு பகுதி இன்னும் அவற்றிற்குரிய மாணுக்கர்களுக்குச் செலுத்தப்பெறுமல் இருக்கிறது.

## பத்திரிகை

இவ்வித இடையூறுகளுக் கெல்லாம் அஞ்சாது 'மித்திரன்' வளர்ந்துகொண்டு வருகிறான். ஆயினும் அவனுக்கும் சந்தாதாரர் ஆகிய பராமரிப்பவரது அசிரத்தையால் பால் சோறு இரசஞ்சோறுகவும், தினத்துக்கு நான்கு வேளைச் சுவையுண்டி ஒரு வேளைக் கஞ்சியாகவும் மாறிக்கொண்டு வருகிறது. இந்நிலையில் தக்க போஷிப்பின்றி அவன் நெடுநாள் உயிர் வாழ்வது எங்ஙனம்? 'மித்திர'னை அலங்கரிப்போர் இருந்தாலும், போஷிப்பவரின் வாங்கினுல் அலங்கரிப்போர் யாது செய்ய முடியும்? 'மித்திர'னின் தொண்டுகளையும் ஆற்றலையும் உணர்ந்தவர்கள், மற்றவர்களையும் அவற்றை உணரச்செய்து, அவனைப் பட்டினி போட்டுக் கொல்லாமலிருப்பார்க ளென்றே எதிர் பார்க்கப் பெறுகின்றனர். சந்தா நேயர்கள் தமது சந்தா பாக்கிகளை உடனுக்குடன் அனுப்பி விடுவதே இதற்குத் தக்க பரிகாரமாகும்.

## சட்ட சபை

நம்மினத்துப் பிரதிநிதி யொருவரைச் சட்ட சபைக்கு நியமனஞ்செய்ய வேண்டுமெனத் தலைச்சங்கமும் அதன் கிளைச்சங்கங்களும் கேட்டுக்கொண்டும் அவ்வேண்டுகோளைத் துரைத்தனத்தார் கவனிக்காது விடுத்தது நம்மவரிடை மிக்க அதிருப்தியை உண்டாக்கி யிருக்கின்றது. தேவஸ்தான பரிபாலன கமிஷனர் பதவியில் இருந்த செங்குந்த கனவான் ஒருவரை மீண்டும் அந்த ஸ்தானத்தில் நியமிக்க வேண்டும் எனத் தலைச் சங்கத்தினரும் கிளைச் சங்கத்தினரும் கேட்டுக் கொண்டதையும் துரைத்தனத்தார் கவனிக்கவில்லை. ஆயினும், இவ்விஷயங்களில் தலைச் சங்கத்தினரும் கிளைச் சங்கத்தினரும் எவ்வளவு பிரயாசை யெடுத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவும் எடுத்துக்கொண்டனர் என்பதே ஒரு சிறந்த ஆறுதலாம்.

## கிளைச்சங்கங்கள்

கிளைச்சங்கங்களின் தொகை சென்ற அறிக்கையிற் காட்டி யதைவிடத் தற்போது மிகுந்திருப்பது திருப்திக்கிடமானதே. ஆயினும் அவற்றுள் பல கட்டணங்களைச் செலுத்தாமலும், யாதொரு கிளர்ச்சியுமின்றி உறங்கிக் கொண்டும், கட்சிச் சண்டைகளில் அகப்பட்டுத் தத்தளித்துக்கொண்டும் இருப்பது வருத்தத்துக்கு இடமான விஷயமேயாகும். தலைச் சங்கத்தோடு இணைக்கப்பட்டுள்ள சங்கங்களின் ஜாபிதாவும், இன்னும் இணைக்கப் பெறுத சங்கங்களின் ஜாபிதாவும் அனுபந்தத்தில் அச்சிடப்பெற்றுள்ளன.

## மகமை, திருமண நன்கொடை முதலியன

காஞ்சிபுரம், சைதாப்பேட்டை முதலிய வியாபார ஸ்தலங்களிலுள்ள செங்குந்த வியாபாரிகள், சென்ற அறிக்கை வருஷத்தில் தலைச்சங்கத்துக்கு அளித்து வந்த மகமைப் பணத்தினையும் நன்கொடைகளையும் இவ்வறிக்கை வருஷம் மாதம் மாதம் குறைத்துக் கொண்டு வந்து, முடிவில் அடியோடு நிறுத்தி விட்டனர். சென்னையிலும் காஞ்புரத்திலும் உள்ள மதராஸ் பாளையகாட் கம்பெனியார் மட்டும் இவ்விஷயத்தில் தளரா ஊக்கத்தோடு மகமைப பணம் தண்டித் தலைச்சங்கத்துக்கு உதவி வருகின்றனர். கீழையூர், கல்லாலம் பூண்டி, கலவை, உன்னியூர், பாண்டமங்கலம் தென்னுபிரிகா முதலிய இடங்களிலுள்ள செங்குந்த கனவான்கள் தமது இல்லங்களில் நிகழும் சுப சடங்குகளுக்குத் தலைச்சங்கத்துக்கும் மித்திரனுக்கும் நன்கொடை அளித்து

வருகின்றனர். இவர்கள் குலாபிமானத்துக்கு நன்றி செலுத்துகின்றோம்.

மரணம்

இவ்வறிக்கை வருஷத்தில். திருவாளர் திருச்செங்கோடு ரா. கந்தப்ப முதலியார் அவர்களின் மரணம் நேர்ந்தது யாவருக்கும் கன வருத்தத்தை யுண்டாக்கியுள்ளது. முதலியார் அவர்கள் முதல் மகாநாட்டைச் சொபிக்கச் செய்த கனவான்களுள் முதன்மையானவர் என்பதை யுன்னுந்தோறும் அவ் வருத்தம் அதிகமாகின்றது. அவரைக் கவுரவப்படுத்துவதற்காகத் தலைச்சங்கத்தின் உபதலைவர் இடங்களில் ஒன்று காலியாய் வைக்கப்பெற்றுள்ளது.

ராஜிநாமா

இவ்வறிக்கை வருஷத்தில் சென்ற பிப்ரவரியீ திருவாளர் ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி., அவர்கள் சொந்த அலுவல்களின் நிர்ப்பந்தத்தையும் உடல் நலனையும் அனுசரித்துத் தலைச்சங்க அமைச்சர் பதவியினின்றும் விலகிக் கொண்டார். சங்கத்தின் தற்போதைய அமைப்பினை ஒரு இராஜாங்க அமைப்பை ஒக்கத் தயாரித்து, அதை வெகு சாமர்த்தியமாக நான்கு வருஷ காலம் நிருவகித்துச் செங்குந்தர் கிளர்ச்சியினை மிக உன்னத நிலைக்குக் கொண்டு வந்ததோடின்றி, 'மித்திர'னையும் பல இடையூறுகளிடையே நான்கு வருஷ காலம் மிக்க திறமையுடனும் அழகுடனும் நடத்திவருகிற திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்களின் குலத் தொண்டுகள் எஞ்ஞான்றும் மறக்கற் பாலன வல்ல. அவர்க்குச் செங்குந்த உலகம் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. திரு. முதலியார் அவர்கள் இடத்தில் தற்காலிகமாக மதராஸ் பானையகாட் கம்பெனி மானேஜரும் கவர்ன்மென்ட் பென்ஷனருமாகிய திரு. சொ. முருகைய முதலியார் அவர்கள் நியமிக்கப் பெற்றுள்ளனர். பத்திரிகையை நடத்துவதில் திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்களுக்கு ஒத்தாசை புரியத் திருவாளர்கள் மா. அ. கனகசபை முதலியார் அவர்களும், வீ. இரத்தின முதலியார் பீ. ஏ., பி. எல்., அவர்களும் வேண்டிக் கொள்ளப்பெற்றுள்ளனர்.

வரவு செலவு

தலைச்சங்கத்தின் வரவு செலவு கணக்கு ஆதி முதல் 11—5—31 வரை கீழே குறிக்கப்பெற்றுள்ளது:—

ஆரம்ப முதல் 11—5—31 வரை

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் வரவு செலவுக் கணக்குகள்

வரவு

| | ரூ. அ. பை. |
|---|---|
| நன்கொடை | 3288— 1—11 |
| உண்டியல் | 5239— 2—1 |
| கிளைச்சங்கக் கட்டணம் | 494— 8—0 |
| புத்தகம் படம் முதலிய விற்பனை | 126— 4—6 |
| வட்டி வரவு | 588— 2—1 |
| மித்திரன் சந்தா | 9771— 8—9 |
| விளம்பரக் கட்டணம் | 167— 8—0 |
| கல்வி நிதிச் சீட்டு விற்பனை | 18850—10—6 |
| பாங்கில் வாங்கிய கடன் | 1600— 0—0 |
| | 40070— 8—10 |

செலவு

| | ரூ. அ. பை. |
|---|---|
| சிப்பந்திகள் சம்பளம் (சங்கம்) | 2827—12—6 |
| ,, (சீட்டு) | 1793—13—8 |
| பிரசார செலவு (சங்கம்) | 1176— 0—0 |
| ,, (சீட்டு) | 808— 9—9 |
| காகிதம், கணக்குப் புத்தகம் முதலியன (சங்கம்) | 828— 8—0 |
| ,, (சீட்டு) | 78— 0—0 |
| மேஜை நாற்காலி முதலியன | 170— 3—8 |
| தபாற்செலவு (சங்கம்) | 189— 1—0 |
| ,, (பத்திரிகை) | 2827—10—9 |
| ,, (சீட்டு) | 364—13—0 |
| வண்டிக்கூலி, சாப்பாடு, எடுபிடிக்கூலி, இரும்பு முதலிய சில்லரைச் செலவுகள் (சங்கம்) | 828— 8—0 |
| ,, (பத்திரிகை) | 78—13—3 |
| ,, (சீட்டு) | 58— 0—9 |
| அச்சுக்கூலி (பத்திரிகை, சங்கம்) | 6896— 0—9 |
| ,, (சீட்டு) | 1025— 5—3 |
| காகிதம் (பத்திரிகை) | 2778—14—8 |
| பினாக்குபன் ,, | 292— 4—9 |



| | |
|---|---|
| உபகாரச் சம்பளம் | 2042—11—8 |
| சீட்டுப் பரிசுகள் | 3674— 8—6 |
| பிரசாரகர்கள், மாணுக்கர்கள் முதலியோர்க்குக் கடன் கொடுத்துள்ளது | 572— 4—8 |
| வியாசப் பரிசுகள் | 10— 0—0 |
| தமிழ்நாடு, திராவிடன் சந்தா | 12— 0—0 |
| குடிக்கூலி | 888— 1—0 |
| பாங்கியில் கடனுக்குக் கட்டியது | 536— 5—6 |
| செங்குந்தர் கல்வி நிதிக்குக் கொடுத்த தொகை | 10000—0—0 |
| மகாநாட்டுச் செலவுக்கு அனுமத்துக் கணக்கில் கொடுத்துள்ளது. | 51— 0—0 |

இருப்பு

| | |
|---|---|
| இந்தியன் பாங்கியில் பிக்ஸட் டிபாசிட்டில் உள்ள தொகை | 1500— 0— 0 |
| பாங்கியில் இருப்பு | 491— 6— 9 |
| | 40070—8—10 |

இங்ஙனம்,
நிருவாக சபையின் உத்தரவுப்படி,
சொ. முருகைய முதலியார்,
பி. செ. மாணிக்கவாசக முதலியார்,
அமைச்சர்கள்.

## தலைச்சங்கத்தோடு இணைக்கப் பெற்றுள்ள கிளைச்சங்கங்களின் ஜாபிதா.

சென்னை

1. சென்னைச் செங்குந்த வாலிபர் சங்கம்
2. சென்னைச் செங்குந்த வியாபாரிகள் சங்கம்
3. திருவல்லிக்கேணி வீரவாகு தேவர் சங்கம்
4. திருமயிலைச் செங்குந்த வாலிபர் சங்கம்

செங்கற்பட்டு ஜில்லா

5. காஞ்சிச் செங்குந்த வாலிபர் சங்கம்
6. ஐயன்பேட்டைச் செங்குந்தர் வளர்நிலைக் கழகம்
7. ஐயங்கார் குளம் செங்குந்தர் சங்கம்
8. மானும்பதி செங்குந்தர் சங்கம்
9. பெருநகர் செங்குந்தர் சங்கம்
10. உத்திரன்மேரூர்ச் செங்குந்த குலாபிமான சங்கம்
11. கருங்குழி மேலவலம்பேட்டைச் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்
12. சிறுகுளத்தூர் செங்குந்த வாலிபர் சங்கம்
13. பெரிய கயப்பாக்கம் செங்குந்த வாலிபர் சங்கம்
14. மணிமங்கலம் செங்குந்தர் சங்கம்
15. கன்றச்சேரி செங்குந்த வாலிபர் சங்கம்
16. கோடம்பாக்கம் செங்குந்தர் சங்கம்
17. சைதாப்பேட்டை செங்குந்தர் சங்கம்
18. வட திருநாகேஸ்வரம் செங்குந்த வாலிபர் சங்கம்
19. சிவபுரம் செங்குந்தர் சங்கம்

வடஆற்காடு ஜில்லா

20. குருவராஜப்பேட்டை செங்குந்த வாலிபர் சங்கம்
21. அம்மையப்பட்டுச் செங்குந்தர் சங்கம்
22. கொடுங்காலூர் செங்குந்தர் சங்கம்
23. பொன்னூர் செங்குந்தர் சங்கம்
24. அசனம்மா பேட்டை செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்
25. திருப்பத்தூர் செங்குந்தர் சங்கம்
26. மின்னல் உண்மைச் செங்குந்தர் பொதுநலச் சங்கம்

27. கலவைச் சுந்தர விநாயகர் செங்குந்த சங்கம்
28. வடமணப்பாக்கம் செங்குந்தர் சங்கம்

### பிரேஞ்சு இந்தியா

29. பிரெஞ்சு இந்திய செங்குந்தர் சங்கம், புதுவை
30. காரைக்கால் செங்குந்தர் சங்கம்

### தஞ்சை ஜில்லா

31. திருவாரூர் செங்குந்த மகாஜன சங்கம்
32. மஞ்சட் கொல்லை செங்குந்த மகாஜன சங்கம்
33. திருமருகல் செங்குந்த குலாபிமான சங்கம்
34. வாழுமங்கலம் செங்குந்தர் குலாபிவிருத்தி சங்கம்
35. புத்தகரம் செங்குந்தர் குலாபிவிருத்தி சங்கம்
36. சுந்தரப் பெருமாள் கோயில் சைவ சமரஸ சன்மார்க்க செங்குந்தர் சங்கம்

### திருச்சி ஜில்லா

37. உன்னியூர்ச் செங்குந்தர் சங்கம்
38. கட்டிப்பாளையம் செங்குந்தர் சங்கம்
39. கரூர் செங்குந்தர் சங்கம்
40. மண்ணச்சநல்லூர் செங்குந்தர் சங்கம்

### சேலம் ஜில்லா

41. திருச்செங்கோடு செங்குந்த மகாஜன சங்கம்
42. மோகனூர் உண்மைச் செங்குந்தர் சங்கம்
43. சேலம் அம்மாபேட்டை செங்குந்த மகாஜன சங்கம்
44. வேலகத்தம் செங்குந்த மகாஜன சங்கம்
45. பள்ளிபாளையம் சன்மார்க்க செங்குந்தர் சங்கம்

### கோவை ஜில்லா

46. ஊத்துக்குழி உண்மைச் செங்குந்தகுல சங்கம்
47. சென்னிமலை செங்குந்தர் சங்கம்
48. பவானி செங்குந்தர் சங்கம்
49. பவானி செங்குந்த சன்மார்க்க வாலிபர் சங்கம்
50. மருதவரைகீழல் வடவழி செங்குந்தர் நன்னெறிக் கழகம்
51. கணபதி உண்மைச் செங்குந்த வாலிபர் சங்கம்
52. வள்ளிபுரத்தான் பாளையம் செங்குந்தர் ஒற்றுமைச் சங்கம்
53. ஜம்பைச் செங்குந்த வாலிபர் சங்கம்
54. சித்தோடு செங்குந்தர் சங்கம்
55. வடசித்தூர் செங்குந்தர் சங்கம்
56. சிவகிரி செங்குந்தர் சங்கம்
57. மொரட்டுப்பாளையம் செங்குந்த வாலிபர் சங்கம்
58. கோவை ஜில்லா செங்குந்த வாலிபர் சங்கம்

### மதுரை ஜில்லா

59. மதுரைச் செங்குந்தர் சங்கம்
60. வண்டியூர் செங்குந்தர் சங்கம்
61. சோழவந்தான் செங்குந்தர் சங்கம்

### இராமநாதபுரம் ஜில்லா

62. மண்டலமாணிக்கம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்
63. அருப்புக்கோட்டைச் செங்குந்த மகாஜன கிளைச்சங்கம்
64. இராமேஸ்வரம் செங்குந்த பரிபாலன சங்கம்
65. பரமக்குடி செங்குந்தர் சங்கம்
66. ஸ்ரீவில்லிபுத்தூர் செங்குந்த வாலிபர் சங்கம்

### திருநெல்வேலி ஜில்லா

67. திருநெல்வேலி செங்குந்தர் சங்கம்
68. தென்காசி செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்
69. அம்பா சமுத்திரம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்
70. வீரவநல்லூர் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்
71. சங்கரநாயனர் கோயில் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

### மலையாளம் ஜில்லா

72. கொல்லங்கோடு செங்குந்தர் சங்கம்
73. பாலப்புரம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

### திருவாங்கூர் இராஜ்ஜியம்

74. கோட்டாறு செங்குந்தர் சங்கம்

### சிலோன்

75. யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்குச் செங்குந்த முதலிமார் சங்கம்

### தென்னாப்பிரிக்கா

76. டிரான்ஸ்வால் செங்குந்தர் சங்கம்



## தலைச்சங்கத்தோடு இணைக்கப்பெறாத சங்கங்கள்

### செங்கற்பட்டு ஜில்லா

1. திருமழிசைச் செங்குந்தர் வாலிபர் சங்கம்
2. திருப்புலிவனம் செங்குந்தர் சங்கம்

### தென்னாற்காடு ஜில்லா

3. உடையார்குடி செங்குந்த மாணவர் சங்கம்
4. லால்பேட்டை செங்குந்த ஞானப்பிரகாச சங்கம்

### தஞ்சாவூர் ஜில்லா

5. உள்ளிக்கடை செங்குந்தர் சங்கம்

### திருநெல்வேலி ஜில்லா

6. கீழப்பாவூர் செங்குந்தர் சங்கம்
7. சிந்தாமணி ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வர செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

### மதுரை ஜில்லா

8. திருப்பரங்குன்றம் ஸ்ரீ கந்தலீலை சகோதர செங்குந்த சங்கம்

### சேலம் ஜில்லா

9. அம்மாபேட்டை செங்குந்த இளைஞர் அபிவிருத்தி சங்கம்
10. சின்னப்பநாய்க்கன் பாளையம் செங்குந்த இளைஞர் சைவ சித்தாந்த சங்கம்
11. வெண்ணந்தூர் செங்குந்த குலாபிமான சங்கம்

### கோயமுத்தூர் ஜில்லா

12. வச்சனம்பாளையம் நன்னெறிச் செங்குந்தர் சங்கம்
13. விளாங்குறிச்சி செங்குந்த வாலிபர் சங்கம்
14. புஞ்சை புளியம்பட்டி செங்குந்தர் சங்கம்
15. குளத்துப்பாளையம் செங்குந்தர் முன்னேற்றக் கழகம்

### மலையாளம்

16. சோரனூர் செங்குந்த வாலிபர் சங்கம்

### வடஆற்காடு

17. தக்கோலம் செங்குந்த சங்கம்

### பிரேஞ்சு இந்தியா

18. திருமலைராஜன்பட்டணம் செங்குந்த வாலிபர் சங்கம்.

---

## செங்குந்தர் கல்வி நிதி : காப்பாளர் சபையின் இரண்டாவது கூட்டம்

செங்குந்தர் கல்விநிதிக் காப்பாளர் சபையின் இரண்டாவது கூட்டம் இரண்டாவது மகாநாடு கூடிய சமயம் 1931-ஆம்௵ மேமீ 17௳ ஞாயிற்றுக்கிழமை காலை 8-மணிக்குக் காஞ்சீபுரம் கச்சபேசுரர் ஆலயத்தின்கண் மகாநாட்டுப் பந்தலில் உபதலைவர் ம. சண்முக சுந்தரமுதலியார் எம். ஏ., எல். டி., அவர்கள் தலைமையில் கூடியது. இக் கூட்டத்துக்குக் கீழ்க்கண்ட கனவான்கள் வந்திருந்தனர்:—

திருவாளர் ம. சண்முக சுந்தரமுதலியார் எம். ஏ., எல். டி., அவர்கள்
,, தி. கா. சபாபதி முதலியார் ,,
,, M. V. பீமராஜ முதலியார் ,,
,, R. மாணிக்க முதலியார் ,,
,, வா. மு. மொட்டையப்ப முதலியார்
,, S. லக்ஷ்மண முதலியார் ,,
,, V. ரத்தின முதலியார், பி. ஏ., பி. எல்.
,, M. A. கனகசபை முதலியார் ,,
,, M. B. கந்தசாமி முதலியார் பி. ஏ. [பி. இ. (காரியதரிசி)

முன் கூட்டத்து நடவடிக்கைகளின் அறிக்கை அங்கீகாரமானதும், செங்குந்தர் கல்வி நிதியை ரிஜிஸ்டர் செய்தற்குரிய தஸ்தாவேஜுகள் தயாரிக்கப்பெற, அவற்றில் வந்திருந்த அங்கத்தினர் கையொப்பமிட்டனர்.

கல்விநிதியின் சட்டதிட்டங்களில் இரண்டு மாறுதல்கள் செய்யப்பெற்றன: அவையாவன:

1. 'காப்பாளர் சபையினர்க்குப் புது அங்கத்தினர்களை அவசியம் நேரிடும்போது சேர்த்துக்கொள்ள அதிகாரமுண்டு' என்பது சேர்க்கப்பட்டது.

2. 'மகாநாடுகள் கூடும் சமயம் மகாநாட்டுக் கூட்டத்துக்கு முன் வருஷத்துக் கணக்கும் நிருவாக அறிக்கையும் சமர்ப்பிக்கவேண்டும்' என்பது 'வருஷா வருஷம் ஜூன்மாதத்தில் ஏப்ரல்மீ முடிய முன்வருஷத்துக் கணக்கையும் நிருவாக அறிக்கையையும் பிரசுரப் படுத்தவேண்டும்' என மாற்றப்பட்டது.

கல்விநிதியின் மூல தனத்தைப் பெருக்குவதோடு மகாநாட்டிற்கு விஜயஞ் செய்திருந்த கனவான்களிடமிருந்து நன்கொடை வசூலிக்க வேண்டுமென்று தீர்மானமானதோடு, முதல்முதல் காப்பாளர் சபையின் அங்கத்தினருள் ஒவ்வொருவரும் தம்மாலியன்ற தொகையைக் கல்விநிதிக்கு மூல தனமாக வழங்கவேண்டுமெனவும் முடிவானது. உடனே கூட்டத்துக்கு வந்திருந்த அங்கத்தினர் கீழ்க்கண்டவாறு கையொப்பமிட்டனர்.*

---

* இதர கனவான்களும் அன்றே மகாநாட்டுப் பந்தலில் கீழ்க்கண்ட தொகைகளை வாக்களித்துக் கையொப்பமிட்டனர்:—

திருவாளர் தி. க. தி. கலியாணசுந்தர முதலியார், [ரூ 501-0-0
,, S. K. M. முருகைய முதலியார், [ரூ 251-0-0

திருவாளர் தி. நா. சபாபதி முதலியார் ரூ 1001-0-0
(இதில் ரூபாய் 500/-முன்னமே செலுத்தியுள்ளார்)
திருவாளர் M. V. பீமராஜா முதலியார் ரூ 250-0-0
,, R. மாணிக்க முதலியார் ரூ 250-0-0
,, S. லக்ஷ்மண முதலியார் ரூ 250-0-0
(இதில் ரூபாய் 100/- முன்னமே செலுத்தியுள்ளார்)
,, மா. பா. கந்தசாமி முதலியார் ரூ 150-0-0
,, ம. சண்முகசுந்தரமுதலியார் ரூ 100-0-0
,, வி. இரத்தின முதலியார் ரூ 100-0-0
,, வ. மு. மொட்டையப்பமுதலியார், ரூ 100-0-0
,, மா. அ. கனகசபை முதலியார் ரூ 50-0-0

1931 - 32-ஆம் வருஷத்துக்கு அளிக்கவேண்டிய உபகாரச் சம்பளங்களுக்கு சென்ற வருஷத்தில் அமுலிலிருந்த சட்டதிட்டமுறைகளை அனுசரிக்கலாம் என்றும் தீர்மானமானது.

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்
## மூன்றாவது பொதுக் கூட்டம்

நமது தலைச் சங்கத்தின் மூன்றாவது பொதுக் கூட்டம் காஞ்சீபுரம் கச்சபேசுரர் ஆலயத்தில் இரண்டாவது மகாநாட்டுப் பந்தலில் மேமீ 17-ம் உ ஞாயிற்றுக்கிழமை பகல் 2 மணிக்குத் திரு உன்னியூர் R. மாணிக்க முதலியார் அவர்களது தலைமையின்கீழ்க் கூடியது. பல கிளைச்சங்கங்களின் பிரதிநிதிகளும் அங்கு விஜயஞ் செய்திருந்தனர்.

தலைச்சங்கத்தின் இரண்டாவது அறிக்கைப் பத்திரமும் வரவு செலவுக் கணக்கும் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்களால் வாசிக்கப்பெற்றன. (இவை மற்றோரிடத்தில் பிரசுரமாயுள்ளன.)

நிருவாக சபையில் சிபார்சு செய்தபடி சட்டதிட்டங்களில் சில மாறுதல்கள் செய்யப்பட்டன.

(இவை மற்றொரு சஞ்சிகையில் வெளி வரும்)

திருவாளர் பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் தமது பிரசாரகர் ஸ்தானத்தையும் திரு. ம. அ. கனகசபை முதலியார் அவர்கள் தமது நிருவாக அங்கத்தினர் ஸ்தானத்தையும் ராஜிநாமா செய்து எழுதிய கடிதங்களைப் பல பிரமுகர்கள் அவர்களின் உண்மை உழைப்பை உன்னி வாபீஸ் வாங்கிக்கொள்ளும்படி கேட்டுக் கொண்டதன்மேல் அவர்கள் வாபீஸ் வாங்கிக்கொண்டனர்.

சென்ற பொதுக் கூட்டத்துக்கும் இப் பொதுக் கூட்டத்துக்கும் இடையில் சர்வகலாசாலைப் பட்டம் பெற்ற * செங்குந்த இளைஞர்களுக்குத் திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ., எல். டி., அவர்கள் வாழ்த்துக் கூற, தலைவர்க்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

ம. சண்முகசுந்தர முதலியார், ஆசிரியர்.

---

திருவாளர் V. S. செங்கோட்டையா முதலியார், ரூ 250-0-0
,, சா. இரா. தங்கவேலு முதலியார், ரூ 101-0-0
,, மா. கங்காதர முதலியார் ரூ 101-0-0
,, ஈரோடு. கு. வையாபுரி முதலியார், ரூ 101-0-0
,, மாணம்பதி கு. முருகப்ப முதலியார் ரூ 50-0-0
,, மா. கு. [illegible]நாத முதலியார் ரூ 25-0-0
,, சேனைநிறைம் த. ஆதிமூல முதலியார் ரூ 25-0-0
,, வெ. மு. [illegible]சாமி முதலியார் ரூ 25-0-0
,, மா. ந. சோம[illegible]ர முதலியார் ரூ 25-0-0
,, ஆம்பூர் பூசல்[illegible]சிகாமணி முதலியார் ரூ 25-15-0
,, வை. விநாயகர் முதலியார் ரூ 25-0-0
,, மாணம்பதி [illegible] பசுபதி முதலியார் ரூ 25-0-0
,, ஆ. திருவேங்கட முதலியார் ரூ 25-0-0
,, T. K. குழந்தைவேலு முதலியார் ரூ 25-0-0
,, பட்டணம் முனுசாமி முதலியார் ரூ 15-0-0
,, மா. அன்னப்ப முதலியார் ரூ 15-0-0
,, இராமேஸ்வரம் ச. மு. மருதவீர பாண்டிய முதலியார் ரூ 12-8-0
,, திருக்கழுக்குன்றம் மு. முத்துமுனியப்ப முதலியார் ரூ 10-0-0
,, ச. சிவஸ்வாமி தேசிகர் ரூ 10-0-0
,, காஞ்சீபுரம் வே. முனிசாமி முதலியார் ரூ 10-0-0
,, குருவராஜப்பேட்டை V. வச்சிரவேல் முதலியார் ரூ 5-0-0
,, முதலிபாளையம் அ. கன்னியப்ப முதலியார் ரூ 5-0-0
,, அய்யங்கார்குளம் க. பாலகிருஷ்ண முதலியார் 5-1-0

கோவை திரு. க. பெருமாள் முதலியார் தமது மண்டி கடையில் வரும் மகமையில் அடுத்த சித்திரை மாதம் வரை வரும் தொகையில் பாதி கொடுப்பதாய் ஒப்புக்கொண்டு கையொப்பமிட்டிருக்கிறார்.

முதல் மகாநாட்டுச் சமயம் நமது கல்வி நிதிக்கு நன்கொடையாக ரூ 500-0-0 வழங்குவதாக ஆரணி சைதாப்பேட்டை திரு. S. A. ஆலால சுந்தர முதலியார் கையொப்பமிட்டுள்ளார்.

---

* பட்டதாரிகள்:—
1. K. P. சுப்பிரமணிய முதலியார், பி. ஏ., பி. எல். (கொல்லங்கோடு)
2. S. கணேச சங்கர முதலியார், பி. ஏ., பி. எல். (வேலூர்)
3. K. வச்சிரவேலு முதலியார். பி. ஏ. (காஞ்சி)
4. C. நடராஜ முதலியார் பி. ஏ. (காஞ்சி)
5. K. சுப்பிரமணிய முதலியார், பி. ஏ. (ஆனர்ஸ்) (கோட்டாறு)
6. S. P. ஸ்ரீராம் முதலியார், பி. ஏ. (சென்னை)
7. M. தக்ஷிணாமூர்த்தி முதலியார், பி. ஏ. (சென்னை)
8. C. முத்துக்குமாரசாமி முதலியார், பி. ஏ. (சென்னப்ப நாய்க்கன் பாளையம்)
9. ஜெ. தங்கவேல் முதலியார், பி. ஏ. (சென்னை)


12-9-29 செம்மனுப்பட்டி,

ஐயா, ** மின்சார ரசத்தை எருமை வெண்ணையில் கலந்து சாப்பிட்டதில் வெள்ளை, வெட்டை சவுகரியமாய் விட்டது. தயவு செய்து 3-புட்டி அனுப்புங்கள்.

தொந்தி செட்டியார், வாடிபட்டி போஸ்டு.

ஐயா, ராசிப்பாளையம் கிராமம்

மின்சார ரசம் வாங்கி 4½-வருஷமாக இருந்த விப்புருதி 10-நாட்களுக்குள் புண் ஆறிப் போனபடியால் தயவு செய்து இன்னும் ஒரு புட்டி அனுப்புங்கள்.

த. அ. அங்கப்ப தேவர், சூலூர் போஸ்டு.

# மின்சார ரசம்

சகல ரோகங்களுக்கும் தேவாமிர்தம் போன்றதென ஜகப்பிரசித்திப் பெற்றது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம்.

புட்டி 1-க்கு ரூ. 2. தபால் சார்ஜ் வேறு

விலாசம்:— கேட்லாக் இனாம்.

மின்சார ரசம் கம்பெனி (லிட்) சேலம்

ஐயா Champion Reafs. 27-1-30

என் மனைவிக்கு 7 வருஷ காலமாக என்னால் இயன்ற வரை ஏராளமான பணத்தைச் செலவு செய்து தீராயலிருந்த வியாதி தங்கள் மின்சார ரசத்தினால் சௌக்கியமாய் விட்டது இன்னும் ஒரு பாட்டல் அனுப்புங்கள்.

R. V. Kattaari ,G. Block, 53rd Line

ஐயா, ஆரணி 21-5-29

** 6-வேளை மின்சார ரசம் மருந்தில் கால் விழுந்து கிடந்த நோய் தீர்ந்தது இன்னும் 2-பாட்டல் அனுப்புங்கள்


M. A. ஆளவந்தார் பாகவதர், பிச்சல் தெரு.



## சைதாப்பேட்டை செங்குந்த கோட்டத்தில்
## ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருநாள்

நினைத்தார்க்கு முத்தி யளிப்பதெனப் பேர் பெற்ற திருவண்ணாமலை என்னும் அருணையம் பதியிலே செங்குந்தர் குலத்திலே முருகப் பெருமானருளா லவதரித்து, அவரருட்டிறத்தாலேயே "உதிருங்கனியை நறும்பாகில் உடைத்துக் கலந்து தேனை வடித்தூற்றி யமுதினுடன் கூட்டி யொக்கக் குழைத்த ருசி பிறந்து மதுரங் கனிந்த திருப்புகழ்" அருளிச்செய்து, சிவபக்தர்களனைவராலும் வழிபட்டேத்தப்படும் ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளது திருநக்ஷத்திரத் திருவிழா பிரசோற்பத்தி ஆண்டு ஆனித் திங்கள் 15-ஆம் நாள் (29-6-31) திங்கட்கிழமை யன்று செங்குந்த கோட்டத்தில் வெகு சம்பிரமமாக நடந்தேறியது. அன்பர் பலர் கண்டு பக்திப் பரவையிற் படிந்தனர்.



## சுதேசி மருந்துகளை ஆதரியுங்கள்.







**வியாபாரிகளுக்கு நல்ல லாபம் தரக்கூடியது நமது**

# (புட்டி 1-க்கு ரூ. 1—4) தேவரசம் (புட்டி 1-க்கு ரூ. —4)


எல்லாவிதமான ஜுரங்கள் க்ஷயம், காசம், இருமல், மூச்சுத் திணருதல், ஜலதோஷம், . ல்வலி,
மண்டை இடி, ஒத்தத் தலைவலி, கை கால் குடைச்சல், இடுப்பு வலி, நெஞ்சு வலி, வாய்வு ம்பந்த
வியாதிகள், வாத ரோகம், பிளேக்கு, காலரா, அஜீரணம், வயிற்றுப் போக்கு, வயிற்று வலி, ல்வலி
வாய்நாற்றம், வாய்புண், வாந்தி, அசதி, ஜன்னி, சூதக ஜன்னி முதலிய திடீர் என்று ற்படும்
எல்லாவித வியாதிகளுக்கும் உடனே உபயோகப்படுத்தலாம். ஒரு தரம் பரீக்ஷை பாருங்கள். டங்கள்
ஊரில் வியாபாரிகளிடம் கேழ்க்கவும். கிடைக்காவிட்டால், உடனே எங்களுக்கு எழுதிப் ற்றுக்
கொள்ளவும்.

விலை புட்டி, ரூ. 1—4—0 V. P. வேறு




## தேவாமிர்தம்.

குடலைப்பற்றிய எல்லா வியாதிகளையும் போக்கும். அன்றாடம் மலப்பிரவர்த்தியை கிரமமாகச் செய்யும். குன்மம் மூலாதார உஷ்ணம், மூலமுளை, மூலத்தில் ரத்தம் வருதல், மலச்சிக்கல் முதலிய வியாதிகளைப் போக்கும். விவரம் கேட்லாக் பார்க்கவும். 1 சேர் டின் ரூ. 2—0—0.




## மதனசிந்தாமணி லேகியம்

அபாரமான தாதுபுஷ்டியையும், சீடித்த போக சக்தியையையும், இழந்த ஆண்மையும் பறமானந்த சந்தோஷத்தையும் கொடுக்கும்.

ஒரு சேர் டின் 1-க்கு ரூ. 3—0—0 V. P. வேறு.

## டாக்டர் எஸ். பி. வைத்தியசாலை

### தபால் பெட்டி நெ. 169, 149, பிராட்வே, மதராஸ்.

குறிப்பு:—நமது செங்குந்த மரபினரான, டாக்டர் S. பழனியப்ப முதலியாரால் தயார் செய்யப்படும் மருந்துகள் மிகவும் மேலான குணத்தைக் கொடுப்பதால் எல்லோரையும், உபயோகிக்குமாறு சிபார்சு செய்கிறேன். ஆசிரியர் ம. ஷண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., மதராஸ்.


This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Senguntha Mahajana Sangam, Madras, at 31, Armenian St., Madras, and is printed by A. Rangaswamy, at The Progressive Printers, 2-17, Coral Merchant St., Madras.